# தமிழ்த் தொண்டர்

THE MADURA TAMIL SANGAM

**வித்துவான் பாலூர் து. கண்ணப்ப முதலியார்**

*தலைமைத் தமிழ் ஆசிரியர், கெல்லட் உயர்நிலைப் பள்ளி*

திருவல்லிக்கேணி : : சென்னை

**வி. எஸ். வெங்கடராமன் & கம்பெனி**

பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

உரிமைப் பதிவு ] 1951 [ விலை 12 அணா

முதற் பதிப்பு; நவம்பர் 1951

அச்சிட்டோர்:

காமன்வெல்த் பிரஸ்

21, அப்பர்சாமி கோயில் தெரு

மயிலாப்பூர் : : சென்னை - 4

# முன்னுரை

ஈடும் எடுப்பும் அற்ற இன்றமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர் ஓர் இனத்தார், ஒரு சமயத்தார் அல்லர்; எல்லா இனத்தாரும், சமயத்தாரும் தம்மாலான தொண்டினைச் செய்து, அம்மொழியினை வளம் படுத்தியுள்ளனர். அதன் பயனாகவே தண்டமிழ் மொழியில் பல நூல்கள் திகழ்கின்றன. அப்படித் தொண்டாற்றிய அரும்பெரும் புலவர்களுள் சைன சமயத்தவரான இளங்கோ அடிகளார், பௌத்த மதத்தினரான சீத்தலைச் சாத்தனார், சைவ நெறியினரான சேக்கிழார் பெருமான், வைணவ கொள்கையினரான கம்பர், இஸ்லாமிய சார்புடையரான உமறுப் புலவர், கிறித்துவச் சமயத்தவரான வீரமா முனிவர் ஆகிய அறுவர் வரலாறுகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இக்காரணம்பற்றியே இந்நூல் 'தமிழ்த் தொண்டர்' என்ற பெயரினைப் பெற்றது.

இவர்களது வரலாற்றுடன் இவர்கள் இயற்றிய நூல்களின் பொருள் நயமும் கவி நயமும் ஒருசிறிது இந்நூலின்கண் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. "கொழுச் சென்ற வழித் துன்னூசி யினிது செல்லுமாறு" இந்நூல், அவர்களது முதனூல்களைக் கற்கச் சாதகமாகவும், வழிகாட்டியாகவு மிருக்குமென்னும் துணிபுடையேன்.

இந்நூலைத் தமிழ் உலகம் விரும்பியேற்று, என்னை இத்துறையில் ஊக்குவிக்க வேண்டுகிறேன்.


"அம்மையப்பர் அகம்" — இங்ஙனம்

77, அவதானம் பாப்பையர் வீதி — பா. து. க.

சூளை, சென்னை.

12—11—'51

# உள்ளுறை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இளங்கோவடிகள் ... | 1 |
| 2. | சீத்தலைச் சாத்தனார் ... | 18 |
| 3. | சேக்கிழார் ... | 31 |
| 4. | கம்பர் ... | 49 |
| 5. | உமறுப் புலவர் ... | 71 |
| 6. | வீரமா முனிவர் ... | 91 |

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *



கம்பர்

# தமிழ்த் தொண்டர்

THE MADURA TAMIL SANGAM

## 1. இளங்கோவடிகள்

### சேர மரபின் பழமை

தண்டமிழ் மொழியில் தலைசிறந்து விளங்கும் ஐம்பெருங் காவியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் என்னும் சீரிய நூலை யாத்தவரே இளங்கோ அடிகளார் ஆவார். அன்னாருடைய வாழ்க்கை வரலாற்றைச் சிறிது ஈண்டுச் சிந்திப்போமாக.

திருவள்ளுவர் தம் பொருட்பாலில், குடிமை என்னும் இயலில்

> " வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
> பண்பிற் றலைப்பிரிதல் இன்று."

என்னும் குறளைப் பாடியுள்ளார். அன்னதற்கு உரை கூறிய பரிமேலழகர், தம் விளக்கவுரையில், "பழமையாவது தொன்றுதொட்டு வருதல்; அது சேர சோழ பாண்டியர் என்பதுபோல ஆதிகாலந் தொடங்கி மேம்பட்டுவருதல் என்பதாம்" என்று கூறியுள்ளார். இதனால் தமிழ்நாட்டுப் பழங்குடி மூவேந்தர்தம் குடி என்பது புலனாகிறது அன்றோ? இப் பழங்குடிகளுள் ஒன்றாகிய சேரர் குடி, சிறப்புடைய குடி என்பது சேர, சோழ, பாண்டியர் என்னும் வைப்பு முறையில், முதன்மைக்கண் வைத்துப் பேசப்பட்டு வருதலாலும், சேரர்கட்கு

வானவர் என்னும் சொல் இலக்கியங்களில் பெய்யப் பட்டிருத்தலாலும், ஒல்காப் பெருமைத் தொல் காப்பியனாரும் மூவேந்தரது மலர்களைக் குறிக்கையில், ''போந்தை, வேம்பே ஆரெனவரூஉம் மாபெருந் தானையர்'' என முதற்கண் சேரர் மாலையை வைத்திருப்பதனாலும் ஒருவாறு உணர லாம். சோழ பாண்டியர்கள் தம்மை, முறையே சூரிய மரபினர், சந்திர மரபினர் என்று கூறிக் கொள்ளுதற்கேற்பச் சேரர்கள் தம்மைத் தீக்கடவுள் மரபினர் எனச் சொல்லிக்கொள்ளும் சிறப்பு வாய்ந்தவர்கள். இதனை வில்லியார் தம் பாரதத்தில், ''இவன் செந்தழலோன் மரபாகி, ஈரேழுலகம் புகழ் சேரன்'' என்று குறிப்பிட்டிருத்த லால் நன்கு உணரலாம்.

இச் சேரமரபினர் பாரத காலத்திலும் பெருஞ் சிறப்புடன் வாழ்ந்தவர்; கௌரவ பாண்டவர்கள் போரிட்டபோது அவர்கள் படைகள் சோர்வுற் றிருக்க 'உண்டி கொடுத்து ஊக்கமூட்டிய' உதியஞ் சேரல் செயலால் இதனைத் தெற்றெனத் தெளிய லாம். இதனைப் புறநானூறு என்னும் புராதன நூல் ''ஈரைம் பதின்மரும் பொருதுகளத்தொழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத் தோய்'' என்று கூறி மகிழ்கிறது. சேரர் புகழ்களையே செப்புதற்குரிய நூல் பதிற்றுப்பத்து என்னும் பெயரால் இன்றும் இருப்பதிலிருந்தும் இம் மரபினர் அருமையையும் பெருமையையும் நன்கு அறியலாம்.

## இளங்கோவடிகளாரின் பெற்றோரும் உற்றோரும்

இன்னோரின் சீரும் சிறப்பும் வாய்ந்த சேரர்குடியில் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் மன்னன் இற்றைக்குச் சற்றேறக்குறைய 2000 ஆண்டுகட்கு முன்னர், சேரநாட்டு மன்னனாய்த் திகழ்ந்துவந்தனன். இமய வரம்பன் என்னும் அடைமொழி, இப்பெரு வேந்தனது வடநாட்டு வெற்றியை அறிவிப்பதாகும். இதனால், இமயம் வரை சென்று ஆண்டுளாரை வென்று மீண்டு, அன்னதற்கு அறிகுறியாகத் தன் குலக் கொடியாகிய விற்பதாகையினை இமயத்து நிலை நிறுத்தி மீண்டான் என்பதும் புலனாகிறது.

> " ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
> தென்னங் குமரியொ டாயிடை
> மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே "

எனப் பதிற்றுப்பத்து நூல் கூறுவதில் இருந்து உணர்ந்துகொள்க.

நெடுஞ்சேரலாதனுக்கு இரு இல்லக் கிழத்தியர் வாய்த்தனர். ஒருத்தி சோழன் மணக்கிள்ளியின் மகளாகிய நற்சோணை என்பவள்; மற்றொருத்தி வேளாவிக் கோமானான பதுமன் என்பான் மகள். இவள் பெயர் இன்னது என்பதை அறிதற்கில்லை. நற்சோணை ஈன்ற மக்களே செங்குட்டுவனும், இளங்கோ அடிகளும் ஆவார். பதுமன் மகள் பெற்ற மைந்தர்கள் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் ஆவார். இவ்விரு மைந்தருள் களங்காய்க் கண்ணி, நார்முடிச் சேரன் அரச மரபிற்கேற்ற அருஞ்

சிறப்புடன் வளர்க்கப்பட்டு, அரியாசனம் ஏறும் நன்னுள் வந்துற்றபோது, இவன் தலையில் சூட்டுதற்குரிய கண்ணியும் முடியும் பகைவேந்தரால் களவாடப் பட்டமையின், முடிசூட்டற்கென அமைத்த நல்லோரை தவருதிருக்க, உடனே அவ்விரண்டிற்கும் பதிலாகக் களங்காயால் ஆகிய கண்ணியும், நாரால் சமைத்த முடியும் இவனுக்குச் சூட்டப்பட்டு அரியாசனத்தில் அமர்த்தப்பட்டான். இக் காரணத்தால் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என இவன் அழைக்கப் படுவானுனன். இவனது தம்பியான ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் நன்முறையில் வளர்க்கப்பட்டு, நல்லரசு நடாத்தும் நன்னிலை பெற்ற காலத்துச் செய்த வீரச் செயல்கள் பலவாகும். அவற்றுள் ஒன்று தண்டகாரணியத்தில் இருந்தவர்கள், ஆடுகளைக் கவர்ந்த காரணத்தால், அவர்களை வென்று அன்னூர் கொண்டுசென்ற தகரினங்களைத் தந்து தன் தொண்டிமாநகரில் சேர்ப்பித்த காரணத்தால் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் எனப்பட்டான்.

இளங்கோ அடிகளாரின் திருத்தாதை நெடுஞ் சேரலாதன் என்பதும், அடிகளாரின் தமையன் செங்குட்டுவன் என்பதும் முன்னர் அறிவிக்கப்பட்டன. நெடுஞ்சேரலாதன் சிறந்த போர்வீரன். இவன் அஞ்சாநெஞ்சம் படைத்த ஆண்மையாளன் என்பது வேல் பல் தடக்கைப் பெருவிறல் கிள்ளியுடன் போரிட்டமையில் இருந்து உணரலாம். மேலும், இவன் சிறந்த சிவ பக்தன் என்பதும் தெரிகிறது. அவ்விறைவனுர் திருவருள் பெற்றே தன் முதல் திருமகனை செங்குட்டுவனைப் பெற்றெடுத்தவன் என்பது

" செஞ்சடை வானவன் அருளினில் விளங்க வஞ்சித் தோன்றிய வானவ " எனச் சிலப்பதிகாரத்துக் கால்கோட் காதையடிகளால் காணலாம். இதனை மேலும் அறுதியிட்டு உறுதியாகக் கூறவேண்டுமானால், " ஆனை நூர்ந்தோன் அருளில் தோன்றி, மாநிலம் விளக்கிய மன்னவன் " என அதே நூலில் வருந்தரு காதையின் அடிகளால் அறிந்துகொள்ளலாம். இச் செங்குட்டுவனுக்குப் பின்னர் பிறந்த திருமகனாரே இளங்கோ அடிகள் ஆவார். இவர் இயற்பெயர் இன்னதென அறியக்கூடவில்லை. ஆனால், இவரைச் 'சேர முனி' என அடியார்க்கு நல்லார் அழைப்பர். இவர் அரச மரபிற்கேற்ப இளவரசுப் பட்டம் எய்துதற்குரியர் என்னும் காரணம் பற்றியும், செங்குட்டுவன் தம்பி எனும் முறைமை பற்றியும் இளங்கோ என அழைக்கப்பட்டிருக்கலாம் என்பது யூகித்தற்குரியது. ஆனால், இவர் அரசும் பெற்றிலர், இளவரசுப்பட்டமும் அடைந்திலர்; கடைசியில் துறவுகொண்ட தூயராய் விளங்கினர்.

## இளங்கோ அடிகளார் துறவு

இளங்கோ துறவு பூண்டமைக்குக் காரணமும் உளது. அதாவது, நெடுஞ்சேரலாதன் தன் அத்தாணி மண்டபத்தே அமைச்சர், புரோகிதர், சேனைத் தலைவர், தூதுவர், சாரணர் ஆகிய ஐம்பெருங் குழுவும், கரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் ஆகிய எண்பேராயமும் புடைசூழத் தன் மைந்தர்களான செங்குட்டுவனும் இளங்கோவனும் இருமருங்கிருக்கச் செம்பியரும் தென்னரும்

தன்னடி போற்றும் தகைமையோடு இனிது வீற்றிருந்தனன். அப்போழ்தத்து ஆண்டு ஒரு நிமித்திகன் போந்தனன்.

நிமித்திகன் என்பான் சோதிடனுவான். சோதிட வல்லுநர் நம் நாட்டில் பலர் இருந்திருக்கின்றனர். சோதிடரைக் கணியன் என்று கன்னித் தமிழ் கழறுதல் உண்டு. அப்படிக் கணியராய் இருந்த புலவர் ஒருவரும் "கணியன் பூங்குன்றனுர்" என அழைக்கவும் படலானுர். நம்மவர் சோதிடக் கலையின் நுண்ணறிவை நம் தமிழ் நூல்களில் பலபடக் காணலாம். 'மகத்தில் புக்கதோர் சனியெனக் காணுய்' என்பது ஆளுடை நம்பிகளது அன்பு மொழியாகும். இத்தகைய கலையில் வல்லான் ஒருவன் தன் அவைக்கு வரக்கண்ட அண்ணல் நெடுஞ்சேரலாதன், நல்வரவு கூறி நல்லிருக்கை ஈந்து அமரச் செய்தனன். அறிவுடைக் கணியர்கள் கணக்கிட்டுத்தான் சோதிடப்பலன் உரைத்தற்குரியர் என உரைத்தற்கில்லை; ஒருமுறை ஒருவரை ஏறஇறங்கப் பார்த்த மாத்திரையில் பலனைக் கூறவல்ல அத்துணை நுண்ணறிவு படைத்தவர்கள். அவர்களுள் நெடுஞ்சேரலாதனைக் கண்டு செல்லவந்த கணியன், கைதேர்ந்த அனுபவம் வாய்ந்த நிமித்திகன் ஆதலின், அரசனுக்கு இரு மருங்கினும் அமர்ந்த இரு பெருங் காளையர்களான செங்குட்டுவனையும் இளங்கோவையும் உற்று நோக்கினன். முன்னவன் மூத்தவன் என்பதையும், பின்னவன் இளையவன் என்பதையும் உணர்ந்துகொண்டனன். வந்த நிமித்திகனது வாட்கண் பார்வை இளங்கோவையே கூர்ந்து கவனிக்கத் தூண்டியது. அதனுல், மீண்டும் ஒருமுறைக் கிருமுறை இளங்கோவை ஏற

இறங்கப் பார்த்தனன். பார்த்து முடிந்தபிறகு, உள்ளதை உள்ளவாறு உரைக்கும் உரம் படைத்திருந்த காரணத்தால், சேர மன்னனை நோக்கி, "மன்னர் பெரும! நும் மருங்கு வீற்றிருக்கும் இருவரும் உம் அருமைத் திருமக்கள் என்பதை அறிகின்றேன். அரச மரபின் முறைமைக்கு ஏற்ப, உமக்குப் பின்னர் அரசக் கட்டில் ஏறுதற்குரியர் மூத்த மகன் என்பது முறைமையேயானாலும், அப்பதவி ஏற்றற்குரிய இயல்புகள் அனைத்தும், நும் இளைய மகனுக்கே இயைந்துள்ளன. மூத்த மகன்பால் அரசு பெறுதற்குரிய தோற்றப் பொலிவு காண்டற்கில்லை. இது என் கலையில் கண்ட உண்மைக் கருத்தேயாகும்" என நுவன்றனன்.

இங்ஙனம் நிமித்திகன் கூறக் கேட்டபோது, செங்குட்டுவன் உள்ளம் வருத்தம் மிக்கது. அவ்வருத்தம் புறத்தும் தோற்றம் அளிப்பது போல் முகத்தில் ஏக்கம் காட்டியது. 'அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' என்பது பொய்யாமொழியன்றோ! என்றாலும், செங்குட்டுவன் அதனை நன்கு வெளிப்படுத்தா வண்ணம் வீற்றிருந்தான். இளங்கோ மட்டும் இதனை உணர்ந்துகொண்டனர். முன்னத்தின் உணரும் மூதறிவுடையர் அல்லவா அவர்! பின்னர் நெடுஞ்சேரலாதன் நிமித்திகனுக்குச் சன்மானம் ஈய அவனும் வெளியேறினன். அவன் சென்ற பின்னர் இளங்கோ அடிகள் நன்கு சிந்தித்து, "முன்னவன் இருக்கப் பின்னவன் அரசு பெறுதல், முறைமை அன்று" என்பதை உணர்ந்தனர். "தாம் அரண்மனையில் இருப்பினும் தம் அண்ணனை செங்குட்டுவன் உள்ளம் தம்மைக் காணுந்தோறும் வருந்தவும் கூடும்.

இந்தத் துயரம் நம்மால் அவர்க்கு ஏன் எய்துதல்வேண்டும்? நாம் துறவுபூண்டு வெளியேறின், அரச பாரமும் நம்மை அடையாது; அண்ணன் மனமும் அமைதியுறும்'' என்று எண்ணியவராய்த் துறவுநிலையை மேற்கொண்டு வஞ்சிமாநகர்க்குக் கீழ்த்திசைப் பாங்கரில் உள்ள அருகன் கோட்டத்தை அடைந்தனர். இந்த உண்மையை இளங்கோ அடிகளே தம் திருவாய் மலரால் தேவந்தி என்பாள் மீது மருள் ஏறப் பெற்று அவள் கூறுவதுபோலச் 'செங்குட்டுவன் தன் செல்லல் நீங்கப் பகல் செய்வாயில் படியோர் தம்முன் அகலிடம் பாரம் அகல நீக்கி' என அறைந்துள்ளார். இங்ஙனம் அரசப் பற்றை அறவே துறந்து வெளிவந்த பின்பே இவர் 'அடிகள்' என்று அழைக்கப் பட்டார் என்க.

## இளங்கோ அடிகளார் சமயம் இன்னதென்பது

இளங்கோ அடிகளார் மேற்கொண்ட சமயம் இன்னதென நாம் அறிதல் வேண்டும். இவருடைய தந்தையான நெடுஞ்சேரலாதன் தன் மூத்த மகனை செங்குட்டுவனைச் சிவபெருமான் அருளால் பெற்றெடுத்தான் என்பதை முன்னர் குறிப்பிட்டுள்ளோம். ஆகவே, இளங்கோவின் தந்தையார் மேற்கொண்ட சமயம் சைவம் என்பது தெற்றெனப் புலனாகிறது. இவனது மூத்த மகனை செங்குட்டுவனும் சைவ சமயப் பற்றும் சார்பும் உடையவன். இவன் தன் தந்தையார் சிவபெருமானை வணங்கி அப்பிரானது திருவருட் பேற்றால் தோன்றியவன் என்னும் காரணங் கொண்டு அன்று இவன் சைவ சமயப்பற்றுடைய

வன் என்பது. இவனது சைவப்பற்று இவன் வடநாட்டுப் பயணமாகப் புறப்பட்டபோது நிகழ்ந்த நிகழ்ச்சியாலும் அதனை நன்கு உணரலாம். அதாவது, "இவன் வடதிசை நோக்கிப் புறப்படுகையில், முக்கண் மூர்த்தியை முறையாக வணங்கினன். அம்மூர்த்தியின் இணையார் திருவடிகளைத் தன் சென்னிமீது தரித்துக் கொண்டனன். பின் தன் அரச யானைமீது இவர்ந்த னன். அந்த அமயத்து ஆடகமாடமாம் திருவனந்த புரத்தில் திருப்பள்ளி கொண்டுள்ள திருமாலின் பிர சாதமாகிய துளசி மாலையைச் சிலர் கொண்டுவந்து இவனை வாழ்த்தி வணங்கிக் கொடுக்க, அவற்றை அன்புடன் பெற்றுத் தன் தலையில் சூட்டிக்கொள்ளா மல், தன் திருத்தோளில் தாங்கிச் சென்றனன்" என இளங்கோ அடிகளே கால்கோட் காதையில் கூறி யுள்ளார். சென்னியில் தாங்காது, மணித் தோளில் தாங்கியதற்கு அவரே காரணங் காட்டுகையில், "செங் குட்டுவன் சென்னி சிவனுருடைய திருவடி சூட்டப் பட்டுவிட்டமையின், அங்குத் திருமால் சேடம் இருத் தல் முறையன்று எனக் கருதித் தன் திருத்தோளில் தாங்கிச் சென்றனன்" என்கிறார். இக் கருத்துக்கள் :

> "ஆடக மாடத் தறிதுயில் அமர்ந்தோன்
> சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்
> தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
> வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்,
> ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
> தாங்கினன்"

என்னும் சிலப்பதிகாரத்துக் கால்கோட் காதையில் உள்ள அடிகளால் நன்கு உணரலாம். தந்தையும்

தமையனும் வழிபட்டுவந்த சைவசமய மரபில் தோன்றியவர் இளங்கோ அடிகள். ஆகவே, இளங்கோ அடிகளும் சைவராகத்தான் இருக்கவேண்டும் என அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடலாம் அல்லவோ? ஆனால், அவ்வாறு கூறிவிட இயலாது. முன்னோர் சமயத்தையே பின்னோர் மேற்கொள்ளவேண்டும் என்னும் கட்டுப்பாடும் நியதியும் இல்லை. எனவே, இளங்கோ அடிகளும் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதைச் செப்புதற்கு இடம் இல்லை. இவர் துறவு பூண்டதும், "குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்தனர்" என வரும் அடிகளில், கோட்டம் என்பதற்கு அருகன் கோயில் என அடியார்க்கு நல்லார் பொருள் கூறியுள்ளார். அருகன் சமணசமயக் கடவுளாவான். ஆகவே, இளங்கோ அடிகள் சைனசமயத்தைத் தழுவினவராக இருக்கலாம். இந்த ஒரு காரணம் மட்டும் இவர் சைனசமயத்தவர் என்பதை நிலைநாட்ட வல்லது என்று சொல்லுதற்கும் இல்லை. இவர் எழுதியுள்ள சிலப்பதிகாரத்தில் சைனசமயக் கொள்கைகளையும் கருத்துக்களையும் ஆங்காங்கு மிகுத்துச் சொல்லி இருத்தலின், இவர் சைனர் எனச் சாற்ற இடந்தருகிறது. இதனை நாடுகாண் காதையில், "மீன் இரை தேடும் நீர்நாய் காணினும், இடையே கயல்கள் துள்ளக் கண்டாலும், வாளை மீன்கள் பாயக் கண்டாலும் மலங்கு மீன்கள் மிளிரக் கண்டாலும், கண்ணகி கண்டு அஞ்சுவாள்" எனக் கூறிச் சைன சமய சீவ காருண்யக் குறிப்பை உணர்த்தியதை நாம் உணர்தல் வேண்டும். ஆகவே, இளங்கோ அடிகள் சைன சமயத்தைத் தழுவியவர் என்பதில் எள்ளளவும் ஐய

மில்லை என்க. இதனை மெய்யெனவே கூறலாம். இதனால், இவர் தம் முன்னோர் மேற்கொண்ட வைதிக சமயத்தை இழிவாகக் கருதியவர் என நினைக்கவேண்டா. பிற சமயச்சார்பாகப் பேசும் சமயங் கிடைக்குந்தோறும் சிறப்புறவே பேசுகிறார்; பாடுகிறார். சிவபெருமானுக்கு முதன்மைத்தானமே ஈந்து மொழிகிறார். "நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும், உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்" என மொழிகையில் இவ்வுண்மையை உணரலாம். திருமாலைப்பற்றிச் செப்புகையில் "திருமால் சீர்கேளாத செவி யென்ன செவியே" என்று உள்ளங்குளிர உரைத்துள்ளார்.

## இளங்கோவடிகளார் காலம்

இனி இளங்கோ அடிகளார் காலத்தைப் பற்றிச் சிறிது சிந்திப்போமாக. இவர் கடைச்சங்க காலத்தவர் என்பது சிலர் கொள்கை. அக்கடைச்சங்க காலத்தின் இறுதிக்காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பது பலர் கொள்கை. ஆனால், கடைச்சங்கத்தின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டே எனக் கூறுவோரும் ஒரு சிலர் உளர். ஆகவே, இளங்கோ அடிகள் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு புலவரா? அன்றி கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு புலவரா? என்பதை இப்பொழுது நிலைநிறுத்த வேண்டும். "கடைச்சங்கம் இரண்டாம் நூற்றாண்டாக இருப்பினும் சரி, அன்றி கி. பி. ஐந்தாம் நூற்றாண்டாக அமையினும் சரி, இளங்கோ அடிகள் கடைச்சங்க காலப் புலவர் வரிசையில் அமைத்தற்குரியர் அல்லர்; அப்படி அமைத்தற்குரியராயின், சங்க காலத்துத் தொகை நூல்களுள் ஒன்றிலேனும் இவர் பாடிய

பாடலாக ஏதேனும் ஒன்று காணப்படவேண்டும்" என்று வாது புரிபவரும் சிலர் உளர். இக்கருத்து வேறுபாடுகள் ஒருபுறம் இருக்க, இவர் கடைச்சங்க காலமாகிய கி. பி. இரண்டாம் நூற்றுண்டு என்பதற் குரிய சான்றுகள் பொருத்தமானவைகளாகக் காணப் படுகின்றன.

இளங்கோ அடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் காணப்படும் கானல் வரி என்னும் பகுதியில் உள்ள பாடல்கள் சிலவற்றைத் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் இயற்றித் தந்த இறையனுர் அகப்பொருட்கு உரை வகுத்த மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர் உரை கூறுகையில், மேற்கோளாகக் காட்டிச் சென்றுள்ளார். இவ்வெடுத்துக்காட்டே யன்றி நம் புலவர் பெருமானின் தமையனுன சேரன் செங்குட்டு வன் கற்புக்கடம் பூண்ட கண்ணகி தேவிக்குக் கோயில் அமைத்து விழாக் கொண்டாடினுன் என்றும், அவ் விழாக் கொண்டாடியபோது இலங்கை வேந்தனும் கயவாகு என்பானும் உடன் இருந்தான் என்றும் வருந்தருகாதையில் இளங்கோவடிகள் கூறியுள்ளார்:

> " கடல்சூழ் இலங்கை கயவாகு வேந்தனும்
> எந்நாட் டாங்கன் இமைய வரம்பனின்
> நன்னுள் செய்த நாள்அணி வேள்வி "

என்னும் அடிகளில் இக்குறிப்பு உண்மையைக் காண்க. இங்ஙனம் உடன் இருந்து கண்ணகி விழாவைக் கண் குளிரக் கண்ட கயவாகு தன்னுட்டகத்தும் அக் கண்ணகிக்குத் திருத்தளி அமைத்துத் திருவிழாக் கொண்டாடினன் என்பதை இந்நூல் பதிகத்தில்

''அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு என்பான், நங்கைக்கு நாள்பலி பீடிகை கோட்டமுந்துறுத்து ஆங்கு அரந்தை கெடுத்து வரந்தரும் இவள் என ஆடித் திங்கள் அகவையின் ஆங்கு ஓர் பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப் பிழையாவிளையுள் நாடாயிற்று'' என்று இந்நூலாசிரியரே கூறியுள்ளார்.

இக்கயவாகு இருந்த காலம் சற்றேறக்குறைய 1850 வருடங்களுக்கு முன்பு என்பது இலங்கைச் சரித்திரமாகிய மகாவம்ஸம் என்னும் வரலாற்று நூலால் அறிகிறோம். கயவாகுவுக்கும் செங்குட்டு வனுக்கும் தொடர்புடைய இக்காலம், செங்குட்டுவன் இளவலாகிய இளங்கோ அடிகளார்க்கும் தொடர் புடையதாகும். எனவே, இவர் காலம் கி. பி. இரண் டாம் நூற்றாண்டே என்பது வெள்ளிடை மலையென விளங்குகிறது.

## இளங்கோ அடிகளாரின் சிறப்பியல்பு

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைத் தவிர்த்து வேறு நூல் செய்திருப்பதாகத் தெரியவில்லை. இவர் இந்நூலையும் தாம் துறவு பூண்ட பின்பே யாத்திருப்ப தாகத் தெரிகிறது. இவர் யாத்த இச் சிலப்பதிகார கதை இவர் காலத்தின் கதையாகவும் தெரிய வருகிறது. இவர் இந்நூலைச் சீத்தலைச் சாத்தனார் வேண்டுகோட்கிணங்கப் பாடியுள்ளார் என்பதும் நமக்குப் புலனாகிறது. இப்படிப் பாடுதற்குக் காரண மாக இருந்தவர் முன்பே, இவர் இந்நூலையும் அரங்

கேற்றி வைத்தனர் என்பதும் தெரியவருகிறது. "உரைசால் அடிகள் அருளக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்" என்பது சிலப்பதிகாரப் பதிகத்துக் காணும் குறிப்பாகும்.

இளங்கோ அடிகளார், தாம் சேர மரபினராய் இருப்பினும், தம் மரபின் ஆண்மையும் அரசும் இன்னோ ரன்ன ஏனைய சிறப்புக்களையும் மிகுதிப்படுத்திக் கூறுதற் குரிய வாய்ப்புப் பெற்றவராக இருந்தும், தாம் துறவு பூண்ட தூயராய் விளங்கிய காரணத்தால், நடுநிலை பிறழாது முடிவுடை மூவேந்தர்க்கும் தாம் இயற்றும் நூல் உரித்தாதல் வேண்டும் என்னும் காரணத்தால் தம் நூலைப் புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என வகுத்துக்கொண்டு ஒவ்வொரு மன்னரது சீரும் சிறப்பும் தோன்றும் இடங்களில் நன்கு பாடிச் சென்றிருப்பதைப் படிக்குந்தோறும் யாரும் பரவசம் உறாமல் இருக்க இயலாது.

## நூலின் சிறப்பு

இளங்கோ முத்தமிழ்க் கல்வியில் மூதறிவுடைய வர். இதனால்தான், இவருடைய நூலாகிய சிலப்பதி காரம் முத்தமிழ்க் காவியமாய் இவ்வுலகில் நிலவி வருகிறது. இளங்கோ அடிகளார் புலவர் பெருமக்க ளால் பெரிதும் பாராட்டப்படுபவர். சுப்பிரமணிய பாரதியார், தாம் அறிந்த புலவர்களாக எடுத்துப் பேசிய மூவர்களாகிய திருவள்ளுவர் கம்பர் இளங்கோ வடிகளில், இவருக்கும் இடந் தந்து பாடி இருத்தலை நன்கு சிந்திக்கவும், "யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்

போல், வள்ளுவனைப் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்ஙனமே பிறந்ததில்லை; இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை'' என்று உயர்த்திப் பாடுவா ராயினர். இளங்கோ அடிகள் முத்தமிழ்த் துறையிலும் முதறிவு படைத்தவர் என்பது இவர் யாத்துள்ள சிலப் பதிகாரத்து யாண்டும் காணலாம். இதனால்தான், இந் நூலும் இயல் இசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுளாகக் கூறப்படுகிறது. நாடக உறுப்பினைப் பெரிதும் பெற்றுத் துலங்குதலின், நாடகக் காப்பியம் எனவும் நவிலப்பெறும் நன்னயம் வாய்ந்தது. இந்நூல் தன்னகத்து இசைப்பாட்டும், உரைப்பாட்டும் இடை யிடையே விரவப்பெற்று வருதலின், உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுளெனப் பகரவும் படுவது. இந்நூல் தன்பால் உயரிய நீதிகளைக் கொண்டு விளங்கு வது. அந்நீதிகளாவன: ''அரசியல் பிழைத்த அரசர்கள் அறக்கடவுளாலேயே அழிக்கப்படுவர். ஊழ்வினை அதற் குரியவனை எப்பெற்றியானும் தேடி அடைந்து, அவனை நுகர்விக்கும். கற்புடைப் பெண்டிரை உயர்ந்தோரும் ஏத்துவர்'' என்பன. இன்னோரன்ன சிறப்பியல்புகள் இதனிடத்து அமைந்திருத்தலின், இதனை ''நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம்'' எனப் பாரதியார் செப்பிச் சென்றனர். இந்நூலுக்கு ஈர் உரைகள் எழுதப்பட் டுள்ளன. அவற்றுள் ஒன்று அடியார்க்கு நல்லார் உரை, மற்றொன்று அரும்பதவுரை. இவ்விரு உரைகளி னால் 'பொன்மலர் நாற்றம் உற்றாற்போல்' இந்நூலின் மாண்பு மேலும் சிறப்புற்றுக் காணப்படுகிறது. அடியார்க்கு நல்லார் உரையால் பல இறந்துபட்ட நூற்களின் பெயர்களையும் பாடல்களையும் அறியும்

பேறு நாம் பெற்றுள்ளோம். அன்னேரன்ன நூல்கள், வெண்டாளி, வளையாபதி,முறுவல்,பெருநாரை, பெருங் குறிஞ்சி, பெருங்குருகு, பாசாண்டம், பரதம், பரத சேனுபதியம், பஞ்சமரபு, பஞ்சபாரதீயம், நூல், செயிற்றியம், சயந்தம், குருகு, குணநூல், களரியா விரை, கனுநூல், இசை நுணுக்கம், அணியியல் முதலியன.

## சிலப்பதிகார நூல் நயம்

இதுகாறு கூறியவாற்ருல், ஆசிரியர் அருமை யையும், அவர் யாத்த நூலின் பெருமையை யும், அந்நூலுக்குரிய உரையின் சிறப்பினையும் கண் டோம். இனிச் சிலப்பதிகார நூல் நயம் ஒன்றை மட்டும் இங்குக் காட்டி அடுத்த வரலாற்றை ஆரம்பிப்போ மாக.

இளங்கோ அடிகள் கதைப்போக்கிற் கேற்பக் கருத்துக்களைக் கவினுறச் சொல்லிச் செல்லும் திறன் பாராட்டற் குரியது. பாண்டியன் நெடுஞ்செழியன் ஆய்ந்தோய்ந்து பாராமல் கோவலனைக் கொலைக்குற்றத் திற்கு ஆளாக்கினன். அதனுல், நீதிநெறி தவருது செங்கோல் செய்துவந்த பாண்டியர் குடிக்கே பெரும் பழி உண்டாயது. வளையாத செங்கோல் கொடுங் (வளைந்த) கோலாயது. அப்படிக் கொடுங்கோலாயது நிமிர்த்துச் செங்கோல் ஆக்கவேண்டியது தன் பொறுப்பென உணர்ந்த செழியர் பெருமான், அதற்குப் பரிகாரமாகத் தன் உயிரையே ஈந்தனன் என்னும் இடத்தை இளங்கோவடிகள் எத்துணை அழகுறக்

கூறியுள்ளார் என்பதைப் படிக்குந்தோறும், படிக்குந் தோறும் கவிஞரின் புலமைத் திறன் நன்கு புலனாகும்.

"வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது"

என்னும் இவ்வீர் அடிகளே முன்பு விளக்கப்பட்ட பொருள் சிறப்பைப் பொதிந்துள்ள அடிகள். இவ்வாறு சுவை பயக்கவல்ல தொடர்களும் அடிகளும் சிலப்பதிகாரத்தின் எண்ணில் அடங்காதனவாக உள்ளன. அவற்றை நும் அறிவு கொண்டு அலசி எடுத்து அறிந்து இன்புறுவீர்களாக!

---

# 2. சீத்தலைச் சாத்தனார்

## சாத்தனார் பெயர்க் காரணமும் அப்பெயர் பூண்டவர்களும்

தண்டமிழ் ஆசான் சீத்தலைச் சாத்தனார் கடைச் சங்க காலத்துச் சான்றோருள் ஒருவர். சாத்தனார் என்பது ஐயனார் என்னும் தெய்வத்துக்குரிய பெயர். அப்பெயரே இவருக்கு இவருடைய முன்னோர் சூட்டினர் போலும்! இவர் வணிக மரபினர் என்பது கூலவாணிகச் சீத்தலைச் சாத்தனார் என்னும் தொடரால், அறியக்கிடக்கிறது. கூலம் என்பதற்குப் பொருள் உரைக்கவந்த சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் " கூலம் எண் வகைத்து. அவை நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி" என உரை வகுத்துள்ளார். இவ்வாறு சாத்தனார் தானியங்களை விற்று வாணிபம் செய்து மதுரையில் வாழ்ந்து வந்ததனால், இவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என அழைக்கப்படலானார். வாணிபம் புரிந்துகொண்டே புலமையிலும் தலைசிறந்தவராகச் சங்ககாலத்தில் பல சான்றோர்கள் வாழ்ந்துவந்தனர் என்பது பொன் வாணிகனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார் என்னும் பெயர் அமைந்த புலவர் இருந்தமையால் அறியலாம். இவ்வாறு சீரும் சிறப்பும் பேரும் புகழும் வாய்ந்த வணிகர்கள் தம் தொழிலைச் சிறக்க நடத்தி வந்தனர். அவர்கள் கூட்டம் கூட்டமாக

வெளி நாடுகளுக்குச் சென்று வாணிபம் நடத்தியும் வந்தனர். அப்படிக் கூட்டமாகச் செல்வதைத் தமிழ் மொழியில் 'சாத்து' என்று குறிப்பிட்டிருந்தனர். அவ்வணிகக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிச் சீர்பெற நடத்தியதால் அக்கூட்டப் பெயராலேயே பல புலவர்களும் சாத்தனர் என்றே அழைக்கப்பட்ட தாகவும் இருக்கலாம் எனவும் கருத இடம் இருக் கிறது.

இச் சாத்தனர் என்னும் பெயரைப் பூண்ட சான் ரோர் பலர் சங்ககாலத்தில் இருந்திருக்கின்றனர். அவர்கள் அகநானூற்றில் பாடிய புலவர்களான ஆலூர் மூலங்கிழார் மகனர் பெருந்தலைச் சாத்தனர், கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனர், கருவூர்ப் பூதஞ் சாத்தனர், தொண்டி ஆமூர்ச் சாத்தனர், மருங்கூர்ப்பாகைச் சாத்தன் பூதனர், வடவண்ணக்கன் பேரி சாத்தனர் என்பவர்கள். திருவள்ளுவ மாலையிலும் சில சாத்தனர் என்னும் பெயருடைய புலவர்கள் இருந்துள்ளார். அவர்கள் செயிர்க் காவிரியார் மகனர் சாத்தனர், வண்ணக்கஞ் சாத்தனர் என்பவர்கள். குறுந்தொகை யில் அழிசி நச்சாத்தனர், உறையூர் முதுகண்ணன் சாத்தனர், கரூவூர்ச் சேரமான் சாத்தன், சாத்தன், பெருஞ்சாத்தன், பேரி சாத்தனர், வடமன் வண்ணக்க பேரி சாத்தனர் என்பவர்களின் பாடல்கள் உள்ளன. நற்றிணையில் ஆலம்பேரி சாத்தனர், உறையூர்க் கதுவாய்ச் சாத்தனர், சுகப்பிள்ளைச் சாத்தனர், பிரான் சாத்தனர், பெருந்தலைச் சாத்தனர், பேரி சாத்தனர், வாலம் பேரி சாத்தனர், வடமவண்ணக்கன் பேரி சாத்தனர் என்னும் புலவர்களின் பெயர்கள் காணப்

படுகின்றன. புறநானூற்றுல், ஆடுதுறை மாசாத்தனுர், உறையூர் முதுகண்ணன் சாத்தனுர், ஒக்கூர் மாசாத்த னுர், கருவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனுர், பெருந்தலைச் சாத்தனுர், மோசி சாத்தனுர், வடம் வண்ணக்கன் பெருஞ்சாத்தனுர் என்பவர்களை அறியலாம். ஆகவே, சாத்தனுர் என்னும் பெயர் அக்காலத்தில் பெருவழக்க மாகப் பலரும் தம் பெயராகச் சூட்டிக்கொள்ளுதற் குரியதாக இருந்தமை இப்பெயர் வரிசையில் இருந்து எளிதில் உணரலாம். இவர்கள் யாவரும் அறிவுடை ஆன்ருேராய் இருந்தமையில், இன்னுர் இன்னுர் என்பதைத் தெற்றத் தெளிய அறிந்துகொள்ளும் பொருட்டுத் தம் இயற்பெயர்க்கு முன்னுல் தக்க அடைமொழி கொடுத்து அறிவிக்கப்பட்டனர் போலும். இம்முறைக்கிணங்க நம் கதாநாயகரான சாத்த னுரும், மதுரைக் கூலவாணிகச் சீத்தலைச் சாத்த னுர் எனக் குறிப்பிடப்பட்டார். மேலே காட்டிய புலவர் வரிசையில் ஒரே பெயரையுடைய புலவர் பல தொகை நூல்களில் குறிப்பிடப்பட்டிருப்பதால், அவர் கள் அவ்வந் நூற்களில் பாடல்களைப் பாடியுள்ளார் என்பதை யூகித்து உணர்ந்துகொள்க.

## இவர் சீத்தலைச் சாத்தனுர் எனற்குரிய காரணம்

சீத்தலைச் சாத்தனுர் என இவர் குறிக்கப்படுதலைக் குறித்தும் சில கருத்து வேற்றுமைகள் தமிழ் நாட்டில் உலவி வருகின்றன. முதல் கருத்து யாதென்பதை முன்னர் உணர்த்துவோமாக. முதற் கருத்துத் தொன்று தொட்ட கருத்து, நூல் சான்றுக்கு உட்பட்ட கருத்துமாகும். அதாவது, சாத்தனுர் கல்விகேள்வி

களில் தலைசிறந்தவர். அதனால் நுண்ணறிவுத் திறன் மிகுதியும் பெற்றவர். பிறர் நூல் குற்றம் காணுவதில் ஒப்புயர்வற்றவர். ஆனால், அக்குற்றத்தின்பொருட்டு அக்குற்றம் அமைந்த நூலைப் பாடிய புலவரையோ நூலையோ நொந்துகொள்ளாது, தம்மைத்தாமே நொந்துகொண்டு, தம்மையே ஒறுத்துக்கொள்ளும் இயல்புடையராய் விளங்கினார்.

செய்யுட்கள் அரங்கேற்றத்தின்பொருட்டுச் சங்கப் புலவர்கள்முன் அரங்கேற்றப்பட்டபோது, சொற்குற்றம் பொருட்குற்றம் காணப்படின் "இத் தகைய குற்றமுடைய பாடலைக் கேட்கவும் என் தலை விதி போலும்" என்று தம் தலையில் எழுத்தாணியால் குத்திக்கொள்வாராம். அப்படிப் பலகாலும் குத்திக் கொண்டுவர, அதனால் தம் தலைப்புண் உண்டாக, அஃது ஆறாமல் சீழ்த்தலை யுடையவராய் இவர் திகழ்ந் தாராம். அதனால் சீழ்த்தலை என்பது சீத்தலை என மருவி, இவர் முதற்பெயர் முன்னர் அடைமொழியாக அமைந்து 'சீத்தலைச் சாத்தனார்' எனக் கூறப்பட்டார் என்பர். இக்குத்து, திருவள்ளுவர் யாத்த ஈடும் எடுப்பும் அற்ற திருக்குறளைக் கேட்டபின்னர், அந்நூல் யாதொரு குற்றத்திற்கும் இடந்தராது இருந்தமை கேட்டு மனம் உவந்து தம் தலையில் குத்துதலை நிறுத்திக் கொண்ட தாக மருத்துவந் தாமோதரனார், தம் திருவள்ளுவ மாலை யில் தெற்றத் தெளிவாக ஒரு பாடலால் விளக்கி யுள்ளார்.

"சீந்திநீர்க் கண்டம் தெரிசுக்குத் தேன்அளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி

மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தறகு''

என்பது அப்பாட்டு.

இரண்டாவது கருத்துச் சீத்தலையைப் பற்றி யாதெனில், சீத்தலை என்பது திருச்சிராப்பள்ளியின் மாவட்டத்தைச் சார்ந்த ஊர். அவ்வூரில் இவர் பிறந்து வளர்ந்த காரணத்தாலேனும், அன்றிச் சீத்தலை என்னும் ஊரில் உள்ள ஐயனர் பெயராகவேனும் இவர் சீத்தலைச் சாத்தனர் என அழைக்கப்படுவாராயினர் என்பர். ஆகவே, இவர் சோழநாட்டுப் புலவரே. என்ருலும் பிழைப்புக் கருதி மதுரையை அடைந்து தானிய வாணிபத்தைச் சிறக்க நடத்திவந்த காரணத்தால் மதுரைக் கூலவாணிகச் சீத்தலைச் சாத்தனர் எனக் கூறப்பட்டார் என்க.

## சாத்தனர் காலம்

இவர் தம் பிற்கால வாழ்வைச் சேரன் செங்குட்டுவன் அரச அவையில் கழித்திருக்கவேண்டும் என ஊகிக்கவேண்டி இருக்கிறது. சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எடுப்பித்து விழாக் கொண்டாடியபோது, பல அரசர்களும் உடன் இருந்தனர் என்று சிலப்பதிகாரம் என்னும் நூல் கூறுகின்றது. அங்ஙனம் இருந்தவர்களுள் இலங்கை மன்னனை கயவாகு என்பானும் ஒருவன் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. அக்கயவாகு இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தவன் என்பது இலங்கைச் சரித்திரமாகிய மகாவம்ஸம் கூறுகின்றபடி

யால், செங்குட்டுவன் காலமும் கயவாகுவின் காலமும் ஒன்றெனை உணரக் கிடக்கிறது. அச்செங்குட்டுவன் உடன் இருந்த புலவர் சீத்தலைச் சாத்தனார் எனவும் நாம் சிலப்பதிகாரத்திலிருந்து அறிதலின், இவர் காலமும் ஏறக்குறைய இரண்டாயிர ஆண்டுகட்கு முன்னர் என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம்.

## சாத்தனார் சமயம்

சீத்தலைச் சாத்தனார் சமயம் பௌத்தம் என்பதை அவர் தம் நூல் பௌத்த மதக் கொள்கைகளை விரித்துக்கொண்டு போகும் போக்கில் இருந்தே உணர்ந்து கொள்ளலாம். பௌத்த மதத்தின் அடிப்படைத் தருமங்கள் பல இருப்பினும் அவற்றின் இன்றியமையாத தருமம், எந்தப் பொருளினிடத்தும் பற்றிருத்தலை ஒழித்துவிடுதல் ஆகும். பிறர் படுந்துயரைக் களைய முற்படுதலும் ஆகும். இக்கொள்கைகளைச் சீத்தலைச் சாத்தனார் பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளார். புத்தப்பெருமானைக் குறிப்பிடவேண்டிய இடங்களில் எல்லாம் உளங்குளிர உவந்து கூறிக் களிக்கிறார். 'அருளும் அன்பும் ஆர்உயிர் ஓம்பும் பகவன்' எனச் சுதமதி வாயிலாகப் புகழ்கிறார். 'புலவன், தீர்த்தன், புண்ணியன், புராணன் உலக நோன்பின் உயர்ந்தோய் என்கோ' என மணிமேகலா தெய்வந் துதித்ததாசக் கூறுகிறார். 'உரகர் துயர்கெட நடப்போய் நின்னடி, வணங்குதல் அல்லது வாழ்த்துதல் என் நாவிற்கு அடங்காது' என மாதவி மகளாம் மணிமேகலை வாயிலாகவும் வைத்துப் பரவுகிறார். இன்னோரன்ன காரணங்களால் இவர் பௌத்த சமயத்தவர்

என்பதில் எள்ளளவும் ஐயம் இன்று. என்றாலும், சிவபெருமானைக் கூறும்போது தாம் பௌத்தராக இருந்தாலும் எத்துணை அளவுக்கு உயர்த்திப் புகழ இயலுமோ, அத்துணை அளவுக்குப் புகழ்ந்தே பேசுகிறார். தெய்வங்கட்கெல்லாம் முதலில் வைத்தே மொழிந்தும் இருக்கிறார். 'நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப் பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம்' என்பது சாத்தனார் வாக்கு.

## சாத்தனார் புலமை

சித்தலைச் சாத்தனார் புலமை அளவிடற்கரியது. இவர் சங்ககாலப் புலவர்களோடு ஒருவராய்த் திகழ்ந்து விளங்கினர் என்பது இவருடைய பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் இருத்தலினின்று நன்கு அறியலாம். இவரது பாடல்கள் நற்றிணை என்னும் நூலில் மூன்றும், குறுந்தொகையில் ஒன்றும், அகநானூற்றில் ஐந்தும், புறநானூற்றில் ஒன்றும், திருவள்ளுவ மாலையில் ஒன்றும் காணப்படுகின்றன. இச்செய்யுட்கள் அனைத்தும் சீரிய கருத்துக்களைத் தம்மகத்தே கொண்டனவாகத் திகழ்கின்றன.

"குறிய முன்னங்காலையுடைய ஆண் புலி, பெண் யானை வருந்தும்படி, நீர் அற்ற அகன்ற காட்டகத்து ஆண்யானையைத் தாக்கும் மலையிடம்" என நற்றிணையில் ஒரு தலைமகன் சென்று மீளவேண்டிய வழியின் அருமையை அச்சம் தோன்றக் கூறியுள்ள அழகைப் பாருங்கள். பறவைகளும் தமக்குள் அன்புகொண்டு, தம் துணைப்பறவை சிறிது தாமதித்து வர நேர்ந்தா

லும் அதன்பொருட்டு வருந்தி நிற்கும் என்பதைக் குறுந்தொகையில் அழகுபடக் கூறியுள்ளதை அறிந்து மகிழ்க. இரை வேட்டு எழுந்த சேவலே உள்ளிக் குறு நடைப் பேடை தயங்க இருந்து புலம்பக் கூவும் என்பதே அந்தக் காட்சியாகும்.

இவர் புறநானூற்றுப் பாடலால் இவர் மதுரையில் தாம் கூலவாணிபம் செய்துவந்த காலத்தில், மதுரைமாநகர் மன்னனான செழியனுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கவேண்டும் என்பது அறிய வருகிறது. பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைக் குறித்துப் பாடிய பாடலே புறநானூற்றில் உள்ளதாகும். அதில் அம்மாறனது இயல்பை நன்கனம் சித்தரித்துக் காட்டியுள்ளார். அவனை நோக்கி, "வழுதியந் தலைவ! நீ யாவர்க்கும் மனம் உவந்து அருளப்பண்ணுதலைத் தெளிந்துள்ளாய். நின் பகைவர்க்கு ஞாயிற்றை அனையை, எம்போலியர்க்குத் திங்கள் அனையை" என்பது அப் புறப்பாட்டில் பொதிந்த கருத்து. இதனால், அப்பாண்டியனுடைய வீரமும் ஈரமும் ஒருங்கே நயம்படப் புகழ்ந்தவாறாயின. பகைவர்க்குச் சூரியனது வெம்மைபோலக் கொடுமை செய்யவல்லவன் என்பதும், புலவர்கட்குச் சந்திரனைப் போலக் குளிர்ந்து வரையாது ஈந்து தண்ணளி செய்பவன் என்பதும் இப்பாடலின் கருத்தாயின், இதனைப் படித்துப் படித்து இன்புறவேண்டாவோ?

அகநானூற்றில் சாத்தனார் பாடல்கள் அழகுற அமைந்துள்ளன. பாலையில் நிழல் வேண்டுமானால், இறந்தவர்களின் பொருட்டு அன்னார் பீடும் பேரும்

எழுதப்பட்ட நடுகல் நிழலே அன்றி, வேறு இன்று என அந்நிலத்தின் கொடுமை எத்துணை அழகுற "எழுத்துடை நடுகல் இன்னிழல்" என்னும் சிறு சொற்களில் சித்தரித்துள்ளார் பாருங்கள், "நிழலே பெறுதற்கு அரிய பாலையில், நடுகல்லின் சிறு நிழலேனும், ஆண்டுக் கிடைத்தலின், அதன் அருமை தோன்றவே இன்னிழல்" என அதனைப் புனைந்துரைத்தனர். பறவை அமைதியாக உறங்கிய அழகை இயற்கை இன்பம் தோன்ற, "வார்குருகு உறங்கும் நீர்சூழ் வளவயல்" என்று இந்நூலில் இனிது எடுத்து இயம்பியுள்ளார். முன்னர்த் திருவள்ளுவர்பாலும், திருக்குறளின் மீதும் சாத்தனார்க்குப் பெரிதும் ஈடுபாடு உண்டு என்பதை உணர்த்தினோம். அதனைப் பின்னரும் தெரிய வேண்டுமானால், திருவள்ளுவ மாலையில் அந்நூலைச் சிறப்பித்துக் கூறும் முறையாலும் உணரலாம். அதாவது, முடியுடை மூவேந்தரது முடிக்குரியதாகும் திருக்குறள் எனப் புகழ்ந்து பேசினார். அதனால் பேர் அரசர் தம்தம் திருமுடிமேல் வைத்துக் கொண்டாடத்தக்க பெருமை மிக்கது திருக்குறள் என்பது அப்பாடலின் பொருள். மேலும் அப்பாடலில் மும்மூன்றாக வருகின்ற பொருள்கள் அழகுபடவும் கூறப்பட்டுள்ளன.

> "மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
> மும்மரசும் முத்தமிழும் முக்கொடியும்—
> மும்மாவும்
> தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றே
> பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்"

என்பது அப்பாட்டு.

இன்னோரன்ன பெரும் புலமை இப்பெரியாரிடத்தில் காணப்பட்டமையால்தான், இவர் காலத்துப் புலவரும் சேரநாட்டு இளவரசரும் ஆகிய இளங்கோ அடிகளார் தம் நூலகத்துச் சமயம் வாய்க்குந்தோறும் தண்டமிழ்ச் சாத்தன், தண்டமிழ் ஆசான் சாத்தன், நன்னூற் புலவன் என்றெல்லாம் வாயாரப் புகழ்ந்துள்ளார். இவர்பால் இளங்கோ அடிகட்கு எத்துணை அன்பு ஏற்பட்டிருந்ததோ, அத்துணை அன்பும் நட்பும் மருத்துவந் தாமோதரனார்க்கும் இருந்திருக்கவேண்டும் என்பது சாத்தனார் செய்யுட்களுடன் தாமோதரனார் பாடல்களும் சார அமையப்பெற்றுத் தொகை நூல்களில் காணப்படுதலாம் அறியலாம்.

சாத்தனார் காலத்திலேயே சிலப்பதிகாரக் காதையும் மணிமேகலையின் துறவும் நடந்திருத்தலின், அவ்விரு நூல்களின் தொடர்பு பெற்றுவரும் நாடுநகரங்களின் இயல்பையும் கைத்தொழில் வளத்தையும் இவர் கூறுவதை நாம் கவனித்தால், இவர் எல்லாவற்றையும் தாம் நேரில் கண்டு கூறியுள்ளார் என்பது நன்கு புலனாகும். இதனோடு பொருள்களின் இயல்பைக் கூர்ந்து கவனித்துக் கூறும் இயல்பும் இவர்பால் இருந்தது என்பதையும் அறியலாம். கண்ணாடி அறைக்குள் ஒருவர் இருந்தால், இருப்பவர் உருவம் புறத்தே தோன்றுமேயன்றிப் பேசப்படும் சொற்கள் வெளியே கேட்கப்படமாட்டா என்பதை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் எத்துணை அழகுறக் கூறியுள்ளார் என்பதை ''விளிப்பறை போகாது மெய்ப்புறத்திடூஉம், பளிக்கறை மண்டபம்'' என்னும் இவர் வாக்கினின்றே உணர்க. இவர் திருவள்ளுவரிடத்தும் திருவள்ளுவர் செய்த

நூல்இடத்தும் அளவுகடந்த அன்பும் ஆர்வமுங் கொண்டவர் என்பதை இவர் தம் நூலில் திருக்குறளை எடுத்து ஆண்டுகொண்டதோடு அமையாது, அந்நூலை யும் ஆசிரியரையும் புகழுவதில் இருந்தும் தெரிகிறோம். "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றப் பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்" என்கிறார் சாத்தனார். பெரும் புலவராகிய சாத்தனார் வள்ளுவரைப் பொய் யில் புலவன் என்று கூறுவதில் எத்துணை நயமுள்ளது என்பதைக் கூர்ந்து நோக்குவீர்களாக.

## மணிமேகலை நூல் சிறப்பு

இத்தகைய அறிவியற்றுறையில் ஆழ்ந்தகன்ற ஆன்றோர் இயற்றிய தனிப்பெருங் காவியமாகிய மணி மேகலையில் எத்துணை சொல்நயம் பொருள்நயம் சிறந்து காணப்படும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? மணிமேகலையில் நயம் பல பொதிந்து காணப்படுகின் றன என்பது கற்றறிந்தாருடைய கருத்தும் துணிபும் ஆகும். கற்பனைக் களஞ்சியமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தம் திருவெங்கை யுலாவில்,

"மந்தா கினியணி வேணிப் பிரான்வெங்கை
மன்னவனீ
கொந்தார் குழல்மணி மேகலை நூல்நுட்பங்
கொள்வதெவன்?"

என மணிமேகலையின் நூல் நுட்பம் அறிதல் அருமை என்பதை எத்துணை அழகுறக் கூறியுள்ளார் பாருங் கள். மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப் பதே என்னும் அம்பிகாபதி கோவையடியால் தமிழ்

அறிஞர்க்கு நல்வாழ்வு அளிப்பது மணிமேகலை என்பது அறியக்கிடக்கிறதன்றோ ?

மணிமேகலை தலைசிறந்த நூலாக விளங்குதலினால்தான், உரையாசிரியர்களான பேராசிரியர் இளம்பூரணர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், பரிமேல் அழகர், அடியார்க்கு நல்லார், மயிலைநாதர், சங்கரநமசிவாயர் முதலியோர் இதனை மேற்கோளாகப் பல இடங்களில் எடுத்துக்காட்டியுள்ளார். இந் நூலால் தமிழ் நாட்டில் இருந்த பல சமயங்களையும் அவற்றின் கொள்கைகள் சிலவற்றையும் நன்கு அறியலாம். மணிமேகலையின் முடிந்த முடிபு மணிமேகலையின் துறவாதலின், இந்நூல் மணிமேகலை துறவென்றும் பெயர்பெற்று விளங்குகிறது. 'மணிமேகலை துறவு ஆறைம்பாட்டு' என்பது இந்நூலின் பதிகமாகும். இந்நூலில் காணும் இயற்கை வளன்கள் பலபடப் புனைந்து கூறப்பட்டிருத்தலைக் கண்டால் அவற்றை நேரில் கண்டாற்போலக் காணப்படும்.

மணிமேகலை என்னும் இந்நூல் எடுத்து இயம்பும் நீதிகள் அனைத்தும் மக்கள் நன்குணர்ந்து அவற்றின் படி தம்மைத் திருத்திக்கொள்ளுதற்கு ஏற்புடையன வாகும். "பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம், பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்" என்று கூறி உடனே அதே சமயத்தில் பிறப்புக்குக் காரணம் ஆசை, பிறவாதிருத்தற்கு வழி ஆசையை அறுத்தல் என்பதை எவ்வளவு நயம்பட இந்நூல் கூறுகிறது பாருங்கள்.

யாக்கையின் இழிநிலையை இந்நூல் எப்படிப் பேசுகிறது என்பதைச் சிறிது உற்று நோக்குங்கள். 'புனைவன நீங்கில புலால் புறத்திடுவது' என்கிறார். அதாவது இந்த உடலைத் தினமும் நீராட்டி மணமுடைய பொருள்களைப் புனைந்தும், ஆடையணிகளை அணிந்தும் இருந்தால்தான் இனிதாக இவ்வியாக்கை நலனுறக் காணப்படும். இன்றேல் புலால் நாற்றம் வீசத்தொடங்கி, அருகில் எவரையும் வரவொட்டாமல் தடைசெய்து விடும், என்பதை இத்துணை அழகுறப் பாடியுள்ளார் கவனியுங்கள்! இங்ஙனம் நயம்பட ஒவ்வொரு கருத்தையும் அறிவிக்கும் அடிகள் இந்நூலில் மல்கி இருத்தலின், இந்நூலைப் படித்து இன்னோரன்ன நயங்களை நன்கு துய்ப்பீர்களாக.

---

# 3. சேக்கிழார்

## சேக்கிழார் தோற்றம்

தண்டமிழ் நாட்டில் தலைசிறந்து விளங்கிய சேர சோழ பாண்டிய நாடுகளே அன்றி, அவற்றோடு எல்லாப் படியாலும் ஒருங்குவைத்து எண்ணப்படும் பெருமை வாய்ந்தது தொண்டை நாடும் ஒன்றாகும். இந்நாட்டிற்கு வளந்தரும் ஆறு பாலாறு எனப்படும். இவ் வாற்று வளத்தால் தடனும் குளனும் ஏரியும் நீர் நிரம்பப்பெற்று, பொழில்கள் பல பொலிவுற்றிலங்கின. வயல்கள் பல வளம்பெற்று வயங்கின.

இத்தகைய நீர்வளனும் நிலவளனும் அமையப் பெற்ற தொண்டை நாட்டில் இருபத்துநான்கு கோட்டங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று புலியூர்க் கோட்டம் என்பது. கோட்டங்களின் உட்பிரிவாகப் பல ஊர்கள் அடங்கி இருந்தன. அவ்வாறு அடங்கிய ஊர்களுள் குன்றத்தூர் என்பதும் ஒன்று. இது புலியூர்க் கோட்டத்தின் உட்பிரிவாகும். இக் குன்றத்தூர் இப்பொழுது குண்ணத்தூர் என வழங்கப் பட்டு வருகிறது. இது சென்னைக் கோட்டையிலிருந்து பதினான்கு கல் தொலைவில் உள்ள ஒரு சிறு கிராமமாகும். இக்கிராமத்தில் பல குடிமக்கள் துவன்றி வாழ்ந்துவந்தனர். அக்குடிகளுள் சேக்கிழார் குடி என்பதும் ஒன்று. இக்குடியில் தமிழ் நாடும் சைவ உலகும் செய்த தவப்பயனாகச் சேக்கிழார் என்னும்

சிரியர் பிறந்தருளினார். இவருடன் பிறந்த இளவல் ஒருவர் உண்டு. அவர் பாலறாவாயர் என்னும் பெயர் படைத்தவர். சேக்கிழார் குடிப்பெயரால் குறிப்பிடப் பட்டாரேனும், அவருடைய இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்பது. சேக்கிழார் குடி, அருண்மொழித் தேவரால் சிறப்பு அடைந்த காரணம் பற்றி

அன்னார், தம் இயற்பெயரால் சுட்டப்படாமல், பல்லோராலும் சேக்கிழார் என்றே பெரிதும் மொழியப்பெற்றுவந்தார்; வருகின்றார்.

## வேளாண்குடிச் சிறப்பு

சேக்கிழார் குடி உழுதுண்டும் உழுவித்துண்டும் வாழும் ஒப்புயர்வற்ற வேளாளர் குடியே ஆகும். இக்குடி இந்நற்குடி யன்றே நவிலப்பெறும் மாண்பு வாய்ந்தது. வாய்மையினின்று வழாவாதவர்கள் வாழும் குடி. இக்குடியினர் சொன்ன சொல் தவறாத சுகுணர்கள் என்பது. பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகன் உயிர் இழப்ப, அவன்பொருட்டு எழுபது வேளாண்குடி மக்கள்தம் உயிரையும் ஈந்ததனால் இவ்வுண்மையை நன்கு அறியலாம். இக்குடியினர் தம் ஏரால் எண்டிசையையும் வளர்க்கின்றவர்கள். இவர்கள் பிடிக்கும் தாற்றுக்கோலே, முடிமன்னர் தம் செங்கோலைப் பிடித்து நல்லரசு நடத்தற்கு நல்வழி காட்டவல்லது. சைவ நாயன்மார் அறுபான் மூவருள் வாயிலார், சத்தியார், விறல் மிண்டர், திருநாவுக்கரசர், சாக்கியர், கோட்புலியார், மன்னக் கஞ்சாறர், ஏயர்கோன் கலிக்காமர், இளையான்குடி மாறர், மூர்க்கர், அரிவாள் தாயனார், செருத்துணையார்,

முனையடுவார் ஆகிய பதின்மூவரும் வேளாண்குடிப் பெருமக்களே. இக்குடியினர் வருவிருந்து உவப்ப ஊட்டும் வண்மையாளர்கள். இன்னோரன்ன இசையால் திசைபோய பெருங்குடி மக்களின் சிறப்பைப் பேசப் புகுந்தால், இவ்வேடு இடந்தராதென்க.

## திருநாகேஸ்வரம் எடுப்பித்தல்

இவ்வேளாண்குடியில் பிறந்த அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமான், கல்வி கேள்விகளில் ஈடும் எடுப்பும் அற்றவராய் அகத்தியம், தொல் காப்பியம், சங்க இலக்கியங்கள் சைவத் திருமுறைகள் முதலிய இலக்கண, இலக்கிய இறைநூல்களை ஐயந் திரிபற ஓதி, உணர்ந்திருந்தார். புலமைக்கோர் எடுத்துக்காட்டென விளங்கியிருந்தார். சேக்கிழார் சைவ வேளாள மரபினர் ஆனதால், இவர் உள்ளம் எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய சிவபெருமானிடம் இடையறா அன்புகொண்டிருந்தது. அரனார் இடத்து அன்பு கொண்டதுபோல், அரனார் அடியாரிடத்தும் அளக்க ஒண்ணா அன்புகொண்டு, திகழ்ந்தது. ஆன்றோர்கள் தம் உள்ளத்தை ஒருவழிப்படுத்தற்கு ஒரு திருத்தலத்தைத் தம் ஆத்மார்த்த திருத்தளியாகக் கொள்ளுதல் இயல்பு. அம்முறைக்கிணங்க இவருள்ளம் சோழநாட்டுத் திருப் பதிகளில் ஒன்றான திருநாகேஸ்வரம் என்னும் திருக் கோயிலின்பால் ஆழ்ந்த அன்பு கொண்டிருந்தது. ஆகவே, தம் ஊருக்கு அண்மியதாக வடமேற்கில் ஒரு திருத்தலத்தை அமைத்து, அதற்குத் திருநாகச்சரம் எனத் திருப்பெயரும் சூட்டி, அத்தலத்து ஆண்ட

வனையே அருச்சித்து வந்தார். அத்தலத்தை இன்றும் குன்றத்தூரில் யாவரும் கண்டு களிக்கலாம். சேக்கிழார் பெருமான் இம்மைக்குரிய தம் குலத்தொழிலைச் செவ்விய முறையில் நடத்தியும், அம்மைக்குரிய அரனார் பூசையை அன்புடன் இயற்றியும் வருவாரானார்.

## சோழன் ஆராய்ச்சி

அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமான் குன்றத்தூரில் தம் இருமைக்குரிய கடன்களை ஆற்றிக் கொண்டு வருகையில், சோழநாட்டை அரசாண்டு வந்தவன் இரண்டாம் குலோத்துங்கன் என்னும் ஏந்தல் ஆவான். இவன் கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசுபுரிந்த வளவனாவான். இவன் கல்விகேள்விகளில் தலைசிறந்தவன். அவ்வப்பொழுது தமக்கு முன்னிருந்த புலவர் பெருமக்களின் பொன்மொழிகளை ஆராயும் அவாவினன்; கலாவினோதன். அத்தகையவன் ஒருநாள், ஔவை மூதாட்டியார் அருளியுள்ள,

> "வேழம் உடைத்து மலைநாடு ; மேதக்கச்
> சோழ வளநாடு சோறுடைத்துப் பூரியர்கோன்
> தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
> நன்னாடு சான்றோர் உடைத்து"

என்னும் பாடலைக் குறித்துச் சிந்திக்கவும் ஆராயவும் ஆனான். அவன் அறிவைத் துருவத் தூண்டிய தொடர், அப்பாடலில் காணும் 'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்பதேயாகும். ஆகவே, அதன் உண்

மையை அறிய மூன்று வினாக்களை எழுப்பலாயினன். அவை ' உலகை விடப் பெரியது எது? மலையை விடப் பெரியது எது? கடலை விடப் பெரியது எது?' என்னும் வினாக்களேயாகும். '' ஆ! இவ்வினாக்கள் உண்மையில் எவரையும் திடுக்கிடச் செய்யவல்ல வினாக்களேயாம். எவரும் எளிதில் விடை யிறுத்தற்குரிய வினாக்கள் அல்ல. அறிவை அலசும் அரிய வினாக்களே. இத்தகைய வினாக் களுக்கு விடை ஈயவல்லார் சான்றோர்களே அன்றிச் சாதாரணர் அல்லர். இச் சான்றோரைப் பெற்றது தொண்டைநாடே என ஔவையும் கூறியுள்ளார். எனவே, தொண்டை நாட்டிற்கே இவ்வினாக்களைப் போக்குவோம். அங்குள்ள ஆன்றோர் அளிக்கும் விடையினைக் காண்போம்'' என்னும் கருத்துடையனாய்க் குலோத்துங்க மன்னன் அவ்வினாக்களை ஓலை நறுக்கில் தீட்டித் தொண்டை நாட்டிற்கு ஆட்களின் மூலம் அனுப்பினன்.

## சேக்கிழார் மந்திரியாதல்

அக்காலத்தில் தொண்டை நாட்டு அரசியல் தலைவன், சோழர் பெருமானால் விடுக்கப்பட்ட ஓலை நறுக்கினைக் கண்ணுற்று, இக் கேட்விகட்கு விடை விடுக்கவல்லவர் சேக்கிழார் பெருமானே என்பதை அறிந்து, அவர்களை அன்புடன் வரவழைத்து, அச் சென்னிப் பெருமானிடம் இருந்து போந்த சீரிய ஓலையினை சேக்கிழார் பெருமானிடம் நீட்டினன். அருண்மொழித் தேவரும் அம்முடங்கலை அன்புடன் ஏற்றுப் படித்து, அகம் மகிழ்ந்து, உடனே இருந்த இடத்திலேயே கீழ்வரும் மூன்று திருக்குறட்பாக்களை விடைகளாக எழுதி ஈந்தனர். அக்குறட்பாக்கள்,

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்,
ஞாலத்தில் மாணப் பெரிது"

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்,
நன்மை கடலில் பெரிது"

"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்,
மலையினும் மாணப் பெரிது"

என்பன. "வினாக்கள் கடினமாக உள்ளனவே. இக் கடினமான கேள்விகட்கு என்ன விடை இறுக்க இயலும்" என எண்ணிக்கொண்டிருந்த தொண்டை நாட்டு அரசியல் தலைவன், சேக்கிழார் அளித்த விடைகள் மிகமிகப் பொருத்தமுடையனவாகவும், சுருக்கமுடையனவாகவும் இருக்கக் கண்டு, அவருக்கு வேண்டிய சன்மானம் பலவும் ஈந்து, விடைகளைச் சோழ மன்னனுக்கு வந்த ஆட்களின் மூலமே அனுப்பி வைத்தனன்.

குலோத்துங்க மன்னன் தொண்டை நாட்டினின்றும் போந்த விடையினைக் கண்டான். கரை காணாக் கழிபேர் இன்பம் கொண்டான். தன் அவையினை அலங்கரித்து விளங்கும் புலவர் பெருமக்களுக்கும் வாசித்துக் காட்டினன். ஆன்றவர் அனைவரும், "விடைகள் மிகமிகப் பொருத்தமானவை. தொண்டை நாடு சான்றோருடைத்து என்பதில் எள்ளளவும் ஐயமின்று" என்று கூறிக் களித்தனர். அரசனுக்கு "இத்தகைய நுண்ணறிவு படைத்தவரைத் தம் ஆட்சியில் அமைச்சராக அமையின் நாடு நலனுறுதற்கு ஏதுவாகும். 'அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்' என்று நம் முன்னோர் கூறிய முடிபும் இதுவன்றோ" என்று முடிவு செய்து, இவ்விடைகளை எழுதி விடுத்த

அறிஞரை அனுப்புமாறு மீண்டும் ஒரு திருமுகம் தீட்டித் தொண்டை நாட்டிற்கு அனுப்பத் தொண்டையர் கோன் சேக்கிழாரைச் சோழ மண்டலத்துக்கு அனுப்பி வைத்தான்.

குலோத்துங்க மன்னன் அருண்மொழித் தேவரை நன்முறையில் வரவேற்றுத் தம்மரசில் முதல் அமைச்சர் பதவி ஈந்து, உத்தம சோழப் பல்லவர் என்னும் பட்டமும் அளித்துப் பெருமை பெற்றான். சேக்கிழார் பெருமானும் தம் அமைச்சுத் தொழிலை மேற்கொண்டு இனிது அரசை நடத்திவந்தார். சேக்கிழார் பெருமான் அமைச்சர் இயல்பென வள்ளுவப் பெருந்தகையார் வகுத்துக் கூறிய சொல்வன்மை, வினைத்தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை, தூது, மன்னனைச் சேர்ந்து ஒழுகல், குறிப்பறிதல், அவையறிதல், அவையஞ்சாமை, முதலிய பண்புகளை மேற்கொண்டு தம் கடனை இனிது ஆற்றிவருவாரானார்.

## சேக்கிழாரைப் புராணம் பாட வேண்டல்

குலோத்துங்க மன்னன் அறிவுத்துறையில் அவாவுடையன் என்பது முன்னர்க் குறிப்பிடப்பட்டதன்றோ! ஆகவே, தன் அவையில் நல்லறிஞரைக் கொண்டு, நற்கவிகள் புலவற்றைப் பொருள் விரிக்குமாறு கேட்டு வந்தான். சேக்கிழாரும் உடனிருந்து கேட்டு வந்தார். இப்படிக் கேட்டுவந்த உத்தம சோழப் பல்லவரும் தாமும் சிலவற்றைச் சொல்லவேண்டும் என்னும் அவாவினால் தூண்டப்பட்டார். அரசனும் அவர் விருப்பத்திற்கு இணங்கக் கூறுமாறு வேண்டினான்.

அந்த வண்ணமே அருண்மொழித் தேவர் செயற்கரிய செயலைச் செய்து பெரியார்கள் எனப் பேர்பெற்ற அடியார்களின் வரலாற்றைக் கூறத் தொடங்கினர். அனபாயன் அன்புடன் சிவனடியார்களின் வரலாறு களை நாளும் நாளும் கேட்டு வருகையில், அவ் வரலாற்றில் தோய்ந்து போயினன். "எப்பொழுது பொழுது விடியும், இன்றைக்கு எப்பெரியார் வரலாற் றைச் சேக்கிழார் கூறப்போகின்றனரோ?" என்று நீர் வேட்கை மிக்கோன் அது கிடைத்தபோது, அதனை எவ வளவு ஆவலுடன் பருகுவானோ அப்படிச் சிவனடியார் கதையினைச் செவி மடுத்துவந்தான். சேக்கிழாரும் விடாது தனியடியார்களான சிவனடியார்கள், அறு பான்மூவர் வரலாற்றினையும், ஒன்பது தொகையடி யார்களின் வரலாற்றினையும் சொல்லி முடித்தார். சோழன், புலவர் பெருமானை நோக்கி, "ஐய! நீர் கூறிய வரலாறுகள் இம்மைக்கும் மறுமைக்கும் நலனளிக்கும் வரலாறுகளாக உள்ளன. இவ் வரலாற் றுக்குரிய குறிப்புக்களை நீர் எங்ஙனம் அறிந்தீர்? அறிந்தால் அதனையும் அன்புடன் அறிவியும்" என்ற னன். உடனே அருண்மொழித் தேவர், "அரச! சைவ சமயாசிரியர் நால்வருள் ஒருவரான தம்பிரான் தோழராம் ஆளுடைய நம்பிகள், தம் தேவாரமாகிய திருப்பாட்டில் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க் கும் அடியேன்" என்ற தொடக்கத்தினையுடைய பதி னொரு பாடல்கள் அடங்கிய பதிகம் ஒன்றை அருளிச் செய்தார். அதுவே திருத்தொண்டத் தொகை எனப் படும். இப்பதிகத்தினைச் சிறிது வகைப்படுத்தித் திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையார் திருவருள் பெற்ற

நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியார், திருத்தொண்டர் திருவந்தாதி என்ற பெயருடன் ஒரு நூலைப் பாடியுள்ளார். இவையே அன்றி இவர்கள் வரலாற்றை அறிதற்குச் சைவத் திருமுறைகளும் துணை செய்கின்றன" என்று அன்பும் அறிவும் துலங்க அறிவித்தனர். இவ்வாறு புலவர் புகலக் கேட்ட புரவலன், அன்பு மீதூரப் பெற்றவனாய், "அமைச்சர் ஏறே! இவ் வரலாறுகளை நீர் கூற இங்குள்ளார் யாவரும் கேட்டு மகிழ்ந்தனம். இத்துடன் இது மறைதல் தகுதியன்று. ஆகவே, இவ்வரலாறுகளை ஒன்பான் சுவைகளும் ஒருங்கே அமையக் காவியமாக அருளிச்செய்ய வேண்டுகிறேன்" என்று கேட்டுக்கொள்ளச் சேக்கிழார் பெருமானும் அதற்கு இசைந்தனர்.

## சேக்கிழார் தில்லையை அடைந்து புராணத்தை எழுதுதல்

உத்தமச் சோழப் பல்லவர் அனபாயனிடம் விடை பெற்றுத் திருத்தில்லையை அடைந்தனர். வளவர் கோமான் புலவர் கோமானுக்குப் பொருள் முட்டுப்பாடு தோன்றாவண்ணம் அவர் காவியத்தை முடித்து வைக்கும் அளவுக்கு வேண்டுவனவற்றை உடன் அனுப்பி வைத்தனன்.

சேக்கிழார் திருத்தில்லையை அடைந்து, திருக்குளத்தில் மூழ்கி, கூத்தப்பெருமான் திருமுன் நின்று, தேவாரத் திருமுறையினை ஓதி வணங்கி, "அம்பலவாணா! அடியேன் அடியார் வரலாறுகளைப் பாடும் பேறு பெற்றனன். அதனை இனிதின் முடிக்க நீரே அடியெடுத்து உதவவேண்டும். 'காண்பாரார் கண்

ஞுதலாய் நீ காட்டாக் காலே' என்பது அப்பர் பெருமான் அருள்வாக்கு அன்றோ?'' எனப் பணிந்து நின்றனர். வேண்டுவோர் வேண்டுவதே ஈயவல்ல இறைவராம், நடராசப் பெருமான், வானவெளியின் மூலம் 'உலகெலாம்' என்னும் தொடர்மொழியினை அங்குள்ளார் எவர் காதுகளிலும் படுமாறு அருளிச் செய்தனர். இந்த அற்புதத்தைக் கண்ணால் கண்டும், காதால் கேட்டும், அங்கிருந்த யாவரும் இறும்பூது எய்தினர். தில்லைவாழ் அந்தணர்களும் மற்றும் ஆண்டுக் குழுமி இருந்தோரும், உத்தமச் சோழப் பல்லவர் திரு நீறு பெற்று, ஆயிரக்கால் மண்டபத்தை அடைந்த போது உடன் தொடர்ந்து சென்றனர். சேக்கிழார் ஆண்டவன் தமக்கு அருள் செய்த "உலகெலாம்'' என் னும் மங்கல தொடரை முதலாக வைத்து,

"உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்''

எனப் பாடத் தொடங்கினர். உலகெலாம் என்னும் செம்மொழியே தம் நூலுக்கு ஆதாரமானது. ஆதலால், அதனை முதல் இடை கடை என மூவிடத் தும் வைத்துப் போற்றவேண்டுமென்பதற்காக, இடையில், திருஞானசம்பந்தர் இறைவனால் கொடுக்கப் பட்ட சிவிகையில் இவரும்போது இத்தொடரைப் பெய்து பாட்டமைத்தார். புராணத்தைப் பாடி முடிவு செய்கையிலும் ஈற்றில் இத்தொடரையே அமைத்துப் பாடி முடித்தார்.

# நூல் அரங்கேற்றமும் ஊர்வலமும்

ஓராண்டில் நூல் முடிந்தது. அனபாயன் நூல் முடிந்தது எனக் கேள்வியுற்றதும் தன் பரிவாரங் களுடன் திருத்தில்லையை அடைந்து சேக்கிழாரைக் கண்டான். சேக்கிழார் பெருமானின் மங்கலமாம் சிவவேடப் பொலிவைக் கண்டதும், தான் அரசன் என்பதும், புலவர் தம் அமைச்சர் என்பதும் மறந்தவ னாய்த் தன் இரு கரங்களையும் சிரமேல் குவித்தவனாய்ச் சேக்கிழாரை வணங்கினான். இறைவனும் அந்நூலைச் சேக்கிழாரே பொருள் விரிக்க அரசனைக் கேட்குமாறும் பணித்துள்ளான் ஆதலின், அந்நூலைப் பொருள் விரிக்கப் புலவரை வேண்டினன். சேக்கிழார் பெருமானும் அந் நூற்பொருளை இலக்கண இலக்கியச் சான்றுகளுடன் விரித்துக் கூறி வந்தனர். புராணப் பிரசங்கமும் ஓர் ஆண்டில் முடிவுபெற்றது. இவ்வோர் ஆண்டில் திருத்தில்லை பொலிந்த பொலிவு, புகல ஒண்ணாததாய் இருந்தது. எண்திசையினின்றும் எண்ணிறந்த மக்கள் வந்து, புராணச் சொற்பொழிவைக் கேட்டு இன்புற்று வந்தனர். வெளியூர் வாசிகள் வந்து தங்குதற்கான வேண்டிய வசதிகளை அனபாய மன்னனும் ஏற்பாடு செய்திருந்தனன்.

புராணத்தைக் கேட்டவர்கள் சேக்கிழார் பெரு மானைப் பலபடப் பாராட்டிப் பேசினர். "கரிய கடலையும் நீந்திக் கரையைச் சேரலாம். கடற்கரையில் இருக்கும் நுண்மணலையும்கூட எண்ணிவிடலாம். விண்ணில் விளங்கும் விண்மீன்களையும் விரல்விட்டு எண்ணிவிடலாம். அளக்கரில காணும் அளவற்ற

மீன்களையும் அளவிட்டுவிடலாம். ஆனால், சிவனடியார்களின் வரலாற்றைச் சொல்லுதல் அரிதினும் அரிது. அவ்வரலாற்றைச் சொல்லவல்ல அருகர் சேக்கிழாரே அன்றி, வேறு எவரும் அல்லர்; அல்லர்'' என்று புகழ்ந்தனர் ஒருசிலர். மதுர கவியாய, ராமாயணத்தை எழுதிய வான்மீக முனிவரையும் இவருக்கு ஒப்புக்கூற இயலாது. ஐந்தாம் வேதமென அறையப் படும் மகாபாரதத்தைப் பாடிய வேதவியாச முனிவரும் இவருக்கு நிகர் என நிகழ்த்த இயலாது. வடமொழி இலக்கணமாகிய வியாகரணத்தை எழுதியருளிய பதஞ்சலி முனிவரும் ஈடாகார். முத்தமிழ் மொழிந்த உத்தம முனிவராம், அகத்திய முனிவரும் உவமை கூறுதற்கு உரியர் ஆகார்'' என உரையாடிக் கொண்டாடினர் ஒருசிலர். ''வெண்டாமரையில் விளங்கும் கலைமகள் தன் இருப்பிடமான தாமரையையும் மறந்து சங்கப் புலவர் நாவினின்றும் நீங்கி, தன் கொழுநனது நாவினின்றும் விலகி, சேக்கிழார் நாவிற் குடிகொண்டிருந்து இவ்வாறு பாடச் செய்தனளோ'' எனப் பகர்ந்து பரவசமுற்றனர் ஒருசிலர்.

இத்தகைய சிறப்பினுக்குக் காரணரான புலவர் பெருமானையும், அவரால் யாக்கப்பட்ட நூலாகிய திருத்தொண்டர் புராணத்தையும், யானையின் மீது அமர்த்தி, ஊர்வலம் நடத்த எண்ணங்கொண்டான் வளவர் கோமான். அவ்வாறே நூலையும், சைவத் திருமுறைகள் பதினொன்றனையும், புலவரையும் மாதங்கத்தின் மீது மாண்புற அமர்த்தித் தான் பின்பிருந்து வெண்கவரி வீசி, வீதி வழியே மாபெரும் உலாவினை நடத்தி வைத்தான். திருவுலாவும் இனிது முடிந்தது.

இறைவன் திருக்கோயிலுள் புகுந்து யாவரும் வணங்கினர். அரசனும அகமிக மகிழ்ந்தவனாய்த் தன் வாக்கால் முன்பு, முதல் அமைச்சுத் தொழில் உரிமை ஈந்தபோது உத்தம சோழப் பல்லவர் என்பதைச் சூட்டியது போலத் திருத்தொண்டர் சிறப்பினைச் செப்பிய காரணததால் தொண்டர் சீர் பரவுவார் என்னும் திருப்பெயரையும் சூட்டி மகிழ்ந்தனன். எல்லாரும் மகிழ்வுடன் கரகோஷம் செய்யச் சேக்கிழார் பெருமானுக்குச் சிறப்புகள் பல செய்யப்பட்டன. பின்னர் திருத்தொண்டர் புராணமாம் பெரிய புராணம் இறைவன் அடி எடுத்துக் கொடுக்கப்பட்ட நூல் ஆதலின், இதனையும் சைவத் திருமுறை பதினொன்றுடன் சேர்த்துச் சைவத் திருமுறை பன்னிரண்டென முறைப்படுத்தப்பட்டது.

## சைவத் திருமுறைகளும் சிறப்பியல்புகளும்

ஆளுடைய பிள்ளையார் அருள் வாக்காகிய திருக்கடைக் காப்பு, முதல் மூன்று திருமுறைகளாகவும், ஆளுடைய அரசுகள் பாடிய தேவாரம் நான்கு முதல் ஆறு திருமுறைகளாகவும், ஆளுடைய நம்பிகள் பாடிய தேவாரமாகிய திருப்பாட்டு ஏழாவது திருமுறையாகவும், ஆளுடைய அடிகளார் பாடிய திருவாசகம் எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பா திருப்பல்லாண்டுகள் ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் பாடிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும திருவாலவாய் திருமுகப் பாசுரம் முதலாக நபபியாண்டார் பிரபந்தங்கள் ஈறாக உள்ள பாடல்கள் பதினோராம் திருமுறையாகவும் பெரிய புராணம்

பன்னிரண்டாம் திருமுறையாகவும் சைவத் திரு முறைகள் திகழ்ந்துகொண்டிருக்கின்றன.

முறை என்பது ஒழுங்கு. இலக்கண இலக்கிய ஒழுங்குகள் அமைய நூல்கள் செய்யப்படுதலின் நூல்களை 'முறை' என்று நம் முன்னோர்கள் குறித்து வந்தனர். இங்குக் குறிப்பிடப்பட்ட நூல்களாகிய முறைகள் இறைவனது புகழ்களையும் அடியார்களது அன்பையும் ஒழுங்குறப் பேசப்படுதலின், திரு என்னும் அடை கொடுக்கப்பட்டுத் திருமுறையெனப் பேசப்படுகின்றன. திரு என்னும் சொல் அழகு, சிறப்பு, கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்; என இன்னோரன்ன பொருள் தந்து நிற்றலின், திருமுறைகள் பன்னிரண்டும் அழகுடையனவாய், சிறப்புடையனவாய், கண்டோரால் விரும்பப்படுவனவாய் ஈடும் எடுப்பும் அற்று விளங்கிக்கொண்டிருக்கின்றன. இத் திருமுறைகள் பன்னிரண்டும் 'ஓம்' என்னும் ஓர் எழுத்து ஒரு மந்திரமாகிய பிரணவ மந்திரமாகத் திகழவல்லன. இதனை இத்திருமுறைகள் அமைந்துள்ள ஒழுங்குமுறையினின்றே நன்கு அறியலாம். முதற் திருமுறையின் முதற்பாவானது 'தோடுடைய செவி யன்' என்று தொடங்கப்பட்டுப் பன்னிரண்டாம் திரு முறையின், ஈற்றுப்பாடல் 'உய்ய உலகெலாம்' என்று முடிதலின் 'தோ' என்னும் எழுத்தில் உள்ள 'ஓ' என்னும் எழுத்தும், உலகெலாம் என்னும் சீரில் உள்ள ஈற்று 'ம்' என்னும் எழுத்தும், இணைந்தபோது 'ஓம்' என்று ஆவதை அறிந்து இந்த உண்மையை உணர்க. ஆகவே, இத்திருமுறைகள் பிரணவம்தான் என்பது ஐயமின்றி அறியக்கிடக்கின்ற

தல்லவா? இச்சீரிய கருத்துப் பெரிய புராணம் பன்னி ரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்ட பின்னர் இன்னோரன்ன விளக்கங் கேட்ட அனபாயன் தான் செய்த அரிய செயற்கு உளமிக மகிழ்ந்தனன். தொண் டர்சீர் பரவுவார்க்கு மேலும் பல வரிசைகள் ஈந்து உவகை யெய்தினன். சேக்கிழார் பெருமானும் திருத் தில்லையின்கண் வாழ்ந்து,

"ஊன டைந்த உடம்பின் பெறும்பயன்
தான டைந்த உறுதியைச் சாருமால்,
தேன டைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மான டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ"

என்று தாம் பாடிய செய்யுட்கே, தாமே எடுத்துக் காட்டாகத் திகழ்ந்து, கூத்தப் பெருமானைக் கும்பிட்டு வாழ்ந்துவரலானார்.

## சேக்கிழார் பெருமையும் நூலின் சிறப்பும்

சேக்கிழார் பெரும் புலவர் வரிசையில் வைத்துப் பேசக்கூடிய பெருமை சான்றவர். எங்ஙனம் திருவள்ளு வர் 'தெய்வப் புலவர்' என எவரும் கூறும் பேறு பெற்று வருகின்றனரோ அங்ஙனமே இவரும் 'தெய்வப் புலவர் சேக்கிழார்' என்னும் சீரிய நாமம் பெற்றவர்.

சேக்கிழார் நூல் ஆசிரியர் மட்டும் அல்லர்; அவர் சிறந்த போதகாசிரியர், ஞானாசிரியர், உரையாசிரிய ராகவும் பொலிந்தவர். அடியார்களின் வரலாற்றை விரித்துப் பாடியுள்ளமையின் நூல் ஆசிரியர் ஆகின்

ருர். பரசமயக் குழியில் படாவண்ணம் பல பாடல்களைப் பாடிப் போதித்தலின் போதகாசிரியராய்ப் பொலிகின்ருர். ஆண்டவனை அடைதற்கு ஞான மார்க்கச் செய்யுள் பல செப்பியிருத்தலின் ஞானுசிரியராய் நவிலப்பெறுகின்ருர். திருப்பதிகங்கள் சிலவற்றிற்கு விரிவுரை கூறி இருத்தலின் உரையாசிரியராய் உரைக்கப்படுகிருர். இவரை வடநூற் கடலும் தென்னூற் கடலும் நிலை கண்டுணர்ந்த சிவஞான முனிவர் 'எங்கள் பாக்கியப் பயனுய்ப் பதி குன்றைவாழ் சேக்கிழானடி சென்னி யிருத்துவாம்' என்றும், 'குன்றைநகர்க் குலக்கவியே வல்லான் அல்லால் கருத் தொண்டர் எம்போல்வார் எவ்வாறு தெரிந்துரைப்பர்' எனத் தம் வாயார உளமாரப் புகழ்கின்ருர். மகா வித்துவான் திரிசிரபுரம் மீனுட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள், "கல்லும் கரையக் கவிபாடும் கனிவாய்" என்றும், "முதிரும் அருட்கவி பாடிய புலவன்" என்றும் 'பத்திச் சுவைநனி சொட்டச்சொட்ட கவி பாடிய வலவ' என்றும் பாடிப் பரவசமுறுகிருர். தமிழில் தலைசிறந்த நூல்கள் இன்னின்ன என எடுத்துக் கூற வந்த கொற்றவங்குடி உமாபதி சிவாசாரியர், சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தையும் உடன் சேர்த்து உரைப்பதனுல் இந்நூலாசிரியர் இசையும், நூற் பெருமையும் நன்கு விளங்குகிறதன்றே ?

> "வள்ளுவர் செய்குறளும் வாசகம்தொல்
> காப்பியமே
> தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—
> ஒள்ளியசீர்

தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந் தரம்''

என்பது அவ்வொப்புயர்வற்ற பாடல்.

## சேக்கிழார் கவிநயம்

சேக்கிழார் கவிகள் சொல் நயம் பொருள் நயம் முதலிய பல நயங்கள் நிரம்பப்பெற்றவை. எந்தச் செய்யுளும் பொருளாழம் பொலியப் பாடப்பட்டுள் ளன. செய்யுள் நயத்திற்கு எடுத்துக்காட்டாகப் பலவற்றை எடுத்துக் காட்டுதற்கு இஃது இடம் அன்மையின, தாலிபுலாக நியாயம் பற்றி ஓர் இடத்தை மட்டும் ஈண்டு உணர்த்துவோமாக.

சேக்கிழார் உவமை கூறுகையில் நன்கு சிந்தித்துப் பொருந்தப்புகலவல்லவர். நாயன்மார்களின் வரலாறும், புகழும் கடல் போன்றவையெனக் கழறினர். அக்கடல் நீரைப் பருகுவது போன்ற ஆசையுடையவராகத் தம்மை அமைத்துக்கொள்ளத் தம்மைச் சுணங்க ஞகச் சொல்லிக்கொண்டார். அப்படிச் சொல்ல வந்தவர் சிறிது சிந்தித்துப் பார்த்தனர். அச் சிந்தனை " கடல் நீரைப் பருக ஒண்ணுமோ? அது உப்புகரிக்கும் நீராயிற்றே '' என ஆராயத் தூண்டி யது. அடியவர்களது பரந்த அன்புக்கும் பெருமைக் கும், கடலையன்றி உவமை காட்ட வேறு பொருத்த மான சொல் இன்று. ஆகவே, அவ்வுவமை கூறியவர் அதனையும் மாற்றுதல் கூடாது. நீரைப் பருகும் நிலை யிலும் பாடலை அமைக்கவேண்டும். அறிவுடைப் புல வர்க்கு இஃதோர் அரிய காரியமா? ஆகவே, பருகும்

நீராக அமையுமாறு ஊற்று நீரைத் தம் செய்யுளில் பெய்துகொண்டார். நாயெனத் தம்மை உவமை கூறிய திலும் ஒரு நயம் தோன்ற அமைத்துக்கொண்டார். "ஆற்றில் வெள்ளம் போயினும் நாய் நக்கியே குடிக்க வேண்டும்" என்பது பழமொழியல்லவா? அதுபோல அடியார் அன்பும பெருமையும் பரந்து மிகுந்து காணப்பட்டாலும் சிறிது சிறிதே செப்ப இயலும் என்பதையே உணர்த்துவார் போல் நாயினை உவமை காட்டினர். தாம் உய்ய அடியார்களது வரலாற்றைக் கூறும் பேறு கிடைத்தமைக்கு நன்றி காட்டுவார் போலச் சுணங்களை உவமையாகச் சொற்றனர் எனச் சொல்லினும் பொருத்தமே. நாய் நன்றியறிவுடைய உயிர் அல்லவா? இத்தனை நயம் அமைந்த பாடலை இதோ பாருங்கள்!

"தெரிவ ரும்பெரு மைத்திருத் தொண்டர்தம்
பொருவ ருஞ்சீர் புகலலுற் றேன்முற்றப்
பெருகு தெண்கடல் ஊற்றுண் பெருநசை
ஒருசு ணங்களை ஒக்குந் தகைமையேன்"

இன்னோரன்ன பொருள்நயம் பொலிந்த பாடல்கள் நூல் முழுமையும் இருத்தலின் அவற்றினைப் படித்து இன்புறுவது உம் கடமையாகும்.

---

# 4. கம்பர்

## குடிப்பிறப்பும் வளர்ப்பும்

கம்பர் வாழ்க்கையின் வரலாற்றை மாணவர்கள் அறியவேண்டியது இன்றியமையாததாகும். ஆனால், இவருடைய பிறப்பு வளர்ப்புக்களைப் பற்றிய வரலாறு இருளில் மறைந்திருக்கும் செல்வத்தைப் போன்று புதைபட்டுக் கிடக்கின்றது. ஆகவே, ஈண்டுக் கூறப் படும் கம்பரது வரலாறுகள், பெரிதும் செவி மரபு வரலாறுகளேயாகும்.

சோறுடைத்தென்னும் தொல்சீர் பரவிய நாடா கிய சோணாட்டின்கண் கம்ப நாடு என்னும் சிற்றூர் ஒன்று இருந்தது. அதை ஆட்சி புரிந்துவந்த சிற்றரசன் ஒருவன் மாற்றானுடன் பொருது, வீர சுவர்க்கம் எய்தி னான். அவ்வமயம் சூல் கொண்டிருந்த அவன் மனைவி, திருவழுந்தூருக்கு ஓடி, அவணுள்ள காளி கோயிற் பூசாரியாகிய ஒச்சன் ஒருவனிடத்தில் அடைக்கலம் புகுந்தாள்; சின்னாளில் அவனது இல்லிலேயே ஆண் மகவொன்றையும் பெற்றெடுத்து உயிர் நீத்தாள். ஆகவே, அக்குழந்தையாகிய கம்பர் ஒச்சனால் சில் லாண்டுகள் வளர்க்கப்பட்டார் என கூறுகின்றனர். "சிரணி சோழ நாட்டுத் திருவழுந்தூர் உவச்சன்" என்னும் வாக்கியத்தினால் இஃது வலியுறுத்தப்படுகின் றது. "தம் மைந்தனாகிய அம்பிகாபதியைக் கொன்ற அர் சனைப் பழிவாங்கவேண்டுமென்னும் எண்ணத்துடன்

ஏற்ற வாய்ப்பினை எதிர்நோக்கிக்கொண்டிருந்த கம்பர், 'காட்டானை விட்டாலும் கவியானை விடாது' என்ற வாறு அரச குமாரன் வேட்டையின் பொருட்டுக் காட்டிற்குச் சென்றபோது, கம்பர் அவண் அடைந்து, அரச குமாரனைக் குத்திக் கொன்றார்'' என்னும் செய்தியைக் கொண்டு ஒருசிலர், இவர் அரச பரம்பரை யில் தோன்றியவர் என்று கருதுகின்றனர். இவ் வையம் தோன்றியதற்குக் காரணம் இவர் 'கம்ப நாடுடைய வள்ளல்' எனக் குறிக்கப்பட்டதனால் என்க.

மற்றொரு சாரார், ''கம்பர் சோழ நாட்டைச் சேர்ந்த திருவழுந்தூர் வேளாள குலத்தைச் சார்ந்த ஆதித்தன் என்பவருக்கு மகவாகத் தோன்றினார்'' எனக் கூறுகின்றனர். 'மன்றே புகழும் திரு வழுந்தூர் வள்ளல்' என்னும் தொடர் இதற்குத் துணை புரிவது. கம்பர், திரு அபிடேகப் படலத் தில், 'வெண்ணெயூர்ச் சடையன் தங்கள் மரபு ளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி' எனப் பாடியும், சடகோபரந்தாதியில், 'குருகூர் எம் குலக் கொழுந்தே' என்று நம் மாழ்வாரைப் போற்றியும், ஏரெழுதிபதில் 'உழுங் குலத்தில் பிறந்தாரே உய்யப் பிறந்தாரே.' என்று வேளாளர் மாண்புகளைச் சிறப்பித்து இருக்கிறார். மேலும், கம்பர் தம் மாணுக்கராகிய சைவ வேளாள வகுப்பைச் சேர்ந்த ஏகாம்பவாண முதலியாருடனும், சடையப்ப வள்ளலுடனும், தமிழ் வேந்தராகிய மூவேந்தருடனும் சம பந்தியில் அமர்ந்து உண்டார். எனக் கேட்கப்படுதலினாலும், இவர் வேளாளர் குலத்

[library stamp]

தைச் சார்ந்தவர் என அறுதியிட்டு உறுதிப்படுத்திக் கூறுகின்றனர்.

## பெயர்க் காரணம்

தாய் தந்தையர்கள் இவருக்கு இட்டு வழங்கிய முதற்பெயர் கம்பன் என்பர் சிலர்; இது முக்தி தரும் நகரங்கள் ஏழினுள் ஒன்றாகிய காஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனாரின் திருப்பெயராகிய 'ஏகாம்பர நாதர்' என்பதன் மரூஉப் பெயரேயாகும். வேறு சிலர், "இளமையில் கம்பத்திற்கு ஒப்ப அறிவிலியாக இருத்தலை அறிந்து, அக்கால மக்கள் இவரைக் கம்பர் எனப் பெயரிட்டு அழைத்துவந்தனர்" என்றனர்; "தம் ஆசிரியரது கம்பங் கொல்லையைக் காத்ததனால் இப்பெயர் வழங்கிற்று" என்றனர் பிறிதொரு சாரார். இவர் காளி கோயிலில் கம்பத்தினடியில் கண்டெடுக்கப்பட்டவராதலால், கம்பர் என அழைக்கப்பட்டனர் என்றும், கையிலே கம்புடன் சோழன் முன்னிலையில் சென்றபோது, அவன் 'இக்கம்பனா இத்தகைய அருஞ்செயல் புரிந்தான்?' எனக் கேட்டதனால், கம்பர் எனும் பெயர் உண்டானது என்றும் கூறுகின்றனர்.

இவரது முன்னோர்கள் 'கம்ப நாடு' என்னும் சிற்றூரில் வாழ்ந்து வந்தவர்களாதலால், அவ்வழித் தோன்றலாகிய இவருக்கு அந்நாட்டின் பெயரை அமைத்து, 'கம்ப நாடன்' என வழங்கிவந்தனர் என்பாரும் ஒருசிலர் உளர்.

இவர் தாம் இயற்றிய இராமாயணத்தை எடுத்துக் கொண்டு திருவரங்கத்திற்குச் சென்று, அந்நூலை

அரங்கேற்றுகையில், திருவரங்க வைணவப் பெரியார் கள், இராமரிடத்தில் அன்னார் வைத்துள்ள பூரண பக்தியைக் கண்டு மெச்சி, தங்கள் மரபின் முறைப்படி ஆழ்வார் எனும் திருப்பெயரை அமைத்து, 'கம்ப நாட்டாழ்வார்' என்று அழைத்து, சிறப்பித்துப் புகழ் மாலை சூட்டினார்கள் எனவும் கூறப்படுகிறது.

## வரகவி ஆதல்

தமிழ் நாட்டுப் புலவர்களில் பலர், தங்கள் இளமையில் நல்லாசிரியர்களை அடுத்து, தமிழ் மொழி யின் கண்ணேயுள்ள செய்யுள், உரைநடை நூல்களை யும், இலக்கண நூல்களையும் ஐயந்திரிபறக் கற்று, அறிஞர் பெருமக்கள் முன்னிலையில் பல வாதப் போர்கள் நிகழ்த்தி, இறுதியில் தாய் மொழியாம் தமிழ் மொழியில் பேரறிவினைப் பெற்ற சிறந்த புலவர்கள் எனப் பல்லோரால் கருதப்பட்டு வந்தனர்; வருகின்ற னர்; வருவர். கம்பர் இளமைப் பருவத்தில் மிகவும் சிறுவராயிருக்கும்போது சடையப்ப முதலியாரின் மைந்தனுடன் சில திங்கள் கிராமப் பள்ளிக்கூடத் திற்குச் சென்று வந்தாரேயொழிய, வேறு எந்த ஆசிரியரையும் அண்டிக் கல்வி கற்றதாக யாம் இது வரை கேட்டறிந்ததில்லை. எனவே, நம் செம்மல் இளமையிலிருந்தே கவி பாடும் திறமை வரப்பெறறவ ராஞர். இதுபற்றித் தமிழ் மக்களில்பலர் கதைகள் பல புனையத் தொடங்கினர்.

இவர் சிறுவராயிருக்கும்போது ஒரு நாள், வைரவ புரத்திலுள்ள ஆசிரியருக்குச் சொந்தமான கம்பங்

கொல்லையைப் புள், விலங்கு முதலியவைகளி னின்றும் காத்தற்பொருட்டுப் பள்ளி ஆசிரியரால் அனுப்பப்பட்டார். அவ்வூர் காளிங்கராயன் என்னும் சிற்றரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. உடனே கம்பரும் ஆசிரியரின் ஆணைக்கடங்கி, வைரவபுரம் சென்று, கம்பங்கொல்லையைக் கண்ணினை இமை காப்பது போன்று காத்துவந்தனர். அப்பொழுது கதி ரோன் தன் ஒளிபொருந்திய கதிர்களை அள்ளி அள்ளி உலகெங்கும் வீசியவாறு ஆகாய வீதியில் உலாப் போந்தனன். உலகிலுள்ள பல்லுயிர்களனைத்தும் அக்கதிர்களின் வெம்மையால் ஆற்றவொண்ணாது அல் லற்பட்டன. கம்பரும், அவ்வல்லலுக்கு ஆளாயினர். ஆகவே, கம்பர் வெயிலின் கொடுமையைத் தாங்க இய லாமல், நிழலுள்ள ஓர் இடத்தை நாட நாற்பக்கத்தும் தம் நாட்டத்தினைச் செலுத்தினார். அவ்வமயம் கொல்லையின் மருங்கே பெரிய காளிகா தேவியின் திருக்கோயிலொன்று இவ்விளைஞர் கண்ணுக்குப் பட்டது. உடனே கம்பர் நிழலின் இன்பத்தைத் துய்க்க எண்ணி, மனமகிழ்ச்சி யுற்றவராய், அக்காளி கோட்டத் திற்கு விரைந்து சென்று, மாபெரும் மண்டபத்தில் அமர்ந்து, சிறிதுநேரம் தம் களைப்பைத் தீர்த்துக்கொண் டார். சில விநாடிகள் கழிந்ததும், உறக்கம் இவரைத் தன் வயமாக்க முயன்றது. எனவே, சிறுவர் ஆசிரயரது ஆணையையும் மறந்து, அருந்துயிலில் இன்பமாக ஆழ்ந் தார். அவ்வமயம் காளிங்கராயனது குதிரை யொன்று தம் ஆசிரியரின் கம்பங்கொல்லையில் நுழைந்து, கம்பங் கதிர்களைத் தின்றுகொண்டிருப்பதாகக் கனவு கண்டார்; கண்டதும் துணுக்குற்றெழுந்து, கம்பங் கொல்லையைக்

கடுகி அடைந்தார். தாம் கண்ட கனவு நனவானதைக் குறித்துத் துன்பத்திற்குள்ளாகி, அக்குதிரையை அக் கொல்லையினின்றும் விரட்டப் பெரிதும் முயன்ருர். ஆனால் கம்பர் கையாண்ட முயற்சிகள் அனைத்தும் வீணாயின. தம் முயற்சிகள் வீணாயினமையையும், மென்மேலும் அக்கொடிய குதிரை கம்பங்கொல்லையைப் பாழ்படுத்துவதையுங் கண்ட கம்பர், இதையறிந்தால் ஆசிரியர் தண்டிப்பரே என்று அஞ்சி, துயரம் தொண்டையை அடைக்க 'ஓ'வெனக் கதறியவாறு தேவியின் திருக்கோயிலை அடைந்தார். மக்களின் துன்பங்களைக் கண்டு இரங்கும் காளிகாதேவியின் திருச்செவிகளில் கம்பரின் கதறல் மோதிற்று. உடனே தேவியார் கம்பரிடம் இரக்கக்கொண்டு, காத்தற் பொருட்டு, சிறுவர் முன்னிலையில் தோன்றி, இவரது நாவில் பீசாட்சர மந்திரத்தை எழுதி, மறைந்தார். அது முதற்கொண்டு கம்பர் கவி பாடுவதில் வல்லுநரானார். முன்பின் சிந்தியாமல் அவர் கம்பங் கொல்லைக்கு விரைந்து சென்று, அங்கு மேய்ந்துகொண்டிருக்கும் அப்பொல்லாக் குதிரையைப் பார்த்து வெகுண்டு, 'காலை வைத்துச் சாய்த்துக் கதிரை மாளத் தின்னும் காளிங்கராயன் குதிரை மாளக் கொண்டு போ.' என்னும் ஈற்றடிகளையுடைய வெண்பாவைப் பாடினார். அச்செய்யுளைப் பாடியதும், மேய்ந்து கொண்டிருந்த குதிரை திடீரெனக் கீழே சாய்ந்து உயிர் துறந்தது. இச்செயலைக் கண்ட தினைப்புல மக்களில் சிலர், கம்பங்கொல்லைக்குரியவரான கம்பரின் ஆசிரியரிடத்தில் சென்று அறிவித்தனர். உடனே ஆசிரியர் விரைந்து தம் கம்பங் கொல்லைக்குச் சென்று,

மாணுக்கர் பீடுடன் நின்றுகொண்டிருத்தலையும், கவினமா கம்பங் கொல்லையில் வீழ்ந்திருத்தலையுங் கண்டார்; அண்மையில் சென்று உற்றுப் பார்க்க, அக்குதிரை காளிங்கராயனுடையது என்பதை அறிந்ததும், உடல் வியர்க்க, மெய் நடுங்க, கைகளை நெறித்துக் கொண்டு, இன்னது செய்வதென்பது தெரியாமல், மாணவரின் முகத்தை முறைத்துப் பார்த்தார். ஆசிரியரின் கோபப் பார்வையையும், உட்குறிப்பையும், நொடிப்பொழுதில் அறிந்துகொண்ட கம்பர், காளிகா தேவியைப் பரவிக் 'காளிங்கராயன் குதிரை மீளக் கொண்டுவா,' என்ற ஈற்றடிகளையுடைய ஒரு வெண் பாவைப் பாடினூர். உடனே இறந்த குதிரை உயிர்பெற்றெழுந்து, அக்கொல்லையினின்றும் வெளிப் போந்து, தன் இருப்பிடம் அடைந்தது.

இவ்வற்புதச் செயலைக் கண்ணுற்ற ஆசிரியரும், ஆங்குக் குழுமி யிருந்த ஏனைய தினைப் புல மக்களும் கம்பரின் கல்வித் திறனைக் கண்டு மெச்சிப் போற்றிப் புகழ்ந்தார்கள். குதிரையின் வரலாற்றை யறிந்த அதன் உரிமையாளனாகிய காளிங்கராயனும் பெரிதும் வியந்து, கம்பரை வருவித்துப் பரிசுகள் பல ஈந்து, அவரிடம் பெரு மதிப்புக் கொண்டான். இதுமுதல் அவர் கவி பாடும் பேறுபெற்றனர் என்பர்.

## கம்பரது நன்றி மறவாக் குணம்

சோழ நாட்டிலுள்ள திருவெண்ணெய் நல்லூர் என்னும் ஊரில் சடையப்ப முதலியார் என்னும் ஒருவர் இருந்தார். அவர் பெருஞ் செல்வந்தராயும், சிறந்த

வள்ளல் தன்மை பொருந்திய வண்மைக் குணமுடையராயும் வாழ்ந்துவந்தார்; இவர் சரராமர் என்னும் மற்றொரு பெயராலும் அழைக்கப்பட்டார். இவர் கம்பரின் ஆதரவற்ற நிலைமைக்கிரங்கி, தம்மூருக்கு அவரை அழைத்து, ஆதரித்துவந்தார்; மேலும் அவருக்குத் திருமணம் முதலிய நற்காரியங்களைச் செய்வித்து, தாம் உடலுள்ளவரையில் அன்னாரைப் பாதுகாத்துவந்தார். இத்தகைய வள்ளல் கம்பர் மகனாகிய அம்பிகாபதிக்குத் திருமணம் நடந்தபோது, அத்திருமணத்திற்கு வந்தார். அவ்வமயம் கூட்டம் மிக்கியிருந்ததனால், இடமின்மையைக் கண்ட வள்ளல், ஒருவரும் இருப்பதற்கு வெறுக்கும் சாக்கடை வரம்பில் முன்பின் சிந்தியாமல் சென்று, அதன்மேல் நின்றுகொண்டார். அதனைக் கம்பர் உற்று நோக்கியும் வாளாவிருந்தார். இது பற்றிக் கம்பரின் நன்மனைவியார் தம் கணவனாரைக் கடிந்துகொண்டபோது "பெண்ணே! என் வள்ளல் அப்பனை நான் வைக்குமிடத்தில் வைத்துப் போற்றுவேன். மனவருத்தங்கொள்ளாதே!" என கூறிக் காரிகையைக் கையமர்த்தினர். அவ்வாறே நன்றியறிவுள்ள குணசீலரான கம்பர், தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலைத் தமது இராமாயணத்தில் பத்து இடங்களில் புகழ்ந்து பாடியுள்ளார். அவ்வடிகளில் சிலவே,

'வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய் அண்ணல் தன் சொல்லே யன்ன.' "வெண்ணெய்ச் சடையன் புகழ்போல்' 'அறைபுகழ்ச் சடையன் வெண்ணெயுள் தஞ்சம் என்றோர்களைத் தாங்கும் தன்மை போல்' என்னும் தொடர்கள். இத்தொடர்

களால் கம்பர் செய்ந்நன்றி யறிவுடையவர் என்பது தெள்ளிதில் விளங்காநிற்கின்றது அன்றோ?

## சோழ சமஸ்தானத்து வித்துவானதலும் இராமயாணம் இயற்றலும்

கம்பர் காளிகா தேவியின் அருள் பெற்றவர் என்பதையும், கம்பங்கொல்லையில் மேய்ந்துகொண்டிருந்த காளிங்கராயன் குதிரையைக் கவி பாடி இறக்கவும், உயிர்பெற்றெழவும் செய்தவர் என்பதையும், கவி பாடுவதில் இணையற்ற திறமையுள்ளவர் என்பதையும் திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் கேள்வியுற்ற சோழ மன்னனாகிய குலோத்துங்க சோழன், கம்பரைத் தன் ஆஸ்தான வித்துவானாக அமர்த்திக் கொள்ள எண்ணியவனாய்த் தன் கருத்தை வள்ளலுக்கு அறிவித்தான். அரசனது கருத்தைச் சடையப் வள்ளலும் ஆதரித்தார். வரகவியாகிய கம்பரைச் சோணாட்டின் தலைநகராகிய உறையூருக்கு அழைத்துச் சென்று, சமஸ்தானப் புலவராக நியமித்தார். சோழனும் களிப்பெனுங் கடலில் ஆழ்ந்து புலவரைப் போற்றிப் புகழ்ந்ததுமன்றிப் பரிசுகள் பலவற்றையும் ஈந்து பெருமைபடுத்தினான்.

கம்பர் இராமரிடம் கொண்டுள்ள அன்பின் காரணமே, இவர் இராம சரிதையை இயற்றினார் என்பது, அவரது பாடல்களில் சிலவற்றால் அறிய கிடக்கின்றது. 'ஆசை பற்றி அறையலுற்றேன், மற்றிக்காசில் கொற்றத்து இராமன் கதையரோ' என்பது கம்பர் வாக்கு.

இவரது காலத்தில் வடமொழியில் வால்மீகி இராமாயணத்தின் சீரிய உயர்வினைக் கண்ட சடையப்ப வள்ளல் செந்தமிழ்ப் பாக்களில் வடமொழியினின்றும் மொழி பெயர்த்தால், இராம சரிதையைத் தமிழ மக்கள் இன்புடன் கற்பார்கள் என்னும் பேராவல் கொண்டார்; அவ்வாறு தீந்தமிழில் பாடும் ஆற்றலுள்ளவர் கம்பர் என்பதை அறிந்தார்; உடனே தம் கருத்தையும் கம்பருக்குத் தெளிய உரைத்தார். கம்பரும் தம்மை ஆதரித்த வள்ளலின் மனங்கோணு வாறு, அவரது கருத்திற்கிசைந்தார். இதனைச் சோழ மன்னனுக்கும் அறிவித்தார். சோழன் மனம் மகிழ்ந்து ஒட்டக்கூத்தரையும் வரவழைத்து, இராம சரிதை யைப் பாடுமாறு கேட்டுக்கொண்டான். அவ்விரு புலவரும் மன்னன் கருத்திற்கிசைந்தனர்.

ஒட்டக்கூத்தர் பால காண்டம் முதல் ஐந்து காண்டங்களைப் பாடி, ஆறும் காண்டத்தில் கடல் காண் படலத்தையும் பாடி முடித்தார். ஆனால், கம்பரோ கடவுள் வணக்கமும் பாடாமல் வாளாவிருந்தார். சோழன் அவ்விரு புலவர்களையும் வரவழைத்து, இராம சரிதத்தின் முடிவைப் பற்றி வினவினான். உடனே ஒட்டக் கூத்தர், தாம் ஆறும் காண்டத்தில் கடல் காண் படலம் வரையில் பாடியிருப்பதாகக் கூறினார். ஆனால், கம்பர் கடவுள் வணக்கமும் பாடாதிருந்தும், கடல் காண் படலத்திற்கு அப்பாலுள்ள திருவணைப் படலம் வரை தாம் பாடியுள்ளதாகப் பொய்யுரை புகன்றனர். "பொய்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்" என்பது அவர் கொள்கை போலும்.

அக்கூற்றைக் கேட்ட அரசர், இயற்றிய செய்யுட்களை விளக்கியருளுமாறு கம்பரை வேண்டினன். அக்கணமே கம்பர் நாமகளின் திருவருளால் திருவணைப் படலத்தை மட்டும் எழுபது செய்யுட்களில் பாடிமுடித்து,விரிவுரை ஆற்றினர். அவற்றில் வானர வீரர்கள் கடலில் அணை கட்டுதற்பொருட்டுப் பெரும் மலைகளைக் கொணர்ந்து நீரில் போட்டதனுல், நீர்த்துளிகள் வேகமாகத் தெறித்தன என்பதைப்பற்றி விளக்கிக்கொண்டு வருகையில், 'துமித மூர்புக வானவர் துள்ளினர்' என்னும் தொடரைக் கூறினர்: இதுகாறும் கேட்டுக்கொண்டுவந்த ஒட்டக்கூத்தர் கம்பரை விளித்து, "புலவரே, துளியைத் துமி என்றீரே! இச்சொல் இதுவரையில் எந் நூலினும் பெய்யப்பட்டிலது" என்ன, கம்பர், "இச் சொல் எந்நூலினும் இல்லை. ஆனுல், அது மக்களிடையே வழங்கும் வழக்கை நாளைக் காலையில் காட்டுகின்றனன்," என்று கூறித் தமது இல்லினுக் கேகினர். பின்பு கம்பர் கலைமகளைப் பரவி, வணங்கினுர். உடனே கலைமகள், "நாளை வைகறையில் ஒட்டக் கூத்தனையும், அரசனையும் அழைத்துக்கொண்டு ஆயர் பாடிக்கு வருக," என்று அசரீரியாகக் கூறினுள். அவ் வண்ணமே, மறுநாள் காலையில் கம்பர் சோழனையும், கூத்தரையும் இடையர் மறுகிற்கு அழைத்துச் சென்ருர். அச்சமயம் பல சிறுவர்களால் சூழப்பட்டு நாமகள் சிறு பெண் வடிவங்கொண்டு தயிர் கடைந்துகொண்டிருந்தனள். மூவரும் அருகில் வந்ததும் நாமகள் சிறுவர்களைப் பார்த்து, "மோர்த் துமி தெறிக்கும்; எட்ட நில்லுங்கள்," என்று அவர்கள் காதில் படுமாறு உரத்த குரலுடன் உரைத்தனள். அது

கேட்ட கம்பர் ஒட்டக்கூத்தரை நோக்கி, ''கேட்டீரா?'' என்ன, கூத்தரும் ஒன்றும் கூறுவதற் கியலாமல், அனைத்தும் கலைமகளின் திருவிளையாட்டு எனக் கருதிப் பெருவியப்புற்றனர்.

பின்பு ஆறு திங்களில் இராமவதாரச் சரிதத்தைப் பாடி முடித்த ஒட்டக்கூத்தர், கம்பர் கவியின் முன் தம் கவி சிறப்புறாது எனக் கருதி, ஒருநாள் தாம் எழுதிய சுவடிகள் அனைத்தையும் காவிரி யாற்றில் எறிந்து கொண்டிருக்கையில், திடுமெனக் கம்பர் அங்கு வர, உத்தர காண்டம் மட்டும் எறியப்படாமல் இருப் பதைக் கண்டு, அதைத் தாம் பாடியுள்ள ஆறுகாண்டத் துடன் ஏழாவது காண்டமாகச் சேர்த்துக் கொள் வதாகக் கூறி, அதை எடுத்துக்கொண்டு சென்றார்; அவ்வாறே தாம் பாடிய ஆறு காண்டங்களுடன், கூத்தரின் ஏழாவது உத்தர காண்டமாகிய இரண் டாயிரம் பாடல்களையும் சேர்த்துக்கொண்டார்.

கம்பர், வடமொழியில் வல்லுனர்களாகிய அந்தணர்களில் சிலரது துணை கொண்டு, வான்மீகி இராமாயணம், மற்ற இதிகாச புராணங்களை ஆராய்ந்து, நாளொன்றுக்கு எழுநூறு செய்யுட்கள் வீதம் பதினாயி ரத்து ஐந்நூறு செய்யுட்களைக் கொண்ட பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் முதலிய ஆறு காண்டங்களையும் கலை மகளின் அருள் விசேடத்தால் பாடி முடித்தார்; பெரும் பகுதியைத் திருவெண்ணெய் நல்லூரில் இருந்து கொண்டே இயற்றினார்; தாம் பாடிய நூலுக்கு

இராமவதாரம் எனப் பெயரிட்டார். வடமொழியில் வால்மீகரால் இயற்றப்பட்ட இராமாயணம் வான்மீக இராமாயணம் என்று வழங்குதல் போன்று, தமிழ் மொழியில் கம்பரால் ஆக்கப்பட்ட இராமாயணம் கம்ப இராமாயணம் என்னும் பெயரால் தமிழர்களால் வழங்கப்பெற்றது.

## இராமாயண அரங்கேற்றம்

பண்டைக் காலந்தொட்டு, ஒருவர் ஒரு நூலை இயற்றினால், பேரறிஞர்கள் பலர் குழுமியுள்ள சபையில் அவர்தம் நூலுக்குப் பொருள் விளக்கங் கூறி, அவர்களின், உடன்பாட்டைப் பெறும் வழக்கம் நம் தமிழ் நாட்டில் உலவிவந்ததொரு மரபாகும். அதனை நூல் அரங்கேற்றம் என்பர்.

கம்பரும் தாம் இயற்றிய இராமாயணம் வைணவ நூலாதலின், வைணவப் பெரியார்கள் வாழ்ந்த திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்ய எண்ணி, நூலை எடுத்துக்கொண்டு, திருவரங்கம் சென்று, அவண் உறையும் வைணவப் பெரியார்களிடம் தம் கருத்தைத் தெரிவித்தார். அச்சொற் கேட்ட வைணவப் பெரியார்கள், தில்லை மூவாயிரவர்களிடமிருந்து சாற்று கவி வாங்கிய பின்பு, திருவரங்கத் திருக் கோயிலில் இராமாயணத்தை அரங்கேற்றுமாறு கூறினார்கள். உடனே கம்பர், சிதம்பரஞ் சென்று, தில்லை மூவாயிரவர்களில் ஒவ்வொருவரிடத்திலும் தம் கருத்தைத் தெரிவித்தார். அவர்கள், மூவாயிரவரும் ஒன்று கூடுஞ் சமயம் அறிந்து வந்தால்,

சாற்று கவிகள் தருவதாகக் கூறினார்கள். ஆனால், அவர்களனைவரும் ஒன்று கூடும் சமயம் வாய்ப்பதே அரிது என்பதைத் அறிந்த கம்பர் மனவருத்தங் கொண்டவராய்த் திருவரங்கநாதனை வணங்கியவாறு அன்றைய இரவு மிக்க கவலையுடன் கண்ணுறக்கங் கொண்டார். அப்பொழுது அல்லல் நீக்கும் அரங்கன் கம்பரது சொப்பனத்தில் எழுந்தருளி, "அன்பனே! இனி நீ வருந்தற்க. நாளைய தினம் காலையில் தில்லை மூவாயிரவரில் ஒருவருடைய பிள்ளை அரவந் தீண்டி இறந்துபோகும். அப்பிள்ளையின் ஈமக்கடனை முன்னிட்டு மூவாயிரவரும் அவ்வீட்டில் கூடுவர். அச்சமயம் சிறிதும் தாமதம்செய்யாமல் நீ ஆங்குச் சென்று இராமாயணத்தில் நாகபாச படலத்திலுள்ள பாடல்களில் இன்ன இன்னவைகளைப் பாடினால், அப்பிள்ளை உயிர் பெற்றெழும். அதைக் கண்டதும் அவர்கள் அனைவரும் ஒருமிக்க சாற்று கவிகள் ஈவர்," என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

பொழுது புலர்ந்ததும், எம்பெருமான் திருவாய் மலர்ந்தருளியவாறு, தில்லை மூவாயிரவர்களில் ஒருவரின் பிள்ளை அரவந் தீண்டி இறந்தது. அது கேட்டு மூவாயிரவர்களும் தகனக் கிரியையின் பொருட்டு, அனைவரும் அவண் ஒன்று கூடினர். அச்சமயமறிந்த கம்பர் அவ்வீட்டிற்குச் சென்று, தாம் பிள்ளையை எழுப்பித் தருவதாகக் கூறி, பிள்ளையின் அருகில் சென்று, திருவரங்கப்பெருமான் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் நாகபாசப்படலத்தில் குறிப்பிட்ட பாடல்களை மிகவும் பயபக்தியுடன் உருக்கமாகக் கூறினர். உடனே இறந்த பிள்ளை உயிர்பெற்றெழுந்தது. அதுகண்ட

மூவாயிரவர்கள் உவகைக் கடலில் ஆழ்ந்தார்கள். உடனே கம்பர் தாம் வந்த காரணத்தைக் கூறலும், தில்லை மூவாயிரவர்கள், இவரை இறையருள் பெற்ற ஏந்தல் எனக் கொண்டாடி, இவர் விரும்பியவாறு சாற்று கவிகள் கொடுத்து, பலவிதச் சிறப்புகளுடன் அனுப்பிவைத்தார்கள்.

பின்பு திருவரங்கப் பெருமான் சன்னிதியில் வட மொழி வல்லுனர்கள், தமிழ் வித்துவான்கள், அரசப் பிரமுகர்கள் முதலியோர் நிறைந்ததும், முத்துக் களாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டது மான ஆயிரங்கால் மண்டபத்தில் ஸ்ரீ நாதமுனிகள் முன்னிலையில் கம்பர் கடவுள் வணக்கஞ் செய்து அவையடக்கம் கூறின பின்பு, கேட்பவர்கள் களிகூரும் வண்ணம் இன்பத் தேன் சொரியத் தமது இராமா யணத்தை அரங்கேற்றினார். இராமாயணத்தின இன்னமுதைக் காதாற் பருகிப் புளகாங்கித மடைந்த ஸ்ரீ நாதமுனிகள் கம்பருடைய கல்வியின் பேராற்றலைக் கண்டு வியந்து, அவருக்குக் கவிச் சக்கரவர்த்தி எனப் பட்டப் பெயர் கொடுத்து, மேன்மைபடுத்தினார்.

பின்னர் கம்பர் ஸ்ரீ நாத முனிகளிடமும், ஏனைய வைணவப் பெரியார்களிடமும் விடைபெற்றுத் திரு வெண்ணெய் நல்லூரை யடைந்து, தம்மை ஆதரித்த சடையப்ப வள்ளலுக்குச் செய்திகளைத் தெரிவித்து, அங்கிருந்து உறையூர் சென்று, இராமாயண அரங் கேற்றலைப் பற்றிச் சோழவரசனுக்குங் கூறினார்; சோழ மன்னன் உட்பட்ட மூவேந்தர்கள், சடையப்ப வள்ளல், பிற தமிழ்ப் புலவர்கள் முன்னிலையில் மீண்டும் ஒரு

முறை இராமாயணத்தை அரங்கேற்றஞ் செய்து, செய்யுட்களுக்கு மேலும் பல விரிவுரைகளைக் கூறினர்.

## கம்பர் காலம்

கம்பர் வாழ்ந்த காலத்தில் ஒட்டக் கூத்தர், புகழேந் திப் புலவர், ஔவையார், நச்சினார்க்கினியர், நேமிநாதர் முதலிய தமிழ்ப் பெரும் புலவர்களும் வதிந்து வந் தனர் என்பர்.

மூன்றாங் குலோத்துங்க சோழனும், கருணா கரப் பாண்டியனும், ஓரங்கல் நாட்டரசன் பிரதாபருத் திரனும் ஆகிய மன்னர்கள் கம்பர் காலத்தில் ஆட்சி புரிந்தவர்கள் என்பர் வரலாற்று ஆசிரியர்கள்.

கம்பர் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர் என்று ஒரு சாரார் கூறுகின்றனர்; வேறு சிலர் பதினோராம் நூற்றாண்டில் இருந்தவர் எனக் கூறு கின்றனர்; பிறிதொரு சாரார் பன்னிரண்டாம் நூற்றாண் டின் பிற்பகுதியே இவரது காலம் என்கின்றனர். ஏனெனில்,இக்காலத்திலிருந்த விக்கிரமசோழன், இரண் டாங் குலோத்துங்கன், இரண்டாம் ராஜ ராஜன் ஆகிய மூன்று மன்னர்களைப்பற்றியும் பாடிய ஒட்டக் கூத்தர் இவரது காலத்திலிருந்ததனால், கம்பரது காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியே என்று உறுதி கூறுகின்றனர். இச் செய்தி பல கருத்து வேற் றுமைகட்கு இடந்தருதலின் மேலும் மேலும ஆராய் தற்குரியதாகும். ஆனால், பெரிதும் இவர் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது புலனாகிறது.

## கம்பர் சமயம்

கம்பர் இராமாயணத்தில் சிற்சில இடங்களில் சிவ பெருமானைக் குறித்துப் பாடியிருத்தலாலும், ஏரெழு பதில் விநாயக வணக்கம் பாடியிருப்பதாலும் இவர் சைவர் எனக் கருதுகின்றனர் சிலர். நாலாயிரப் பிரபந்தம் முதலிய வைணவ சம்பிரதாய நூல்களி லிருந்து பல வியாக்கியானங்களின் அரிய கருத்துக்களைத் தம் இராமாயணத்தில் புகுத்தியிருத்தலாலும், திரு வரங்க வைணவ முதல்வரான ஸ்ரீ நாதமுனிகளால் பாராட்டப்பெற்றதனுலும் இவர் வைணவர் என்கின் றனர் பலர். மேலும், தம் நூலில் திருமாலின் பெருமையையே உளம் மகிழ்ந்து கூறியுள்ளார். ஆகவே, இவர் வைணவ சமயத்தவர் என்பதில் ஐயமின்று. வாலி மார்பில் தைத்த அம்பில் எழுதப்பட்ட இராமன் என்னும் பெயரைக் குறித்துப் பாடுகையில் பாடிய "மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமந்திரத்தை" என்னும் பாடல் இராம நாம மகிமையை உணர்த்தி நிற்பதைக் காண்க.

## கம்பர் புலமை

சோழன்மீது பாடிய மும்மணிக்கோவை, சரஸ்வதி அந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, காஞ்சி பிள்ளைத் தமிழ், சோழர் குறவஞ்சி, திருக்கை விளக் கம் முதலிய நூல்கள் கம்பரால் இயற்றப்பட்டன என் பர். மேலும், அகராதி, இராமாயண வசனம் முதலி யனவும் அவரால் இயற்றப்பட்டன என்றும் சிலர் கூறு கின்றனர். கம்பர் சங்க நூற்களையும், சைவத் திரு

முறைகளையும, வைணவ நூல்களையும், தொல்காப்பியம் ஆகிய இலக்கண இலக்கணங்களையும் நன்கு பயின்றவர். அந்நூற் கருத்துக்கள் பல இவர் நூலில் ஆங்காங்கு அமைந்து கிடக்கின்றன.

வைணவப் பெரியார்களில் மாணிக்கமாய்த் திகழ்ந்த ஸ்ரீநாத முனிகள் கம்பரது கவிதா சக்தியினைக் கண்டு, அவருக்குக் 'கவிச் சக்கரவர்த்தி' என்னும் சிறந்த பட்டத்தை அளித்துக் கௌரவித்தார் என்பது முன்பே கூறப்பட்டது. மேலும், தமிழ்ப் பேரறிவுடைய பெரும் புலவர்கள் பலரும் கம்பருக்குச் சிறப்புப் பெயர்கள் பல தந்து பெருமைப்படுத்தியுள்ளனர். 'கல்வியிற் பெரியன் கம்பன்', 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி சொல்லும்', 'விருத்தம் என்னும் ஒண்பாவிற் குயர் கம்பன்', 'கம்ப நாடன் கவிதைபோல் கற்றோர்க்கு இதயங் களியாது.' என்று பலர் பலவாறு கம்பரைப் புகழ்ந்திருக்கின்றனர். இரகு வமிசம் என்னும் காப்பியத்தைத் தமிழில் பாடிய அரச கேசரி என்னும் புலவர், 'கற்றார் கவியிற் பெரிதான் தமிழ்க் கம்ப நாடன்' எனக் கம்பரை மேன்மைப்படுத்தியிருக்கின்றார். 'புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு' என்று பாரதியாரும் கம்பரைப் பாராட்டியிருக்கின்றார்.

ஆங்கில மொழியில் ஒப்பற்ற பெருங் கவிஞராகிய ஷேக்ஸ்பியரையும், கிரேக்க மொழியில் ஹோமரையும் அவ்வந்நாட்டு மக்கள் எவ்வாறு புகழ்ந்துள்ளார்களோ, அது போன்று தமிழ்மொழியிலும் கம்பர் என்னும் கவிஞர்பிரானைத் தமிழர்கள் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர். யுத்த காண்டத்தில் இரணியப்

படலத்தில் உள்ள சீரிய கருத்துக்களும், விறு விறுப்புத்தோற்றமும், உண்மையான மெய்ப்பாடுகளும் பாக்களின் சொன்னயங்களுமே ஆசிரியராகிய கம்பரின் கவிதா சக்தியையும், தமிழ்ப் புலமையையும் நன்கு அறிவிக்கின்றன. 'ஏழுலகம் புகழ் முத்து,' 'காவிரி நாடன்ன தமிழ் நாடு', 'என்று முளதென் தமிழ்' என்னும் கம்பரது சொற்றொடர்களால், இவர், தம் தாய்மொழியாகிய தமிழ்மொழியிலும், செந்தமிழ் நாடாகிய தமிழ்நாட்டிலும் மிகவும் பற்றுதலுடையவர் என்பது தெளிவாகின்றது.

## இராமாயணப் பண்பும், கவி நயமும்

இராமாயணச் செய்யுட்கள் உள்ளத்திற்கும் நாவிற்கும் இன்சுவை தரக்கூடியனவாக இயற்றப்பட்டுள்ளன; அக்கால மக்களின் நடையுடைபாவனைகளை விளங்கக் காட்டும் கண்ணாடிபோன்று இருக்கின்றன; இராமாயணத்தைத் தமிழர் கலைக் கோயிலாகக் கருதுகின்றனர். கம்பரது அறிவின் ஆற்றல், அன்பு முதலிய நல்லியல்புகளே அக் கலைக் கோயிலில் ஒளிவிடும் பேரொளியாகும். சொல்லழகும் பொருளழகும் உள்ள சொற்றொடர்களைக் கொண்ட இராமாயணம் தமிழர்களின் கவனங்களைக் காந்தம்போன்று கவரும் இயல்பையுடையது. செய்யுட்களின் பொருள்நோக்கை யறிந்த தமிழ்நாட்டு மக்கள், 'இராமாயணத்தைப்போன்று மக்களின் மனத்தைக் களிக்கச்செய்கின்ற நூல் பிறிதொன்றும் இல்லை,' என்று புகழ்ந்துள்ளனர்.

வடமொழியிலுள்ள வான்மீக இராமாயணத்தை முதனூலாகக்கொண்டு செந்தமிழ்ப் பாக்களினால்

இயற்றப்பட்ட இராமாயணம், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும், திறம்பட விரித்துத் தொகுத்துக் கூறுகின்றமையால் இது பெருங்காவியம் எனப்படும் பெருமை பெற்றதாகும். இராமாயணத்தில் சொல் நயம், பொருள் இனிமை, நடையலங்காரம் முதலியவைகள் மிளிர்ந்திருத்தலினால் அந்நூலைக் கம்ப சித்திரம் எனவும், செய்யுட்களிலுள்ள கருத்தை மிகவும் எளிதில் கண்டுணர இயலாமையினால் கம்ப சூத்திரம் எனவும் தமிழ் மக்கள் கூறுகின்றனர். இதுபற்றியன்றோ, இக்காலத்திலும் அறிவிற்கு அரிதிற் புலப்படாதனவற்றை முன்பின் யோசியாமல் 'இது என்ன கம்ப சூத்திரமோ!' என்று வினவுதலை நம் செவிகளினால் கேட்கிறோம்.

படித்துச் சுவைத்தற்குரிய கவி கம்பன் கவி. இவர் கவியில் தோய்ந்த நல்லறிஞர்கள் "கம்பநாடன் கவிதையைப் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே" என்று களிப்புடன் கூறினர். இவ்வாறு கம்பர் புகழப்படுதற்குக் காரணம் இவருடைய புலமை கருதியும், ஆழ்ந்து அகன்ற அனுபவங் கருதியும் ஆகும். இவர் பல நூற்புலமை மிகுதியும் உடையவர் என்பது இவர் பாடியுள்ள இராமாயண நூலில் பரக்கக் காணலாம். இது முன்பே கூறப்பட்டது. கம்பரையே ஒருசில புலவர்கள் "ஐய புலவர் ஏறே, நும் கவிகள் இத்துணைச் சுவையுடையனவாக இருக்கின்றனவே, இதற்கு ஏதேனும் காரணம் உண்டோ?" என வினவிய போது, "அன்பர்காள்! என் கவிகள் சுவைப்பதற்குரிய காரணத்திற்கு யான் காரணன் அல்லேன். 'முன்னோர் மொழி பொருளே அன்றி, அவர் மொழியும் பொன்னே

போல் போற்றுவம்' என்பதற்கு அறிகுறியாக அம்முன்னோர் சொற்களையும் சொற்றொடர்களையும் என்னூலில் இயைத்துப் பாடிக்கொண்டேன். அது அதில் ஓர் அகப்பை அள்ளிக்கொண்டேன்'' எனக் கழறியுள்ளார்.

கம்பர் கவிநயத்துக்கு ஓர் எடுத்துக்காட்டினை ஈண்டு எடுத்து இயம்புவோமாக: இராமன் மறைவாக நின்று வாலியின் உரத்தினை இலக்காகக்கொண்டு கூர்வாளி ஒன்றை விடுத்தனன். அது இராமனால் செலுத்தப்பட்ட அம்பு ஆதலின் சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரமாக இருந்தது. மார்பைத் துளைக்க விரைந்தது. என்றாலும், வாலி வலிமிக்கோன் ஆதலின், தன் இரு காலாலும் இரு கையாலும் ஒரு வாலாலும் இறுகப்பற்றித் தன் மார்பினைத் துளைக்காவண்ணம் தடுத்துவிட்டனன். இந்நிலையில் இரகுகுல ஏந்தலும் வாலி முன்னர் வந்து நின்றனன். தன் முன்னின்ற தாசரதியை ஏற இறங்கப் பார்த்தனன் வாலி. பின் அவனை நோக்கி,

''கோவியல் தருமம் உங்கள் குலத்துதித்
தோர்கட் கெல்லாம்,
ஓவியத் தெழுத ஒண்ணா உருவத்தாய் உடைமை
அன்றோ?
ஆவியைச் சனகன் பெற்ற அன்னத்தை
அமிழ்தின் வந்த
தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை
போலும் செய்கை!''

என்று கேட்டனன். கேள்விகள் அமைந்த இச்செய்யுள் பலவகை நயம் பொதிந்து காணப்படுகிறது. ''சுத்த வீரனாக உள்ளவன் மறைந்து நின்று போர்

இடுதல் தகாது. அது அரச நீதியுமன்று. உன் குலம் நீதி நெறி தவறாக் குலமே ஆகும்'' என்பனவற்றைச் சுட்டிக் காட்டும்பொருட்டே வாலி, ''கோ இயல் தருமம் உங்கள் குலத்து உதித்தோர்கட்கெல்லாம் ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய் உடைமை அன்றோ'' என்று வினவியதாகக் கவி கற்பிக்கின்ற கற்பனை சுவைத்தற்குரியதன்றோ! மேலும் இந்தப் பாசுரத்தில், சீதையை அறிவிக்கும் சொற்களாக ஆவி, அன்னம், அமிழ்தில் வந்த தேவி முதலான சொற்களை வேண்டுமென்றே கம்பர் பெய்து தம் கவியைக் கற்பார்க்குச் சுவை தரும் வண்ணம் இயற்றியுள்ளார் எனவும் எண்ண இடம் இருக்கிறது. இதில், ''இராமா உன் உயிர்அனைய தேவியான சீதை உன்பால்இன்றிப் பிரிந்துள்ள காரணத்தால்,நீ உயிரற்ற நிலைமையன் ஆனாய்''என்றும், ''அன்னம் தன்பால் நீரும் பாலும் கலந்துவைத்த உணவுப்பொருளில் நீரை நீக்கிப் பாலைப் பருகும் தன்மையது. அதுபோன்ற பகுத்தறிவு வாய்ந்த அன்னம்போன்ற சீதை நின்பால் இதுபோது இல்லாமையால், நீ பகுத்தறிவு இழந்து இப்பாதகச் செயலைப் புரிந்தாய்'' என்றும், ''அமிழ்தில் வந்த தேவியான சீதை இப்பொழுது உன் பக்கலில் இன்மையால் விடம் ஏறப்பட்டு மயங்கினவர்போல இச்செயல் புரிந்தாய்' ! என ஏசுவதுபோன்ற ஏசற் பொருளும் பொதிந்துள்ளன அல்லவா?'பசித்தவன் தின்னாததில்லை, பகைத்தவன் சொல்லாததில்லை' என்னும் பழமொழிக்கிணங்க இங்ஙனம் பழித்தான் என்பதை எத்துணைச் சுவையும் நயமும் அமையப் பாடியுள்ளார் என்பதை மாணவர்களே! நீங்களே சிந்தித்து ஓர்ந்துகொள்வீர்களாக. இத்தகைய நயங்கள் பல கம்பர் கவிகளில் கணக்கற்று விளங்குகின்றன. அவற்றை அறிந்து அறிந்து இன்புறுவீர்களாக!

# 5. உமறுப் புலவர்

## புலவரின் ஆதி வரலாறு

தமிழ்ப் பாக்களால் மாலைகள் புனைந்து, தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்ந்த முஸ்லீம்கள் பலர். அத்தகைய பாண்டித்தியம் அடைந்த முகமதியத் தமிழ்ப் பேரறிஞர்களுள் உமறுப் புலவரும் ஒருவர் ஆவர்.

மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் முதலிய சைவநாயன்மார்களும்,பன்னிரு ஆழ்வார்களான வைணவர்களும், கிறித்தவர்களும், பௌத்தர்களும் உலகெங்கும் தம் சமயத்தைப் பரப்ப முயன்றதுபோல, இஸ்லாமிய மதத்தினை ஆதிகர்த்தராயிருந்து பரப்பப் பாடுபட்டவர் முகமது நபி என்னும் பெரியார் ஆவர். அவர் அராபியதேசத்தில் மெக்கா என்னும் பட்டணத்தில் பிறந்து, மெதீனு என்னும் இடத்தில் விண்ணுலக வாழ்வையடைந்தவர். அவர் தம் சீவிய காலத்தில் அரேபியா, பாரசீகம் முதலிய இடங்களுக்குச் சென்று, அம் மக்களிடையே புது மதத்தைத் தோற்றுவித்து, அம் மதத்திற்கு இஸ்லாமிய மதம் என்னும் பெயரிட்டு வழங்கியவர். அவரது நற்போதனைகளைக் கேட்ட அராபியரும், பாரசீகரும் பூர்வீக மதத்தினின்றும் நீங்கி, இஸ்லாமிய மதத்தில் சேர்ந்தனர். அவர்களில் பலர் முகமது நபி அவர்களுக்குச் சீடர்களுமாயினார்கள். அவர்கள் உலகெங்கும் சுற்றிச் சுற்றித் தங்குருவின் மதபோதனைகளை மக்களுக்குப் போதித்து, இஸ்லாமிய மதத்தைப் பரவச்

செய்தவர்கள். அவர்களின் இடைவிடா முயற்சியினுல் இஸ்லாமிய மதம் நாளடைவில் உலகெங்கும் பரவியது. முகமது நபி அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இஸ்லாமிய மதக் கோட்பாடுகளைப் பின்பற்றியவர்கள் முகமதியர்களென வழங்கப்பட்டுவந்தார்கள்.

முகமது நபி அவர்கள் பன்முறை மெதீனு நகரத்திற்குச் சென்று, மத போதனைகள் பலவற்றைப் போதித்ததுமன்றி, அவண் வரும் பிணியாளர்களை இறைவன் அருளால் குணப்படுத்தியும்வருதல் வழக்கம். அவரது முகப்பொலிவையும், தெய்வீகச் சக்தியையும் கண்ணுற்ற பெருந் தனவந்தர்களில் பலர் சீடர்களாயினர். மேலும், தங்கள் வசமுள்ள மாடமாளிகைகள், மணிக்கலன்கள் முதலிய செல்வங்க ளனைத்தையும் தங்களுடைய குருவிற்குக் காணிக்கையாகத் தந்துவிட்டனர். இச்செல்வங்களைக்கொண்டு முகமது நபி அவர்கள், தம்மைச் சார்ந்த ஏழை எளியவர்களுக்கு உதவி, கண்ணை இமை காப்பதுபோன்று அவர்களைப் பாதுகாத்து வந்தார்.

ஒரு நாள் முகமது நபியவர்கள் மெதீனு நகரத்தில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் அமர்ந்து, அவண் குழுமியுள்ள எண்ணற்ற அராபியர்களுக்குத் தாம் கண்டுபிடித்த உண்மைகளைப் போதித்துக்கொண்டிருந்தார். அவ்வமயம் அராபிய வயோதிகன் ஒருவன் தன் மகளின் திருமணத்திற்கு வேண்டிய பொருளை நபி அவர்களிடத்தில் பெற மன உறுதிகொண்டு பள்ளிவாசலை அடைந்தான். அவன் பெயர் அப்துல்லா இபுனு பக்கீர் என்பது. அவன் நபி அவர்கள் இருக்கும் இடத்தை யடைந்து

அவருக்கு வணக்கஞ் செலுத்தி, "ஏழைகளை ஆதரிக்கும் கருணைவள்ளலே! எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் பெயர் கதீஜா என்பது. நாளைய இரவு அவளை எங்கள் இனத்தைச் சேர்ந்த சகுசு என்னும் இளைஞனுக்கு வதுவை செய்விக்க உறுதிபூண்டுள்ளேன். அதற்கு ஆவன செய்ய, என்னிடம் போதிய பணம் இல்லை. அத் திருமணம் நிறைவேறாவிட்டால் நானும், என் மகளும் பலரது நிந்தனைகளுக்கும் பரிகாரங்களுக்கும் உள்ளாவோம். ஆகையினால், என் வேண்டுகோளை மறுக்காமல் எனக்குப் பொருள் உதவி புரியவேண்டும்," என்று 'ஓ'வெனக் கதறிக்கொண்டு நாத்தடுமாற மெய் நடுங்கக் கூறினான். ஏழையின் கூக்குரலைக் கேட்ட முகமது நபி அவர்கள், உடனே அவ்வராபிய வயோதிக அப்துல்லாவினிடம் கருணைகொண்டு, தாம் செய்யும் சமய போதனையை நிறுத்தி, அவனைத் தம்மிடத்தில் அழைத்துத் திருமணத்திற்கு வேண்டிய பொருள்களின் பட்டியலைத் தயாரித்து, எவ்வளவு பொருள் வேண்டும் என்பதையும் கூறுமாறு திருவாய்மலர்ந்தருளினார். அத் திருவாக்கைச் செவியேற்ற அப்துல்லா களிப்பென்னுங் கடலில் மிதந்து, தன் திருமகளின் திருமணத்திற்கு வேண்டிய பட்டியலைத் தயாரித்து, அதற்காகும் பொருள் இவ்வளவு என்பதையும் நபி அவர்களிடத்தில் கூறினான். உடனே நபி அவர்கள் அப்துல்லா விரும்பும் தொகையைக் கொடுத்துதவுமாறு அருகில் அமர்ந்திருக்கும் தம் சீடர்களில் செல்வந்தர் ஒருவருக்குக் கட்டளையிட்டனர். குருவின் கட்டளையைச் சிரமேற்றாங்கிய அச் செல்வர், வேண்டும் பொருளை வயோதிக அராபியனிடத்தில் கொடுத்தார். அவ்வயோதிகனும் பொருளைப் பெற்றுக்

கொண்டு நபி அவர்களைப் பார்த்து, "ஆபத்தில் பொருள் தந்துதவிய புண்ணியரே! இது, காலத்தினால் செய்த நன்றியாதலின், இதனை ஞாலத்தின் மாணப் பெரி தென எண்ணுவேன். தாங்கள், தங்கள் சீடருடன் ஏழையின் திருமணத்திற்கு விசயம் செய்து, மணமக்களை வாழ்த்துமாறு கருணாமூர்த்தியாகிய தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்," என்று கூறி னான். நபி அவர்களும் அவன் விருப்பத்திற்கு இசைந்து, தாம் திருமணத்திற்கு வருவதாகக் கூறி, அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

அப்துல்லா பின்பு பள்ளிவாசலினின்றும் வெளிப் போந்து, திருமணத்திற்கு வேண்டிய வாசனைத் தைலம் தவிர, ஏனைய பொருள்களைச் சேகரஞ் செய்துகொண்டு தன் இல்லம் அடைந்து, திருமணத்திற்கு ஆவன செய் தனன். முகமதியர்கள் தங்கள் திருமணத்தை இரவில் நடத்தும் பழக்கமுள்ளவர்களாதலால், அப் பழக்கப் படியே மறு நாள் இரவு கேளிரும் கிளைஞரும் திருமண இல்லிற்கு வந்து ஒன்றுகூடி அமர்ந்திருந்தார்கள். முகமது நபி அவர்களும் அபுபக்கர், உமார், ஊத்துமான், அலி ஆகிய நான்கு பிரதம சீடர்களுடன் அப்துல்லா வின் இல்லம் அடைந்து, ஆங்கு அமர்ந்திருந்தார். மண மகனாகிய சகுசு என்னும் இளைஞன் ஆடை அணிகளா லும், மணம் மிகுந்த தைலங்களாலும் தன்னை அலங் கரித்துக்கொண்டு, நாட்டாரும் உற்றாரும் சூழ, மண வீட் டிற்குச் சென்று, மணமண்டபம் நுழைந்தான். உடனே அவணுள்ள பெண்களும் மணமகளாகிய கதீஜாவை மங்கள நீராட்டிப் பொன்னாபரணங்களால் நன்கு பொலிவுசெய்தனர்; இறுதியில் வாசனைத் தைலம் பூசு

வதன்பொருட்டு, அதைத் தேடியும் காணுமையினுல், அப்துல்லாவிற்கு அதைத் தெரிவித்தார்கள். மணமகளுக்கு மணம் வீசும் சுகந்த தைலத்தைப் பூசுவது மணச் சடங்குகளில் இன்றியமையாத செயலாக முகமதியர்கள் கருதினவர்களாதலால், அப்துல்லா மிகவும் கலக்கமுற்று, "ஐயோ! ஆண்டவனே! அத்தைலம் வாங்குவதற்கு மறந்தேனே! என்னே என் மதி! அப்பொழுதே நபி அவர்கள், 'ஞாபக மறதியின்றித் திருமணப் பொருள்களனைத்திற்கும் பட்டியலைத் தயாரித்தனையா? மீண்டும் ஒரு முறை அப்பட்டியலைப் பார்!" என்று திருவாய்மலர்ந்தருளினது என் மதியைக் கண்டுதான் போலும்! இந்நள்ளிரவில் எங்குச் சென்று தைலம் வாங்குவது! இதனுல் என் மகள் திருமணம் நின்று விடுமோ! ஆண்டவனே! நீர்தான் இச் சமயம் என்னைக் காக்கவேண்டும்," என்று கூறியவாறு அழுதரற்றினுன்; பின்பு நபி அவர்கள், அமர்ந்திருக்கும் இடம் நண்ணி அவர் முன் மண்டியிட்டுச் சலாம் செய்து, செய்தி அனைத்தையும் விடாமல் கூறினுன். உடனே நபி அவர்கள், மணப் பெண்ணை மணவறைக்கு அழைத்துவருமாறு கூறினுர். மணப்பெண் மணவறை புகுந்ததும், முகம்மது நபி அவண் அடைந்து, தம் வாயில் உள்ள உமிழ்நீரைத் தமது வலக்கை விரல்களினுல் எடுத்து, மூன்று முறை மணப்பெண்ணின்மீது தெளித்தார். உடனே மணவறை முழுவதும், மணப் பெண்ணின் மீதும் மணம் வீசத் தொடங்கிற்று. அம்மணத்தை மோந்தோர் அனைவரும் பெருவியப்படைந்து, தங்கள் குருவைப் புகழ்ந்து, மேலும் பன்மடங்கதிகமாக அவரிடம் பயபக்திகொண்டவர்களானுர்கள். கதீஜா, சகுசு

திருமணமும் இனிது நிறைவேறிற்று. உடனே மணத் தம்பதிகள் முகமது நபி அவர்கள் எதிரில் சென்று மண்டியிட்டு, அவரது பாதங்களைத் தொட்டு வணங்கினார்கள். முகமது நபி அவர்களும், ''நீங்கள் என்றென்றைக்கும் இன்பவாழ்வு பெற்று வாழ்வீர்களாக. உங்கள் மரபில் தோன்றுபவர்கள் அனைவரும் வாசனைத் தைல வாணிபம் செய்து, பெருஞ் செல்வந்தர்களாயிருப்பார்களாக. உங்கள் மரபில் எல்லாக் கலைகளையும் பயின்று, உலகம் போற்றும் விற்பன்னன் ஒருவன் தோன்றுவானாக'' என்று வாழ்த்தித் தம்இருப்பிடம் அடைந்தார்.

மணமக்கள் பல்லாண்டுகள் இன்புற்றிருந்து, மனைமாட்சியின் நன்கலமாகிய நன்மக்கள் பலரைப் பெற்றார்கள். மதபோதகரின் திருவாக்கிற்கியைய, மைந்தர்களனைவரும் வாசனைத் தைல வாணிபஞ் செய்து பெரும் வணிகர்களானார்கள். அவ்வமிசத்தவர்களில் பலர் அயல் நாடுகளுக்குச் சென்றும் அவ் வாணிபத்தை விருத்தி செய்தார்கள். அவர்கள் சென்ற நாடுகளில் இந்திய நாடும் ஒன்று. அவர்களிற் சிலர் தமிழ்நாட்டின் கீழ்க் கரையைச் சார்ந்த நாகலாதபுரம் என்னும் பட்டணத்தில தங்கி உறையலானார்கள். அங்கு அவர்கள் வாசனைத் தைலங்கள், நன்முத்துக்கள் முதலிய பொருள்களை அங்குள்ள பாளையப்பட்டு அரசர்களுக்கும், சமஸ்தான ராஜாக்களுக்கும் விற்று, பெரும் பணக்காரர்களாக வாழ்ந்திருந்தார்கள்.

## புலவரின் பிறப்பும் கல்வியும்

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கீழ்க் கரை அடைந்த வணிக முகமதியர்களில் பெருஞ் செல்

வந்தர் ஒருவர் இருந்தார். அவர் அல்லாவினிடம் மிகுந்த அன்புகொண்டவர்; நற்குண நற்செய்கை உடையவர்; ஏழைகளுக்கு உதவும் இரக்கம் வாய்ந்தவர். அத்தகைய குணசீலருக்குத் திருமகனார் ஒருவர் பிறந்தார். அப்பெரியார் தமக்குப் பிறந்த தம் ஆருயிர் மகனார்க்கு 'உமறு' என்னும் பெயரை அமைத்தார். உமறு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, மழலைச் சொற்களினாலும், தளர் நடையினாலும் தம் இரு முதுகுரவர்களை உவகைக் கடலில் ஆழ்த்தி உவப்பித்துவந்தார்; 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'; 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்னும் மூதுரைகளுக்கேற்ப, தாய் தந்தையர்கள் சொற் கேட்டு, அன்னார் அகம் மகிழ வளர் பிறைச் சந்திரனைப்போல வளர்ந்து தம் குழவிப் பருவத்தைக் கடந்தார்.

உமறுக்கு ஏழாண்டுகள் நிரம்பப்பெற்றதும், அவரது தந்தையார், வாணிபத்தினிமித்தம் தம் குடும்பத்துடன் பாண்டிய நாட்டைச் சேர்ந்த எட்டையபுரச் சமஸ்தானத்திற்குச் சென்று உறையலானார். தம் மைந்தரின் கல்வியின் முன்னேற்ற நோக்கங்கொண்ட அவ்வணிகப் பெருமகனார் எட்டையபுரச் சமஸ்தானத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் ஒன்றில் தம் மைந்தரைச் சேர்த்தார். அக்காலத்தில் பள்ளிக்கூடங்களிலுள்ள ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பெரும்பான்மையாகத் தாய்மொழியாகிய தமிழைக் கற்பித்துவந்தனர். அம்மொழியிலுள்ள நீதி, கலம்பகம், அந்தாதி, பிள்ளைத்தமிழ், தூது, சதகம் முதலிய இன்சுவைச் செய்யுட்களையும் மனனம் செய்யப் பயிற்றுவித்தலும் வழக்கம். அவ்வாறே உமறுவும் நான்காண்டுகளில் செய்யுள் நூல்களிலிருந்து

அழகிய செய்யுட்கள் சிலவற்றைக் கசடறக் கற்று, மன னம் செய்துவைத்திருந்தார். உமறுவின் தமிழறிவின் தனி இயல்பைக் கண்ட ஆசிரியர்கள் மனமகிழ்ச்சி யுற்று, மேன்மேலும் தமிழ் நூல்களைக் கற்றுக்கொள்ள அவருக்கு ஊக்கம் அளித்துவந்தார்கள். தமிழில் தங் களைவிட உமறு மேம்பாடுற்று விளங்குவதைக் கண்ட மாணவர்களும் வியப்புற்று, அவரைத் தங்கள் தலைவரா கக் கருதி, மிகவும் மரியாதையுடன் நடந்துவந்தார்கள்.

## உமறுவின் பேராசிரியர்

உமறுவின் தந்தையார் சமஸ்தான அதிபதிக்கு நல்முத்தையும், வாசனைப் பொருள்களையும் விற்கும் பொருட்டு அடிக்கடி சமஸ்தான அரண்மனைக்குச் செல் வது வழக்கம். அப்பொழுது சமஸ்தானப் பிரமுகர்கள் முதல், சேவகர்கள் ஈறுக வணிகருக்கு நண்பர்களாகி யிருந்தனர். அவர்களில் வணிகரைத் தம் ஆருயிர் நண்ப ராகக் கருதினவர் சமஸ்தானத் தமிழ்ப் புலவராயிருந்த கடிகை முத்துப் புலவர் என்பவர் ஆவார்.

கடிகை முத்துப் புலவர் பாண்டிய நாட்டிலுள்ள எட்டையபுரம் சமஸ்தானத்தில் பொற்கொல்லர் வகுப் பில் பிறந்தவர். கடிகை என்பது புலவரது குடிப்பெயர். தமிழ்ப் பேரறிஞர்கள் பலரிடம் தமிழ் இலக்கண இலக் கியங்களை ஐயந்திரிபறக் கற்று, அவரது காலத்திலிருந்த தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம் மாணிக்கமாய் விளங்கி ஞர். அச்சமயம் எட்டையபுரம் சமஸ்தான அதிபதி, புல வரது தமிழ் அறிவின் திறத்தை யறிந்து மெச்சி, அவ ரைத் தம் சமஸ்தானப் புலவர்களுக்குத் தலைவராக

நியமித்து, பல சன்மானங்களையும் விருதுகளையும் தந்து போற்றிவந்தார். கடிகை முத்துப் புலவரும் தமக்கிருக்கும் அறிவின் வன்மையால் சமஸ்தானப் புலவர்களனைவர்க்கும் நடுநாயகமாக விளங்கித் தம் பேச்சுத்திறத்தால் பலரை மகிழச் செய்துவந்தார். அவர் சமுத்திர விலாசம், மதன வித்தார மாலை, காமரச மஞ்சரி முதலிய செய்யுள் நூல்களை இயற்றியிருக்கின்றார்.

ஒரு நாள் மாலை, கடிகை முத்துப் புலவர் உமறுவின் தந்தையாருடன் சமஸ்தானததினின்றும் வெளியேறி, வீதியில் சென்றுகொண்டிருந்தார். அவ்வமயம் உமறு ஓலைச்சுவடியுடன் பள்ளிக்கூடத்தினின்று வீட்டிற்குச் சென்றுகொண்டிருக்கும்போது புலவர் கண்களுக்கு எதிர்ப்பட்டார்.

சிறுவரின் முகப்பொலிவைக் கண்ணுற்றதும், காந்தம் இரும்பை இழுப்பதுபோன்று சிறுவரிடம் தம் மனதைப் பறிகொடுத்தார் கடிகை முத்துப் புலவர். உடனே தம்முடன் வந்துகொண்டிருக்கும் வணிகப்பெருஞ் செல்வரை நோக்கி, ''நண்பீர்! இதோ நம் எதிரில் வந்துகொண்டிருக்கும் இச்சிறுவன் பின்னாளில் பேரறிஞனாய் விளங்குவான் என்பதை இவனது முகப்பொலிவு உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெள்ளிதில் எடுத்துக்காட்டுகின்றது. இச்சிறுவனைப் பெற்றெடுத்த புண்ணியசீலர்களான தாய் தந்தையர் யாவரோ! இச்சிறுவனை நீர் அறிவீரோ?'' என்று அன்பு ததும்பக் கேட்டனர். இவ்வார்த்தைகளைக் கேட்ட வணிகப் பெருமகனார் உள்ளத்தில் பெருமகிழ்ச்சியுற்று, '' அன்புடையீர்! நீர் சிறப்பித்துக்

கூறும் இச் சிறுவன் என் மைந்தனேயாவான். இவனது பெயர் உமறு என்பது,'' என்று கூறிப் புலவரின் வாய்ச் சொற்களை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். வணிகர் கூறி முடித்ததும் புலவர் பெருமான் அகமகிழ்ந்து, ''நாளை முதற்கொண்டு நீர் உம் செல்வ மைந்தனை எம் வசம் ஒப்புவித்துவிடும்; அவனுக்கு வேண்டிய கல்வியைக் கற்பித்து, பேரறிஞனாக்குவது எனது பொறுப்பாகும்,'' என்று பகர்ந்தார். இழந்த கண்களை மீண்டும் பெற்ற குருடனைப் போன்று, செல்வந்தர் பேருவகை எய்தி, தம் ஒரே மகன் தமிழில் வல்லவனாக விளங்கவேண்டும் என்னும் பெருவிருப்பத்தால், புலவர் விருப்பின்படியே, மறுநாட் காலையில் மைந்தனை அழைத்துவருவதாகக் கூறி, அவரிடம் பிரியா விடை பெற்று, தம் மாளிகை அடைந்தார்; உடனே தமக்கும், சமஸ்தான வித்துவான் கடிகை முத்துப் புலவருக்கும் நடந்த உரையாடல்களையும், மறுநாட் காலையில் அவர் மாளிகை அடைந்து, அவரிடத்திலேயே இருந்து தமிழ் நூல்களைக் கற்கவேண்டும் என்பதையும், பொழுது புலர்ந்ததும் தாம் புலவரது இல்லத்திற்கு அழைத்துச் செல்வதாகவும் தம் செல்வ மகனாகிய உமறுக்குக் கூறினார். தந்தையாரின் மொழிகளை இதுகாறும் செவியேற்ற உத்தமராம் உமறும் குதூகலமுற்று, இரவெல்லாம் உறக்கமின்றிக் கதிரோன் கீழ்த் திசையில் தோன்றும் வேளையை ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருந்தார்.

பொழுதும் புலர்ந்தது. உடனே உமறு தம் காலைக் கடன்களை முடித்து, காலை உணவு கொண்டபின், ஓலைச் சுவடிகள் அனைத்தையும் தூக்கிக்கொண்டு ஆசிரியராகிய புலவர் மாளிகைக்கு ஏக ஆயத்தமானார். வணிகரும்

உடனே தம் மைந்தரை அழைத்துக்கொண்டு, புலவர் மாளிகை அடைந்து, மைந்தரை அன்னார் வசம் ஒப்பு வித்தார். முத்துப் புலவரும் கன்றைக் கண்ட கற்றுப் போன்று, உமறுவைப் பேருவகையோடு வரவேற்று, முகமன் கூறி, இன்சொல் பகர்ந்து, அவனுள்ள ஆசனம் ஒன்றில் இருக்கச் செய்தார்; பின்பு சிறுவரைப் பல வினக்கள் கேட்டு, தமிழில் அவருக்கிருக்கும் ஆர்வத்தையும், அறிவின் திறத்தையும் அறிந்து மன மகிழ்ச்சியுற்ருர்; அதன்பின்னர் தம் நண்பருக்கு விடை கொடுத்து அனுப்பினர். நண்பர் வணிகரும், புலவரிடமும் மைந்தரிடமும் பிரியா விடைபெற்று, வாணிபத்தினிமித்தம் வெளியூர்களுக்குச் சென்றுவிட்டார். தம் பத்தொன்பதாம் ஆண்டிற்குள் உமறுப்புலவர், தம் நல்லாசிரியராகிய கடிகை முத்துப் புலவரிடம் சுமார் நான்கு வருடங்களில் தமிழிலுள்ள இலக்கண இலக்கிய நூல்களைப் பயின்று சிறந்த புலமைபெற்ருர்.

## வடநாட்டுப் பண்டிதனை வெல்லுதல்

ஒரு நாள் வடநாட்டுப் பண்டிதன் ஒருவன் மாணுக்கர் பலர் தன்னைச் சூழ்ந்து வர, வெகு ஆடம்பரத் தோற்றத்துடன் எட்டையபுர சமஸ்தானத்தையடைந்து, சமஸ்தானுதிபதி முன்னிலையில் தன் வீரப் பிரதாபங்களையும், பல நாட்டுத் தமிழ்ப் புலவர்களை வாதினல் வென்று வாகை சூடியுள்ளதையும், சமஸ்தானப் பிரமுகர்கள், புலவர்கள் முன்னிலையில் தன் வித்துவத் திறமையைக் காட்டிப் பரிசுகள் பெறுவதன்பொருட்டுத் தான் அவண் போந்ததாகவும் கூறி, அதிபதியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்துக்

கொண்டிருந்தான். அப்பண்டிதனுடைய செருக்குற்ற வார்த்தைகளைக் கேட்டு உள்ளுக்குள் வெகுளியும், வெறுப்புங் கொண்ட சமஸ்தான அதிபதி, அவைகளை வெளிக்குக் காட்டாமல், ஒரு நாளைக் குறிப்பிட்டு, அந் நாளில் வந்து தன் திறமையைக் காட்ட அவனுக்கு விடை தந்து அனுப்பிவிட்டார். பண்டிதனும் தன் எண்ணம் ஈடேறினதைக் குறித்து மனக் களிப் படைந்து, பெருமிதத்துடன் மாணுக்கர் புடை சூழச் சபையினின்றும் வெளியேறி, தன் இருப்பிடம் அடைந் தான். அவன் சென்றதும், எட்டையபுர அதிபதி தம் சமஸ்தானப் புலவராகிய கடிகை முத்துப் புலவரை வரவழைத்து, அவரிடம் பண்டிதன் வரலாற்றை ஆதியோடந்தமாகக் கூறி, தாம் ஏற்படுத்தியிருக்கும் அந்நாளில் அவையிலிருக்குமாறு புலவரை வேண்டிக் கொண்டார். புலவரும் அதிபரின் விருப்பத்தைப் போலவே அந்நாளில் தாம் இருப்பதாகக் கூறி, அவரிடம் விடை பெற்று, உள்ளக் கவலையுடன் தமது மாளிகை அடைந்தார்.

வடநாட்டுப் பண்டிதனைப்பற்றி முன்பே அறிந்த புலவர் மிகவும் துயரமுற்றவராய், அவன் தருக்கை அடக்கத் தகுந்த முறைகளைப்பற்றிப் பலவாறு இரவும் பகலும் சிந்தித்தவண்ண மிருந்தார். இச் சிந்தனையினுல் நாளடைவில் அவர் மெலிவுற்று நலிவடைந்தார். இதனுல், பல நாட்கள் அவர் சபைக்குச் செல்ல இயலா மல் இல்லத்திலேயே இருந்தார். புலவரது நலிவைக் கண்ட உமறுப் புலவர் காரணம் அறியாமல், அவரை வினவுவதற்கும் அஞ்சி நெருப்பிலகப்பட்ட புழுப் போல நெளிந்துகொண்டிருந்தார். சமஸ்தான

அதிபதியும் புலவர் நோய்ப்பட்டிருத்தற்குரிய காரணம் அறியாது மனம் மிக வெதும்பி, ஒன்றும் புரியாமல் மௌனமாயிருந்தார். பண்டிதன் வாதிக்கும் நாளும் அணுகிற்று. அந்நாள் வைகறை, பண்டிதன் பட்டுப் பீதாம்பரங்களினுல் தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு, மாணுக்கர்கள் பலர் விருதுகள் கூறியவாறு தன்னைச் சூழ்ந்து வர, மதமுற்ற யானையைப் போன்று, மிக்க செருக்குடன் சபையை அண்மினுன். அவனது தோற்றத்தையும், மாணுக்கர்களின் எக்களிப்பையும் கண்ணுற்ற சமஸ்தான அதிபதி ஆஸ்தானப் புலவரைப் பல்லக்கில் ஏற்றி அழைத்துக்கொண்டு வருமாறு தம் சேவகர்களுக்குக் கட்டளையிட்டார். எசமானரின் கட்டளைக்கிணங்கிய சேவகர்கள் உடனே புலவர் மாளிகைக்குச் சென்று, அதிபரின் ஆக்ஞையை அன்ஞருக்கு அறிவித்தனர். சேவகர்களின் கூற்றைக் கேட்ட கடிகை முத்துப் புலவர், மெய் குலுங்க, உடல் வியர்த்து ஒன்றுந் தோன்ருமல் தம் மருகில் இருக்கும் உமறுப் புலவரைப் பார்த்தார்.

ஆசிரியரது முகத் தோற்றத்தையும், சமஸ்தான சேவகர்கள் வருகையின் காரணத்தையும் நொடிப் பொழுதில் ஊகித்தறிந்துகொண்ட உமறுப் புலவர் ஆசிரியரை வணங்கி, "ஐயன்மீர்! என்னை ஆசீர்வதித்து அனுப்பும். நான் நம் சபைக்குச் சென்று, அவ் வீணனை வென்று வாகை சூடிப் புகழுடன் உம்மிடம் வருவேன்," என்று கூறி, ஆசிரியரின் விடையினை ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருந்தார். மாணவரின் தீர மொழிகளைக் கேட்ட ஆசிரியர் மன முவந்து, "மைந்த! நீ கல்வி ஞானம் முற்றுப்பெருத

இளைஞன். அப் பண்டிதனே, பல கலைகளைப் பயின்று, மந்திர தந்திரங்களைக் கையாண்டு, பல நூல் வல்ல புலவர்களை வென்று பரிசுகள் பல பெற்றவன். அத் தகையோனை எவ்வாறு நீ வெல்லக்கூடும்?'' என்று கேட்டனர். அக் கூற்றைக் கேட்ட உமறுப் புலவர் மீண்டும் ஆசிரியரை வணங்கி, "பெரியீர்! இப் பண்டிதனை வெல்லுவேன் என்பதை என் உள்ளத்தின் உறுதி அறிவிக்கின்றது. சிறிதும் நீர் சிந்திக்காமல் என்னை அனுப்பும். உம் ஆசீர்வாத வன்மையின் துணைக் கொண்டே அச்செருக்காளனை வென்றுவருவேன். இவ்விடுக்கண்ணினின்றும் ஆண்டவரும் என்னைக் காப்பாற்றுவார். இது உண்மை'' என்று உறுதியுடன் கூறிப் புறப்பட ஆயத்தமானர்.

மாணவரின் திடசித்தத்தையும், அஞ்சா நெஞ்சையும் கண்ணுற்ற புலவர்பெருமான் மறுமொழி கூருமல் தாம் சபைக்குப் போகுங்கால் உடுத்திக்கொள்ளும் ஆடையாபரணங்களை எடுத்துக்கொடுத்து, அவற்றை அணிந்துகொள்ளச் செய்து, அவரை ஆசீர்வதித்து அனுப்பினுர். உடனே உமறுப் புலவர் தம் ஆசிரியரின் தாள்களை வணங்கி, அவரிடம் விடைபெற்று, வெளியிலிருக்கும் சிவிகையில் இவர்ந்து சென்றுர். உடனே சேவகர்கள் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு அவையை விரைவில் அண்மினர். உமறுப் புலவர் பல்லக்கினின்றும் வெளிவந்து, கரிக் கூட்டத்தினிடை அரிக் குட்டி பாய்வது போன்று பல பிரமுகர்கள் வீற்றிருக்கும் சபா மண்டபத்திற்குச் சென்று, வடநாட்டுப் பண்டிதனுக் கெதிரில் ஆசிரியருக்காக அமைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார். உமறுப் புலவரின் செய்கையையும், முக

வசீகரத்தையும் கண்ட அவையோரும் சமஸ்தான அதிபதியும் ஆச்சரியமுற்றனர். பின்பு அதிபதி, "தமக்குப் பதிலாகத் தம் மாணாக்கரைப் புலவர் அனுப்பினார்போலும்! இவ்விளைஞர் எவ்வாறு இப்பண்டிதனை வெல்லுவார்!" என்று தமக்குள் எண்ணித் துயரமுற்றார்; பின்பு பண்டிதனை நோக்கி, "ஐயா! எம் சமஸ்தான வித்துவான் நோயுற்றமையி னால், தமக்குப் பதிலாகத் தம் மாணாக்கராகிய இவ் விளைஞரை அனுப்பியுள்ளார். ஆதலின், உம் வித்துவத் திறமையை எடுத்து உரையும்," என்று கட்டளை யிட்டனர்.

உடனே பண்டிதன் தன் ஆடையணிகளைச் சரி செய்துகொண்டு, மீண்டும் ஒரு முறை அவையிலுள் ளோரையும் அதிபதியையும் ஏறெடுத்துப் பார்த்தான்; பின்பு தான் வணங்கும் வாலைத் தெய்வத்தை மனத்திற் குள் வணங்கி, மந்திர உச்சாடனஞ் செய்யப் பட்ட தங்கக் கடகம் அவையோர் கண்களில் படுமாறு அதை அணிந்திருந்த வலக்கையை உயரத் தூக்கினான். அப்பொழுது அசரீரியாக, "வாலையின் அருள்பெற்ற வனை அறியாயோ சிறு பிள்ளாய்?" என்னும் வினா உண்டாயிற்று. அவ்வினாவைச் செவியேற்ற உமறுப் புலவர் தம் ஆசனத்தினின்றும் துள்ளி எழுந்து, கக்கத் தில் வைத்திருந்த தந்தப் பிடியிட்ட எழுத்தாணியை எடுத்து, பண்டிதனுக்கு எதிரில் பூமியில் நட்டு, "எழுத் தாணியே! வினாவிற்கு விடை கூறு!" என்று கூறினார்; பதிலொன்றும் வராமையைக் கண்ட இளைஞர் மீண்டும் ஒரு முறை கூவினார். அச்சமயமும் பதிலில்லை. இதைக் கண்ணுற்ற பண்டிதன் ஏளன

நகைப்புடன் இளைஞரின் முகத்தையும், அவை யோரையும் கூர்ந்து பார்த்தான். சமஸ்தான அதிபதியும், 'யாது தீங்கு நேருமோ?' என்று அஞ்சி மௌனமாய்த் தம் ஆசனத்தில் வீற்றிருந் தார். அதிபதியின் எண்ணத்தையும், பண்டிதனின் வஞ்சகப் பார்வையையும் நொடியில் அறிந்துகொண்ட உமறுப் புலவர் மிகவும் சீற்ற முற்றவராய்ப் பேரொலி யுடன் எழுத்தாணியைத் தரையினின்றும் பிடுங்கித் தரையில் மோதினார். உடனே அண்டம் அதிருமாறு, "அறிவிழந்த மூடப் பண்டிதனே! உன் மந்திரங்கள் எவையும் ஆண்டவனாகிய அல்லாவின் அருள்பெற்ற உமறுவினிடம் பலியா! வீணாகக் கர்வம் கொள் வதை இன்றோடு விட்டொழி!" என்று அசரீரியாக அவ்வெழுத்தாணியினின்றும் ஓசை எழுந்தது. உடனே அப்பண்டிதன் மதிமயக்கத்துடன் உடல் நடுக்கம் கொண்டு, 'இனி இங்கிருப்பதால் உயிருக்கு விபத்து நேரிடும்,' என்று அஞ்சி, தந்திரத்தால் அவ் விடத்தினின்றும் வெளியேறத் தீர்மானித்தான். அதற்குமுன் அவன் உமறுப் புலவரிடம் இன்சொல் சில பகர்ந்து, இது வரையில் தான் பெற்ற பரிசுகளையும் ஆடையாபரணங்களையும் அவருக்குத் தந்து, சமஸ்தான அதிபதியிடம் விடைபெற்றுத் தந்திரமாக யாரும் அறியாமல் அவையினின்றும் அகன்று, அன்றைய தினமே எட்டையபுரத்தினின்றும் வெளியேறினான்.

## சமஸ்தான வித்துவான் ஆதல்

உமறுப் புலவரின் வெற்றியையும், வீணன் தோல்வியுற்று வெளியேறியதையுங் கண்ட சமஸ்தானப்

பிரமுகர்கள் பேராச்சரியங்கொண்டு உமறுப் புலவரின் மேன்மையைப் புகழ்ந்து, பலர் பலவாறு போற்றிப் பாராட்டுவாராயினர். சமஸ்தான அதிபதி உடனே தம் ஆசனத்தினின்றும் எழுந்து, இளைஞரை அணுகி, அவரை ஆலிங்கனம் செய்து ஆசீர்வதித்தார்; பின்பு இளைஞருக்குப் பரிசுகள் ஈந்ததுடனிற்காமல் பட்டங்கள் விருதுகள் பலவற்றையும் சூட்டி, தமது ஆசனத்திற்குப் பக்கத்தில் நவரத்தினங்களிழைத்த சிங்காதனம்ஒன்றை அமைத்து, அதில் இருக்கச் செய்தார்; சமஸ்தான வித்துவானாகிய கடிகை முத்துப் புலவருக்குப் பின் உமறுப் புலவரைச் சமஸ்தான வித்துவானாகத் தாம் நியமித்திருப்பதாக அவையிலுள்ளோர்க்கு அறிவித்தார்; பின்பு மெய்காப்பாளர் பலர் புடை சூழவும், கட்டியங் கூறிக்கொண்டு முன்னே செல்லவும், தம் பல்லக்கில் உமறுப் புலவரை அமரச் செய்து, பிரியா விடை தந்து, அவரது இருப்பிடத்திற்கு அனுப்பினார்.

மாணாக்கர் உமறுப் புலவர், கடிகை முத்துப் புலவர் மாளிகை சேர்ந்ததும் பல்லக்கினின்றும் இறங்கி உள் நுழைந்து, தாம் பெற்ற பரிசுகளை ஆசிரியரின் திருவடிகளில் வைத்து அவரை வணங்கினார்; பின்பு எழுந்து, தாம் சபா மண்டபத்திற்குச் சென்றது முதற் கொண்டு வீணன் தோல்வியுற்று வெளியேறிவிட்டது வரையில் ஒன்று விடாமல் இயம்பினார். மாணவரின் வீர மொழிகளைக் கேட்ட புலவர்பெருமான் உமறுவை வாரியெடுத்து, உச்சி மோந்து, இன்சொல் பகர்ந்து ஆசீர்வதித்தார். அந்நிமிட முதல் தம் மன நோய் தீர்ந்து தெளிவுற்ற அவர் மாணாக்கரை விளித்து "அப்பனே, என் பிறவிப் பயனை இன்றுதான்

பெற்றேன். உனனுலன்றே, நான் இன்று இழிசொல்லி னின்றும் காப்பாற்றப்பட்டுப் புகழுடையவனுனேன். எனவே, இன்று முதல் எனக்குப் பதில் எட்டையபுரச் சமஸ்தான வித்துவானுக நீயே இருத்தல்வேண்டும். ஆகையினுல், சிறிதும் தாமதமின்றி நாம் அதிபதியைக் காணவேண்டுவது இன்றியமையாததாகும்'' என்று கூறி, அவரை அழைத்துக்கொண்டு சபாமண்டபத் திற்குச் சென்று, அதிபதியினிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். அதிபதியும் குதூகலமுற்று, உமறுப் புலவரைச் சமஸ்தான வித்துவானுக நியமித்து, மேலும் பரிசுகள் பல தந்து பாராட்டினுர். அன்று முதல் உமறுப் புலவர், பல விண்மீன்களுக்கிடையில் ஒப்புயர் வற்ற மதியைப் போன்று, புகழொளி பரப்பி இனிது வாழலானுர்.

## இயற்றிய நூலும், இறுதிக் காலமும்

உமறுப் புலவர் முகம்மதியர்களின் இரட்சகரான முகம்மது நபி நாயகம் அவர்களின் சரிதத்தைச் செய்யு ளாக எழுதி, அதற்குச் சீறூப் புராணம் எனப் பெயரிட் டார். உமறுப் புலவர் சீறுப் புராணம் பாடுவதற்கு முன்னர், பள்ளிவாசலில் துயிலுற்றிருக்கும்போது நபி நாயகம் அவர்கள் அவரது கனவில் தோன்றி ஆசீர்வதித்தார். அவ்வொளியில் ஈடுபட்டுப் பின் சற்றுத் தெளிந்ததும், அப்பொழுதே நபி நாயகத்தின் அருளால் 'திருவினும் திருவாய்' என்னும் தொடரை முதலடி யாகக்கொண்டு கடவுள் வாழ்த்தாகச் சில செய்யுட் களைப் பாடி முடித்தார். அதன்பின் நூலும் இனிதின் முடிந்தது.

உமறுப் புலவர் சீறுப் புராணம் பாடியதற்குத் தூண்டுகோலாயிருந்தவர் சீதக்காதிர் மரைக்காயர் ஆவார். சீறுப் புராணம் அரங்கேற்றம் செய்வதற்குள் சீதக்காதிர் மரைக்காயர் இறைவன் திருவடி எய்தினர். பின்பு சீதக்காதிர் மரைக்காயரின் அன்பிற்குகந்தவரான அப்துல் மரைக்காயர் என்பவர் முன்னிலையில் தாம் பாடிய சீறுப் புராணத்தை உமறுப் புலவர் அரங்கேற்றம் செய்து முடித்தார்.

உமறுப் புலவர் எட்டையபுரத்திலேயே விண்ணவர் எதிர்கொண்டழைக்க, அவர்களின் சிறந்த விருந்தினராகச் சென்றூர். உடனே சமஸ்தான அதிபதி, அரசாங்க மரியாதைகளுடன் வெகு சிறப்பாக அன்னவரது பொன்னுடலைச் சமஸ்தானத்துத் தென் கோட்டை வாயிலில் அடக்கஞ் செய்தனர்.

## சீறுப் புராணத்தின் சிறப்பு

உமறுப் புலவர் முஸ்லீம் இனத்தைச் சேர்ந்தவர் என்றூலும், அவர் வாக்குத் தூய தமிழை நன்கு உணர்த்துவதாகும். சொற்கள் பொருள் செறிவும், அழகும் நிறைந்து காணப்படும். இந்த இயல்பை சீறுப்புராணத்தில் பல்வேறு இடங்களில் காணலாம். அவற்றில் ஓர் இடத்தை உங்கட்கு இங்கு எடுத்து மொழிந்தால், இதனைத் துணையாகக்கொண்டு ஏனையவற்றை நீங்களே அறிந்து இன்புறுவீர்கள் அல்லவா?

சீறுப் புராணத்தில் முகம்மது நபிக்கு ஒரு கொடிய புலி வணங்கிச் சலாம் இட்டுத் தாழ்ந்து அடிபணிந்து

சென்ற வரலாறு ஒன்று காணப்படுகிறது. அவ் வரலாற்றில அமைந்த கவிகளில் ஒன்றே ஈண்டு நாம் எடுத்துப் பேசப்படுவதாகும். புலியின் கொடுமையைப் புலவர் புனைந்து கூறும் அழகு சுவைத்தற்குரியதாகும். அப்புலி சிங்கங்களைக் கொன்று, யானைகளை வீழ்த்தி, காட்டு எருமைகளைக் கலங்கச் செய்து, கரடிகள், மான் இனங்கள் முதலியவற்றை மாழ்கச் செய்தது எனக் கூறும் இடங்கள் உழுவையின் வீரத்தை வெளிப்படுத்தும் பாடல்களாகத் திகழ்கின்றன. அத்தகைய கொடு வரியும் முகம்மது நபி நாயகத்தைக் கண்டு அடங்கியது என்னும் பாடலைப் பாடி நம்மைப் பரவசப்படுத்தும் புலவர் அறிவை என்னென்று வியப்பது? ''அறத்திற்கே அன்புசார் பென்பர் அறியார்; மறத்திற்கும் அஃதே துணை'' என்னும் குறட்பொருளை எத்துணை அழகுற இக்கதையின் மூலம் விளக்குகிறார் புலவர் என்பதைச் சிறிது நீங்களே சிந்தித்துப் பாருங்கள்.

முகம்மது நபியைக் கண்டபோது வீரம் நீங்கி, அமைதி நிலவி அடக்கங் கொண்டு அடிமிசை வீழ்ந்ததைத் தெரிவிக்கும் பாடல்,

> கண்ட போதினில் வால்குழைத் தரியமெய்கலங்கிக்
> கொண்டு மென்மெல நடந்துதன் பெருஞ்சிரம் குனிந்து
> தண்த ளிர்ப்பத தெரிசனைக் கெனசலாம் உரைத்துத்
> தெண்டன் இட்டது வள்ளுகிர்த் திண்திறல்புலியே

என்பது. இப் பாடலின் பொருட்சுவையை அறிந்து இன்புறுவீர்களாக.

வீரமாமுனிவர்

# 6. வீரமா முனிவர்

## பிறப்பும் கல்வியும்

வீரமா முனிவர் கி. பி. 1680-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8-ஆம் நாள் இத்தாலி தேசத்தில் உள்ள வெனிஸ் நகரத்தில் மாண்டுவா என்னும் மாகாணத்தில் காஸ்டி கிலியோன் என்னும் பட்டினத்தில் பிறந்தார். இவரது தந்தையாரின் திருநாமம் டான் காண்டல்போ பெஸ்கிப் பிரபு என்பது; அன்னையாரின் பெயர் எலிசபெத்து பெஸ்கி என்பது. இம் மூதாதையர்களின் அருந்தவப் பயனாக நம் முனிவர், அவர்களுக்குத் திருமகனாராகத் தோன்றினார். காண்டல்போ பெஸ்கி பிரபு நவம்பர் மாதம் 13-ஆம் தேதியன்றே தம் சமய வழக்கம்போல, ஜே. பி. கோனேடியா என்னும் மத குருவினால் தம் அரு மருந்தன்ன புத்திரருக்கு ஞானஸ்நானம் செய்வித்து, கான்ஸ்டான்டியஸ் ஜோசப்பு பெஸ்கி எனத் திருப்பெய ரிட்டார்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த இவர், தம் மழலைச் சொற்களினால் தாய் தந்தையரைக் களிப்பெனுங் கடலில் ஆழ்த்தி இன்புறச் செய்தார். இவர், தம் இளமைப் பருவத்திலிருந்தே கல்வியில் ஊக்கங் காட்டி நன்கு பயின்று வந்ததுடனிற் காமல், மக்களின் துன்பங்களுக்காகத் தம்மையே. பாவி களிடம் ஒப்புவித்துச் சிறையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவிடம் அளவற்ற அன்புகொண்டு அவருடைய

அன்புரைகளைப் போற்றித் துதித்தும் வந்தார். இவர் ரோமன் கல்லூரியில் கல்வியைத் திறம்படக் கற்ருர். கல்லூரியில் பயிலும்போதே, கிறிஸ்துவின் பொன் மொழிகள் இவரது மனத்தில் பசுமரத்தாணி போன்று வேரூன்றிவிட்டன. எனவே, இவர் இயேசு கிறிஸ்து திருச் சபையில் சேர்ந்து, அயல் நாட்டினர்க்கு அத்திருச் சபையின் சன்மார்க்க போதனைகளைப் பரப்பி, சமயப் பணி ஆற்றுவதிலேயே பேரூக்கங் காட்டிவந்தார்.

இவர் தம் பதினெட்டாம் வயதில், ரோமாபுரிக் கத்தோலிக்கப் பாதிரிமார்களின் சமயச் சங்கத்தில் சமயப் பயிற்சியின்பொருட்டுச் சேர்ந்தார்; அங்கு இரு ஆண்டுகள் சமயப் பயிற்சியை நன்கு தெளிவுறப் பயின் ருர். பின்பு ராவென்ன என்னும் நகரை அடைந்து, இலக்கண ஆசிரியராய் இருந்தார். கி. பி. 1701-ஆம் ஆண்டு இவர் போலோஞ என்னும் நகரத்திற்குச் சென்ருர். அங்கு முதல் மூன்று ஆண்டுகள் தத்துவ ஞானம் என்னும் சாஸ்திரத்தைப் பயின்று தேர்ச்சி யுற்ருர்; பல நாட்டுப் பல்வேறு மொழிகளையும் கசடறக் கற்ருர்; கி. பி. 1705-ஆம் ஆண்டிலிருந்து ஓராண்டு போலோஞக் கல்லூரியின் நிர்வாகிப் பதவியை வகித்துவந்தார்; பின்பு சமயாசார சாஸ்திரத்தின் நுட்பங்களைத் தெளிவுறப் பயின்று, அதிலும் நல்ல புலமை பெற்ருர்; இறுதியில் கி. பி. 1709-ஆம் ஆண்டில் சமய குருவாஞர். இவர் கிறித்துவ மதத்தில் கொண்டுள்ள பற்றையும், சமயப் பணியாற்றுவதில் அன்ஞருக்கிருக்கும் தீவிர ஆர்வத்தையுங் கண்ட ரோமாபுரிக் கத்தோலிக்கக் குருமார்கள் உவப்புற்று, அயல்நாடுகளில் சமயப் பணி புரிவதற்குரிய தகுதி

வாய்ந்தவர்களுள் வீரமா முனிவரையும் ஒருவராகத் தேர்ந்தெடுத்தார்கள். கரும்பு தின்னக் கூலி கிடைத்தாற்போன்று கிறித்துவ மதத்தைப் பிறநாட்டு மக்களிடம் பரவச்செய்ய இரவும் பகலும் சிந்தித்தவாறு இருந்த வீரமா முனிவர், குருமார்களின் கருத்தை அறிந்ததும், திசை கண்ட மாலுமியைப் போன்று மன மகிழ்ச்சியுற்று, சமயப் பணி புரியும் அந்நன்னாளை ஆவலுடன் எதிர்நோக்கிக்கொண்டிருந்தார். அப்பொழுது வீரமா முனிவர்க்கு வயது முப்பது.

## தமிழ்நாடு அடைதல்

கி. பி. 1710-ஆம் ஆண்டு வீரமா முனிவர் தம் தாய்நாடாகிய இத்தாலி தேசத்திலிருந்து புறப்பட்டுப் போர்த்துகீசியக் கப்பலில் இந்தியாவிற்குப் புறப்பட்டார்; செப்டம்பர் மாதம் போர்த்துகீசிய நாடாகிய கோவாத் துறைமுகத்தை யடைந்தார். அவ்வாண்டில் ரோமக் கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து சமயத் தொண்டாற்றும்பொருட்டுத் தமிழ்நாட்டிற்கு வந்த சமய குருமார்களில் முதன்முதலாக வந்தவர் வீரமா முனிவரே யாவார்; அங்கிருந்து கொச்சித் துறைமுகத்தை யடைந்து, கப்பலினின்றும் இறங்கினர்; அங்குச் சில நாட்கள் ஓய்வு எடுத்துக்கொண்ட பின்பு கடற்கரையோரமாகவே யாத்திரை செய்துகொண்டே அம்பலக்காடு என்னும் இடத்தை அடைந்தார். மதுரைக் கத்தோலிக்கத் திருச்சபையைச் சேர்ந்த வீரமா முனிவர் கி. பி. 1711-ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த புதுப்பட்டி, குருக்கல்பட்டி முதலிய இடங்களில் சில தினங்கள்

இருந்தார்; பின்பு அங்கிருந்து புள்ளுகாட்டுவாலேரி என்னும் இடத்திற்குச் சென்றார். இவ்விடத்தில் இவர்க்குமுன் தம் பதவியிலிருந்து விலகிய சேவியர் போர்கீஸ் என்னும் பாதிரியார் தம் சமயப் பணியின் அடையாளமாகத் தேவாலயம் ஒன்றைத் தோற்று விக்க, கட்டடம் நிர்மாணிக்கத் தொடங்கினர்; ஆனால், அக்கட்டடம் முற்றுப்பெறுவதற்குமுன் தம் பதவியி னின்றும் ஓய்வுபெற்றார். வீரமா முனிவர் அவர் பதவியை வகித்து, முற்றுப்பெறாத கட்டடத்தைத் தம் மேற்பார்வையில் கட்டி முடித்தார்; பின்பு அக் கட்டடத்தை நோயல் டி போர்ஸஸ் என்னும் பாதிரி யாருக்கு அளித்துவிட்டார்.

பின்பு வீரமா முனிவர் கி. பி. 1714-ஆம் ஆண்டி லிருந்து சுமார் இரண்டு ஆண்டுகள் திருநெல்வேலி ஜில்லாவில் வடக்கன்குளத்திலும், காமையநாய்க்கன் பட்டியிலும் பாதிரியாராய் இருந்து சமயப் பணியை ஆரம்பித்தார். இவ்விடங்களில்தாம் இவர் தம்மை வீரமா முனிவர் எனப் பெயர் அமைத்துக்கொண் டனர். அதுகாறும் தாம் அணிந்திருந்த கறுப்பு உடை களைக் களைந்துவிட்டு, தமிழ்த் துறவிகளைப் போன்று காவி உடைகளை உடுத்திக்கொண்டும், தலையில் வெள் ளைப் பாகை அணிந்துகொண்டும், கால்களில் மிதியடி அணிந்துகொண்டும், கையில் கோல் பிடித்துக்கொண் டும் சமயப் பணி ஆற்றிவந்தார். முனிவர் எவ்விடத் திற்குச் சென்றாலும் சீடர்கள் பலர் தம்மைச் சூழ்ந்து வரப் பல்லக்கில் அமர்ந்து செல்வார். இப்பல்லக்குப் பிரயாணம் அருகிலுள்ள பல சிற்றூர்களுக்குச் சென்று, சமயத் தொண்டு ஆற்ற இவருக்கு மிகவும்

பேருதவியா யிருந்தது. தமிழ்த் துறவிகளைப் போன்று எப்பொழுதும் தரையில் புலித் தோலாசனமிட்டு உட்கார்ந்து, தம்மைச் சூழ்ந்துள்ள மக்களுக்கும் ஏனைய சீடர்களுக்கும் சமய போதனைகள் செய்துவந்தார். தமிழ் மக்களிடையே சமயப் பணி ஆற்றுவதற்கு உறு துணையா யிருப்பது, அம்மக்களின் தாய்மொழியாகிய தமிழ் மொழி என்பதை ஊகித்தறிந்து, தமிழ் மொழியைப் பயிலத் தொடங்கினார்.

## தமிழ்நாட்டில் சமயத் தொண்டு

வீரமா முனிவர் இரண்டு தமிழ் இளைஞர்களைத் தம் இடத்தில் தொழிலாளராக அமைத்துக்கொண்டு, அவர்கள் சமைத்த உணவை ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டும் உண்டுவந்தார். முதன்முதலில் முனிவர் இந்து தர்ம சாஸ்திரங்களை நன்கு பயின்று, பல்வேறு தமிழ் நாடுகளுக்குஞ் சென்று, அவண் வாழும் மக்களின் நடையுடை பாவனைகளையும் அறிந்துகொண்டார்.

முனிவர் முதன்முதலாகத் தென்னாற்காடு ஜில்லா கோனான்குப்பம் என்னும் சிற்றூரில் தேவாலயம் ஒன்றைக் கட்டுவித்தார். முனிவர் இவண் வசித்த மக்களுக்குக் கிறித்துவ போதனைகளை உபதேசித்து, பலரைக் கிறித்தவர்களாகச் செய்தார்; ஒவ்வொருவர் இல்லத்திற்கும் சென்று, இயேசு கிறிஸ்துவின் பொன் மொழிகளை அன்புடன் போதித்து, அவர்களனைவரையும் கடவுள் வழிபாட்டில் திளைக்கச்செய்தார். மேலும், தமிழ் அணங்கு அணியும் உடையுடன், இயேசு நாதராகிய குழந்தையைக் கையிலேந்தியவண்ணம் கன்னி

மேரி அம்மையாரின் திருவுருவத்தை வரைந்து, அவ் வோவியத்தைத் தாம் ஏற்படுத்திய தேவாலயத்தில் பிரதிட்டை செய்துவைத்தார்; அவ்வம்மைக்குப் 'பெரியநாயகி அம்மாள்' என்னும் திருப்பெயரிட்டு, பதினைந்து ஸ்தோத்திரப் பாடல்களைப் பாடித் திரு விழாச் செய்தார்.

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் மழவராயன் என்னும் சிற்றரசனின் ஆளுகைக்குட்பட்டிருந்த திருக்காவலூரி லுள்ள கிறித்துவ மக்கள் மிகவும் பிறரால் துன்ப மடைந்து, மதப்பற்று அற்றவர்களா யிருந்தார்கள். சமயப் பணியையே தம் பிறவிப் பயன் எனக் கருதிய முனிவர், திருக்காவலூர் மக்களின் அஞ்ஞானத்தைப் போக்கத் திருவுளங் கொண்டு, விரைந்து அவண் சென்றார்; அங்குள்ள மக்களுக்குச் சமய போதனைகளைத் தெளிய உரைத்தனர். அவருடைய இன்சொல் போதனை களாலும், மலர்ந்த முகத்தின் பொலிவினாலும் பலர் கிறித்துவ மதத்தைத் தழுவலானார்கள். சிற்றரசன் மழவராயனும் முனிவரிடம் பேரன்புகொண்டது மன்றி, மேரியம்மைக்குத் திருக்கோயில் கட்டுதல் பொருட்டு, வேண்டிய நிலமும் ஈந்தனன். ஆண்டவ னின் திருவருளை நினைத்து உவப்புற்ற மாமுனிவர், அந்நிலத்தில் அழகிய தேவாலயம் ஒன்றைக் கட்டி முடித்தார்; பின்பு மேரியம்மையாரின் அழகிய உருவத்தை அத் தேவாலயத்தில் பிரதிட்டை செய்து, அவ்வம்மையாருக்கு 'அடைக்கல மாதா' என்னும் திருநாமமும் சூட்டினர். முனிவருக்கு அடைக்கல மாதா விடம் பூரண பக்தி இருந்தது. எனவே, அவர் மாதா ...ற்றி நெஞ்சுருகப் பல பாமாலைகளையும், கலம்

பகங்களையும் இயற்றினார். முனிவரின் மனம் உருக்கும் சமயப் போதனைகளும், அடைக்கல மாதாவின் அன்புருவமும் மக்களைக் கிறித்துவச் சமயப் பற்றில் ஆர்வமுள்ளவர்களாக ஆக்கின.

கி. பி. 1713-ஆம் ஆண்டில் வீரமா முனிவர் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள குருக்கல்பட்டி என்னும் கிராமத்திற்குச் சென்றார். இங்குள்ள மக்களில் சிலரே கிறித்துவ மதத்தைத் தழுவினர். அதுகண்ட முனிவர் மனம் புழுங்கினார்; நீர் வடித்தார். எனவே, ஒவ்வோர் இல்லத்திற்கும் அவர் சென்று, இயேசுநாதரின் சன்மார்க்க போதனைகளை அன்புருக உபதேசித்தார்; ஆங்காங்குத் தேனினுமினிய தமிழ் மொழியில் சமய நன்மார்க்கங்களைப்பற்றிய சொற்பொழிவுகளை ஆற்றினார். அன்னாரது சொற்பொழிவுகள் மக்களின் மனத்தைப் பிணித்தன. ஆகையினால், அவரது இனிய சமய விளம்பரங்களில் மயங்கிப் பலர் கிறித்துவர்களானார்கள். சுற்றுப்புறங்களிலிருந்து மக்கள், தங்கள் மனைவிமக்களுடன் கால் நடையாகவே குருக்கல்பட்டிக்கு வந்து, முனிவரின் எழில் உருவத்தைக் கண்டு வணங்கிப் பெரியாரிடம் உபதேசம் பெற்று, பேரானந்தத்துடன் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் சென்றார்கள். இவ்வாறு சிலவாண்டுகள் முனிவர் அவண் வாழ்ந்த கிறித்துவ மக்களுக்குச் சற்குருவாக இருந்து, அவர்களுக்கு நற்போதனைகள் பலவற்றைப் போதித்துவந்தார்.

## முனிவரும், சந்தா சாகிபும்

தஞ்சை ஜில்லாவில் வீரமா முனிவர் சமயப் பணி ஆற்றிக்கொண்டு வருகையில் திடீரென்று அவருக்கு ராஜ பிளவு என்னும் பெருங் கட்டி ஒன்று முதுகில் தோன்ற, அதன்காரணமாகப் படுக்கையில் நாற்பதுநாள் இருந்து மிகவும் துன்பமடைந்தார். அவ்வமயம் பக்கத்தூர்களிலிருந்து இரண்டு பாதிரிமார்கள் வந்து, முனிவரின் தினசரி அலுவல்களைக் கவனித்து, அவருக்குப் பதிலாகச் சமயப் பணி ஆற்றிவந்தனர். சில நாட்களில் முனிவர் குணமடைந்து தம் பணியை மேற்கொள்ளத் தொடங்கினார். ஆனால், மீண்டும் அக்கட்டியினால் அவர் பாதிக்கப்பட்டு, சிகிச்சையினிமித்தம் புதுச்சேரிக்குச் சென்றார். அங்குச் சில தினங்கள் இருந்து பூரண சுகமுற்றதும், புதுச்சேரியினின்றும் புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வடுகர்பட்டிக் கிராமத்திற்குச் சென்று, அங்குச் சில நாட்கள் உறைவாராயினர்.

திருச்சிராப்பள்ளியில் முனிவர் இருக்கும்பொழுது, சந்தா சாகிபு என்னும் நவாபு ஆட்சிபுரிந்துவந்தான். அவன் முனிவரின் வசீகர சொற்பொழிவுகளையும், கல்விப் புலமையையும், அறிவின் தெளிவினையுங் கண்டு, அவருடன் நட்புக்கொண்டான். முனிவர் நவாபுடன் அளவளாவும்பொருட்டு இந்துஸ்தானி, பாரசீகம் முதலிய மொழிகளைப் பயின்றார்; பின்பு சந்தா சாகிபைக் கண்டு பேசி, தம் பொன்மொழிகளால் நவாபை வசீகரித்தார். அப்பொன்னுரைகளைக் கேட்டு இன்புற்ற சந்தா சாகிபு, அவரது அறிவின் திறத்தை மெச்சி, அவரைத் தன் திவானாக நியமித்துக்கொண்

டான்; மேலும், திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள போக்காலம், மால்வே, அரசூர், நல்லூர் முதலிய நான்கு சிற்றூர்களை முனிவருக்கு இனமாகத் தந்து, தந்தப் பல்லக்கு ஒன்றையும் ஈந்தான். இந்நான்கு சிற்றூர்களும் ஒவ்வோர் ஆண்டிலும் 12,000 ரூபாய் வருமானம் தருபவை. சந்தா சாகிபு வீரமா முனிவர்க்கு இஸ்மாத்தி, சந்நியாசி என்னும் இரு பட்டங்களைத் தந்து, அவரை மேன்மைப்படுத்தினான்.

சந்தா சாகிபின் ஆட்சியில் வீரமா முனிவர் அமைதியாகச் சமயப் பணி ஆற்றிவந்தார். ஆனால், இவ்வமைதிக்கும் ஊறு ஒன்று விளைந்தது. கி. பி. 1740-ஆம் ஆண்டில் மகாராஷ்டிரத் தலைவன் ரகோஜி பான்ஸ்லே என்பவன் சந்தா சாகிபுடன் போர்தொடுத்தான். இறுதியில் கி. பி. 1742-ஆம் ஆண்டு சந்தா சாகிபு, ரகோஜீ பான்ஸ்லேயிடம் சரண்புகுந்தான். இம் முற்றுகையின் போது முனிவர் தூத்துக்குடித் துறைமுகத்திற்குச் சென்று, மணப்பாடு என்னும் ஊரில் தங்கி, சமயத் தொண்டு புரிந்துவந்தார். அப்பொழுது முனிவருக்கு வயது அறுபத்து இரண்டு.

## இறுதிக் காலம்

வீரமா முனிவர் தம் 66-ஆம் வயதில் சேர நாட்டைச் சேர்ந்த அம்பலக்காடு என்னும் ஊரை அடைந்தார். அவர் அங்குள்ள கல்லூரியின் மேற்பார்வையாளர் பதவியைத் திறம்பட வகித்துவந்தார்; அப்பதவியிலிருந்தவாறே பல உரைநடை நூல்களையும், செய்யுள் நூல்களையும் இயற்றினார். இறுதியில்

தைரியநாதர் ரெவரெண்டு பெஸ்கி என வழங்கும் வீரமா முனிவர் கி. பி. 1747-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ஆம் தேதி மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகு வாழ்வை அடைந்தனர்.

## தமிழ்ப் பணியும், தேம்பாவணி நூல் மாண்பும்

வீரமா முனிவர் தமிழ் மொழியைப் பயின்று, புலமை பெற்றதுடன் நிற்காமல், அம்மொழியில் பல செய்யுள் நூல்களையும், உரைநடை நூல்களையும், இலக்கண நூல்களையும், அகராதிகளையும் இயற்றித் தமிழ் அன்னையை அலங்கரித்துள்ளார். அவைகளுள் செய்யுள் வடிவில் அமைந்தவை: தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாளம்மானை, திருப்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் மூலமும் உரையும், தேம்பா மாலை, அடைக்கல மாலை என்பன. வேத விளக்கம், வாமன் சரித்திரம், பேதக மறுத்தல், வேதியர் ஒழுக்கம், ஞானவிளக்கம், பரமார்த்த குரு கதை, திருச்சபைக் கணிதம் முதலியன உரைநடை நூல்கள்.

தொன்னூல் விளக்கம், கொடுந்தமிழ் இலக்கணம் என்பன இலக்கண நூல்கள். அகராதிகள்: சதுரகராதி, தமிழ்-இலத்தீன் அகராதி என்பன.

வீரமா முனிவர் நல்ல நாவன்மை படைத்தவர். அங்ஙனம் நாவன்மை படைத்துப் பற்பல சொற்பொழிவுகளை அவையஞ்சாது, மெய்விதிராது ஆற்றி வந்தமையால்தான் தைரியநாதர் என்னும் பெயரையும் பெற்றனர். நாவன்மை படைத்ததுபோலவே, பா வியற்றும் பாவன்மையும் படைத்தவர் என்பது

அவர் யாத்துள்ள காவியங்களாலும், தோத்திரப் பாடல்களாலும் அறிகிறோம். அக்கவிகள் சொல்லழகு பொருளழகு நிரம்பப்பெற்றுள்ளன; படித்தறகும் இன்பந் தருவனவாக உள்ளன. இவர் மேற்கு நாட்டினராக இருந்து, தமிழ் அறிவு பெற்றுத் தமிழ்மொழியில் பெருங் காவியமாகத் தேம்பாவணியை இயற்றியுள்ளார். இந்நூலின் நாட்டு வளம், நகர் வளம் கூறும் பகுதிகள் சிந்தாமணி, இராமாயணம் முதலிய நூற்போக்கிற் கியைய அமைந்துள்ளன. அவற்றிற்கெல்லாம் ஈண்டு எடுத்துக்காட்டுக்கள் எடுத்துக் காட்டப்பெறின், பரந்துபோகும். ஆதலின், ஒரு பாவின் நயத்தினை மட்டும் ஈண்டு விளக்கிக் காட்டி, "ஏனைய இவரது பாடல்களையும் இம்முறையில் அறிந்து பயனுறுக" என அப்பணியில் உங்களை விட்டுவிடுகிறேன்.

ஊக்கஏர் பூட்டி நோன்பால் உடல்செறு உழுது நன்றி
வீக்கமேல் விரதச் செந்நெல் வித்திநல் ஒழுக்க நீரைப்
போக்கநீ டிறைத்துத் தன்ஐம் பொறியெனும் வேலிகாக்கின்,
ஆக்கமாய்ப் பெரும்வீட் டின்பம் அண்டமேல் விளைக்கும்தானே.

என்பது தேம்பாவணியில் ஒரு செய்யுள்.

ஈண்டு உழவுத் தொழிலின் நடைமுறைகளையும், அதன் பயனையும் புலவர்ஏறு நன்கு உருவகப்படுத்தியுள்ளார். இவர் மத போதகராய் வெளிநாட்டில் பிறந்தவராய் இருந்தும் தமிழ்நாட்டில் தலைசிறந்த

தொழிலாகிய உழவுத்தொழிலின் சிறப்பையும் எவ்வளவு கூர்ந்து கவனித்துள்ளார் என்பதை நாம் இச்செய்யுளிலிருந்து உணரலாம். உழவுத்தொழிலோடு மோட்ச இன்பத்தை இயைத்துப் பேசுகிறார் புலவர். மோட்சம் என்பது அடைதற்கரிது, அணுகுதற்கரிது, சிந்தித்தற்கரிது என்று நினைக்கவேண்டா! ஒழுக வேண்டிய முறையில், நடக்கவேண்டிய நடையில் நடந்தால், அவ்வரிய வீட்டின்பத்தையும் எளிதில் அடையலாம் என்பதை இப்பாடலால் அறிவுறுத்துகிறார் இவ்வான்றவர்.

ஊக்கத்தை ஏர் என்றார்; உடலை வயல் என்றார்; விரதத்தைச் செந்நெல் விதை யென்றார்; ஒழுக்கத்தை நீர் என்றார்; ஐம்பொறிகளை வேலி என்றார். இப்படி உருவகப்படுத்தி உரைத்த அழகை இப்பாட்டில் சுவைப்பீர்களாக. ஆகவே, புலவர் கருத்து ஆக்கமாகிய பேரின்ப வீட்டினை விரும்பின், ஊக்கம் வேண்டும்; விரதங்களை மேற்கொள்ளவேண்டும்; ஒழுக்கத்தை யுடையவராய் இருத்தல்வேண்டும்; ஐம்புலன்களை அவற்றின் போக்கில் போகவிடாமல் காத்துக்கொள்ள வேண்டும் என்பனவற்றை எவ்வளவு இனிமையாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார் என்பதை ஓர்ந்து உணர்வீர்களாக!